
நன்றி - நூலகத்திட்டம்

சரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி.

இதழ்-169 | ஏப்ரல் 05 - ஏப்ரல் 28, 1999 | விலை 10.00




## இன்றைய சாத்தானின் அன்றைய வேதம்!

---

## அமெரிக்காவின் கறைபடிந்த வரலாறு !

## யாழ்: தொடரும் துயரங்கள் !



## குண்டை விடவும் சக்தி வாய்ந்தது மக்கள் போராட்டம்...

நன்றி - நூலகத்திட்டம்



## கண்காணிப்பு அரசியல் !

தேர்தல வன்செயல்களைக் கண்காணிக்கவென கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தலைமையிலான தேர்தல் கண்காணிப்புக்கான சுயாதீன கமிட்டி(CMEV) செயற்பட்டு வருகின்றது. சுமார் 75 ஊழியர்களுடன் செயற்பட்டு வரும் இந்த நிலையம் விடுத்துள்ள கடைசியாகக் கிடைத்த அறிவிப்பின்படி இதுவரை 1117 தேர்தல் வன்முறைகள் நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால், பொ.ஐ.முவினரால் உருவாக்கப்பட்ட இன்னொரு தேர்தல் கண்காணிப்பு இயக்கமோ இந்த கண்காணிப்புக் கமிட்டி திட்டமிட்ட வகையில் சிறுசிறு சம்பவங்களையும் பெரிதுபடுத்தி அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முனைகின்றது என்று குற்றம் சாட்டியுள்ளது. இவர்களது கண்காணிப்பில் இதுவரை நடந்த சம்பவங்கள் இருநூறையும் தாண்டவில்லையாம்.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதில் கூட தமது கட்சிக்குச் சார்பான விதத்தில் 'கண்காணிக்க' ஆட்களை நியமித்துச் செயற்படுகின்றது ஆளுங்கட்சி. உண்மையில் சுயாதீன கண்காணிப்புக் கமிட்டியின் தகவல்கள் தவறென்றால் அவற்றைச் சுட்டிக்காட்டுவது அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பது என்ற நடைமுறைகளை விட்டு விட்டு ஏன் அதற்கெதிராக பத்திரிகை அறிக்கைகளை விடுவதில் அதிக அக்கறை காட்டுகின்றது பொ.ஐ.முவின் கண்காணிப்புக் குழு என்று கேள்வி எழுப்புகின்றார் பாக்கியசோதி சரவணமுத்து.

தேர்தல் கண்காணிப்பு வேலைகளையும் கூட ஒரு கட்சி அரசியல் வேலை என்று அவர்கள் கருதுகின்றார்களோ என்னவோ?

## நஞ்சு குடிக்க மறந்த வாசு!

மேல் மாகாண சபை தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்கள் சிலவற்றை கொழும்பில் காணும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவற்றில் ஒன்று கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன தலைமையிலான புதிய இடது சாரி முன்னணியின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம். கொழும்பு ஜிந்துப்பிட்டியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கலாநிதி விக்கிரமபாகு ஆற்றிய உரையில் தெரிவிக்கப்பட்ட இரு சுவையான பகுதிகள் இவை:

'அமைச்சர் ரத்வத்தைக்கு மூன்று பிள்ளைகள். யானைக்குட்டிகள் மாதிரி மூவர். மூவரையும் ஒரு வாகனத்தில் ஏற்றினால் போதும். அந்த வாகனத்தில் வேறு யாரும் ஏற முடியாது. பாரம் சரியாகிவிடும்.'

'யாழ்ப்பாணத்தில் பிரபாகரனுடன் சண்டை போட சிங்கள கிராமங்களிலிருந்து துட்டகைமுனுகள், கஜபாகுக்கள், பராக்கிரம பாகுக்கள் உருவாகி வருகிறார்கள். இந்த மாவீரர்கள் இப்போதெல்லாம் ஏழைக் குடும்பங்களில் மட்டும்தான் பிறக்கிறார்கள். ஆனால் அனுருத்தை போன்ற வசதியான குடும்பங்களில் பிறப்பதில்லை!'

'அமைச்சர் ஆயிரக்கணக்கில் ஏழை இளைஞர்களை அங்கு கொண்டு போய் சாகடிக்கிறார். ஆனால் தமது யானைக்குட்டிகளை அனுப்புவது பற்றி அவர் யோசிப்பதில்லை. துட்டகைமுனுக்கள் ஏழைக்குடும்பங்களில் மட்டும்தான் பிறப்பார்கள் என்பதால் தான் அவர் இப்படிச் செய்கிறார் போலும்!

அடுத்தது வாசுதேவா பற்றியது:

'1994ல் பொ.ஐ.முவுடன் சேர்ந்து தேர்தலில் தான் நிற்கப் போவதாக வாசு என்னிடம் சொன்னார். சந்திரிகா இந்த நாட்டை தலைகீழாக மாற்றிக்காட்டுவார் என்று சத்தியம் செய்தார். ஆனால் நான் அதை ஏற்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் எண்ணப்படி அரசியல் களத்தில் இறங்கியுள்ள சந்திரிகாவால் சமாதானமும் வராது. ஜனநாயகமும் வராது என்று கூறினேன். வாசு நம்பவில்லை. இல்லை, தான் சந்திரிகாவுடன் சேர்ந்து தேர்தலில் நிற்கப்போவதாக ஒற்றைக்காலில் நின்றார். ஒன்றரை வருட காலத்துள் இந்த நாட்டில் பெரியதொரு மாற்றம் நடக்கப்போகிறது. அப்படி ஒரு மாற்றம் நடக்காவிட்டால் நான் நஞ்சு குடிக்கவும் தயார் என்று அவர் சவால் விட்டார். எமது கட்சியை விட்டுப்பிரிந்து அவர்களுடன் போய் தேர்தலில் நின்றார்.'

'ஆண்டுகள் நான்கு கடந்துவிட்டன. சமாதானமும் வரவில்லை. ஜனநாயகமும் வரவில்லை. யுத்தம் மட்டும் தீவிரமடைந்திருக்கிறது! வாசுவும் நஞ்சு குடிக்கவில்லை. ஆனால் பாவம் வாசு. அவர் நஞ்சு குடிக்கத் தேவையில்லை. அவரால் இன்னமும் ஏதாவது மக்களுக்காக செய்ய முடியும். ....ஆனால், அந்த வாசுவே பொ.ஐ.முவுக்கு வாக்களிக்க வேண்டாம். பு.இ.மு வுக்கு வாக்களியுங்கள் என்று கூறியுள்ளார்.'

## அவர்கள் தந்த பரிசு !

இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று எந்தத் தமிழ் அரசியல் கட்சிகட்கும் சொல்ல முடியவில்லையாம்.

தமிழ் மக்கள் தாம் விரும்பிய கட்சிக்கு வாக்களிக்கட்டும் என்று அறிவித்துள்ளார்கள் அவர்கள்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை கணக்கிலெடுத்து அவற்றை தீர்க்கும் நோக்குடன் ஐ.தே.கவோ, பொ.ஐ.முவோ செயற்படாததால் யாருக்கு வாக்களிப்பது என்று 'வழிகாட்ட' அவர்களுக்கு முடியவில்லையாம்.

அது சரி, மக்களுக்கு வழிகாட்டும் ஆளுமையையோ தார்மீக பலத்தையோ இந்தக் கட்சிகள் எப்போது தான் கொண்டிருந்தன? த.வி.கூ தனது ஆளுமையை இழந்து இரண்டு தசாப்தங்கள் போய் விட்டன.

மற்றக் கட்சிகள் வழிகாட்டுவது என்றால் மிரட்டுவது என்று தானே அர்த்தம்?

மக்கள் தங்கள் விருப்பப்படி செயற்படட்டும் என்ற ஒரு அரிய 'ஜனநாயக உரிமையை' இப்போதாவது தெரிவித்திருப்பதற்காக அவர்களைப் பாராட்டுவோம்.

## புலிக்குப் பிறந்தது...?

பண்டாரநாயக்காவின் புகழ் பெற்ற '24 மணி நேரம்' சவால் இலங்கை வரலாற்றில் மறக்க முடியாத ஒன்றாகும்.

'24 மணி நேரத்தில் தனிச் சிங்கள சட்டத்தை கொண்டு வருவேன்'

'24 மணி நேரத்தில் வெள்ளையரை வெளியேற்றுவேன்'

24 மணி நேரத்தில் தேசிய உடைமையாக்குவேன்.....'

ஆம். இந்த 24 மணிநேரச் சவால்களை அன்று அவர் தேர்தல் பழக்கங்களாக முன்வைத்து பிரச்சாரம் செய்தார். புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்பார்கள்.

மகள் சந்திரிகாவும் அந்த 24 மணி நேரக் கதையை கதைக்கத் தொடங்கி விட்டார்.

ஆனால் ஒரு சின்ன வித்தியாசம். அவர் செய்யப் போவதாக சவால் விட்டார். அதில் பலவற்றை அவர் செய்தும் காட்டியுள்ளார்!

ஆனால் அம்மணி செய்து விட்டதாக கூறிச் சவால் விடுகிறார். 24 மணி நேரத்தில் மக்களுடைய சகல உரிமைகளையும் தாம் பெற்றுக் கொடுத்து விட்டதாக கூறுகிறார் அவர்.

நம்பினால் நம்புங்கள். ஊவா மாகாண பிரசாரக் கூட்டத்தில் அவர் கூறிய கருத்து இது!

அவர் ஆட்சிக்கு வந்து 24 மணித்தியாலங்களில் எமக்கு சகல உரிமைகளும் கிடைத்து விட்டன. நாங்கள் தான் அதை வேண்டாம் என்று அவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டோம். அது சரி, நமக்கெல்லாம் எதற்குத் தான் உரிமை?



## என்றும் இனியவை !

ரணில் போன்றோரின் பணத்துக்காக மாரடிக்கும் சுதந்திர ஊடக இயக்கம் அன்று எங்கு இருந்தது? என ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க கேட்டுள்ளார். பொது மக்களின் மேடைகளில் சுயாதீனமான கருத்துக்களைத் தெரிவிக்கும் தொடர்பூடகவியலாளர்களை இழிவுபடுத்துவதே ஜனாதிபதியின் பொழுதுபோக்கு என இப்போது எவரும் அறிவர். அவர் கேகாலையில் ஆற்றிய உரையை லங்காதீப பத்திரிகை இவ்வாறு அறிக்கையிடுகிறது.

'இவர்கள் (ரணில்போன்றோர்) பணம் கொடுத்ததனால் பணக்காரப் பெரும் புள்ளிகளான தொடர்பூடகவியலாளர்கள் சிலர் உள்ளனர். சுதந்திர ஊடக இயக்கம் என்று ஒன்றும் உள்ளது. ரணில் போன்றோரிடம் சம்பளம் பெற்றுக் கொண்டு மாரடிக்கும் இந்த இளைஞர்கள் அன்று எங்கிருந்தனர்?.

- (லங்காதீப - 1999.03.26) -

அன்று சுதந்திர ஊடக இயக்கம் எங்கிருந்தது என ஜனாதிபதிக்கு நினைவுபடுத்துவது எமது கடமை என நாம் நினைக்கின்றோம். மேலே காணப்படும் படத்தைப் பாருங்கள், சுதந்திர ஊடக இயக்கம் மேடையில் இருக்கையில், தனது சகபாடிகளுடன் சபையினருடன் முன் வரிசையில் தமது கைகள் இரண்டையும் தூக்கியபடி நிற்பவர்கள் யார்?. தேச விடுதலை மக்கள் கட்சியின் காலஞ்சென்ற முன்னாள் தலைவர் நிஹால் பெரேராவுடனும், சாட்சாத் இன்றைய ஜனாதிபதியான சந்திரிகா குமாரணதுங்கதான் அதில் நிற்பவர். அவரது அமைச்சர்களான எஸ். பீ. திசாநாயக்க, மங்கள சமரவீர ஆகியோருடன் கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற சுதந்திர ஊடக இயக்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தொடர்பூடகவியலாளர்களின் கொள்கைப் பிரகடனத்தைச் சபையினருடன் சேர்ந்து தமது கைகளையும் தூக்கி அங்கீகரிக்கின்றார் ஜனாதிபதி. ஆனால் அவர் இன்று அதை வசதியாக மறந்துவிட்டார்.

இன்று அதிகாரத்தில் உள்ளவர்கள், அன்று ஐ. தே. க. பயங்கரவாதம் , ஊழல் தொடர்பாக ஆழ்ந்த உறக்கத்திலேயே இருந்தனர். சிலர் அரசியலிலிருந்து மட்டுமன்றி, நாட்டை விட்டே தப்பியோடினர். அந்த நித்திரையிலிருந்து அவர்களைச் சுதந்திர ஊடக இயக்கமும், மாற்றுப் பத்திரிகைகளுமே மீட்டெடுத்தன. இது தொடர்பாகத் தொடர்பூடகவியலாளர்களுக்கே முதல் கௌரவம் உரித்துடையதாகவேண்டும். அன்று நிலவிய ஐ. தே. க. பயங்கரவாதத்துக்கும், ஊழல்களுக்கும் எதிராக இருந்த இயக்கத்தின் முக்கிய பாத்திரத்தை ஆற்றியது சுதந்திர ஊடக இயக்கமேயாகும்.

ஜனாதிபதிக்கு இதெல்லாம் மறந்து போனமை ஆச்சரியத்துக்குரிய விடயமல்ல. தவறுதலாகவாவது அவரது கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும் ஓரிருவராவது இருந்தால் அவர்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுவதற்காகவே இந்த நிழற் படமும், குறிப்பும் வெளியிடப்படுகிறது.

- எஸ். எஸ். -

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்: அத்து மீறும் அரசாங்கம்!

மார்ச் 4ம் திகதி சமூக சேவைகள் அமைச்சினால் ஒரு புதிய இடைக்கால முகாமைத்துவ கமிட்டி நியமிக்கப்பட்து. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊழல், தவறான முகாமைத்துவம் என்பன தொடர்பான விசாரணைகளை நடாத்தும் வரையும் அதை நிர்வகிக்கும் பொறுப்பை இந்த கமிட்டி பொறுப்பெடுத்துள்ளது.

இந்த பொ.ஐ.மு அரசாங்கம் சமூக சேவைகள் அமைப்புக்கள் தொடர்பாக சட்டக்கோவையை மீளுருவாக்கம் செய்தபோது அதன் முதலாவது தாக்குதல் இலக்காக இருந்தது இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தான். உண்மையில் ஏற்கெனவே ஒரு இடைக்கால முகாமைத்துவக் கமிட்டி தனது விசாரணைகளை நடாத்தத் தொடங்கியிருந்தது. தவிரவும் இதற்கு உறுப்பினர்களை அப்போதைய சமூகசேவைகள் அமைச்சர் பௌசி நியமித்தும் இருந்தார். ஆனால் இப்போது புதிதாக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தொடர்பாக பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வந்துள்ளன. அதன் நிதி முகாமைத்துவம் தொடர்பாகவே பிரதான கேள்விகள் எழுப்பப்பட்டு வந்தன என்ற போதும் வன்னியின் 'விடுவிக்கப்படாத' பிரதேசங்களில் இந்த அமைப்புக்கும் புலிகளுக்கும் இடையிலான உறவு பற்றியும் கேள்விகள் எழுப்பப்பட்டு வந்துள்ளன. வன்னிக்கு ஐ.தே.கவை சேர்ந்த பா.உ டொக்டர் ஜயலத் ஜயவர்தன சென்று வந்ததன் பின்னர் இந்த விவகாரம் ஒரு பெரும் சர்ச்சையாக மாறிவிட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் இங்கு கடந்த அரை நூற்றாண்டுகட்கு மேலாக இயங்கி வரும் அமைப்பாகும். இயற்கையால் ஏற்படும் அனர்த்தங்களை காரணமாகப் பாதிப்புற்ற மக்களுக்கு நிவாரண உதவிகளை செய்வதில் அது பெரும் பங்காற்றி வந்துள்ளது. அண்மைக் காலங்களில் வட கிழக்கு மாகாணங்களில் நிவாரணம் மற்றும் புனருத்தாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஒரு சில தென்பகுதியைச் சார்ந்த ஸ்தாபனங்களில் ஒன்றாக இதுவும் இயங்கி வந்தது. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வன்னி மாவட்டத்தில் செய்யப்பட்டு வரும் நடவடிக்கைகள், உணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம் காரணமாக மிகவும் சிக்கலானவையாக அமைந்திருந்தன.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊழல், மோசடி போன்றவை எவ்வளவு தான் மோசமானவையாக இருந்தாலும், அவற்றுள் தான் தோன்றித்தனமாக சமூக சேவைகள் அமைச்சு மூக்கை நுழைப்பது எந்தவிதத்திலும் அனுமதிக்கப்பட முடியாதது. இடைக்கால முகாமைத்துவ கமிட்டி என்ற பேரில் ஏற்கெனவே இருந்த தொண்டர் ஸ்தாபன நிர்வாகிகளை நீக்கி விட்டு அவர்களுக்குப் பதிலாக அமைச்சர் தான் விரும்பிய நபர்களை நியமிப்பது என்பது பெரும் அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கே இடமளிக்கும். ஏற்கெனவே இவ்வாறான சம்பவங்கள் நடந்துள்ளன. இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் பெரும் பணத்தை தமக்கு எடுத்துக் கொண்டது, அலுவலக வாகனங்களை தமது சொந்த தேவைகட்கு பாவித்தது, ஏற்கெனவே நீண்ட காலமாக வேலை செய்தவர்கட்கு சேர வேண்டிய புலமைப்பரிசில் வாய்ப்புக்களை தமது குடும்ப அங்கத்தவர்கட்கு வழங்கியது என்று பல குற்றச்சாட்டுக்கள் இவ்வாறு நியமிக்கப்பட்டவர்கள் மீது உள்ளன.

இப்போது புதிதாக ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டுள்ளது.

'அரசாங்கத்தின், அரசசார்பற்ற நிறுவனங்களை கட்டுப்படுத்தும் சட்ட மூலம் உண்மையில் தேசிய சர்வதேசிய சட்டங்களின் கீழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அமைப்பாகும் உரிமையை மீறுகின்ற ஒரு செயலாகும். இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் மீதான அத்துமீறல் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். சுட்டிக் காண்பிக்கப்பட வேண்டிய ஒரு நடவடிக்கையாகும். இவ்வாறு மோர்ஜ் தனது ' மோர்ஜ் செய்தி இதழில்' (இதழ் 6/6) எழுதியுள்ளது.

நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு குண்டை விடவும் சக்தி வாய்ந்தது மக்களின் ஒன்று சேர்ந்த போராட்டம்!

## விக்கிரமபாகு கருணாரத்ன - புதிய இடதுசாரி முன்னணி



**புதிய இடதுசாரி முன்னணி இந்தத் தேர்தலில் குதித்திருப்பதற்கான பிரதான காரணம் என்ன?**

நாங்கள் இத்தேர்தலில் போட்டியிடுவதற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருக்கின்றன.

முதலாவது யுத்தத்திற்கெதிராகவும், தமிழ் மக்களின் உரிமைகளுக்கு ஆதரவாகவும் பிரச்சாரமொன்றை இம் மாகாண சபைத் தேர்தலைப் பாவித்து முன்னெடுப்பது. அத்தோடு திறந்த பொருளாதாரக் கொள்கைக்கெதிராகவும் உலக வங்கியின் கொள்கைகளுக்கெதிராகவும் பிரச்சாரம் செய்வதோடு ஜனநாயகத்திற்காகவும் குரல் கொடுக்க இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவது.

மறுபுறத்தில் நாங்கள் இம் மாகாண சபைத் தேர்தலில் தெரிவு செய்யப்படுவோமானால் மாகாணசபைக்கான அதிகாரங்களை அதிகரிப்பதற்காகப் போராடுவோம். அத்தோடு மொழிக்கொள்கையை இம் மாகாண சபைகளில் அமுல்படுத்துவோம். கூடவே சமூக நீதிக்காகவும் போராடுவோம். அது சமூக நலத்துறை, சமூக சேவைகள், தொழிலிலிருந்து தூக்கி வீசப்பட்டவர்களுக்கு ஏதாவது ஒரு உதவித்தொகை, தொழிற்றுறைத் தொழிலாளர்களின் வசதி வாய்ப்புக்கள், விடுமுறைகள் என்பவற்றைப் பாதுகாக்க முனைவதோடு தற்போது அபிவிருத்தி என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சூழலைப் பாதிப்பதால் சூழல் பாதுகாப்பில் அதிக அக்கறை கொள்வோம்.மற்றும் பெண்கள் குறிப்பாக உழைக்கும் பெண்களுடைய பிரச்சினைகள் தொடர்பாகவும் கூடிய கவனத்தைச் செலுத்துவோம்.

**இப்புதிய இடதுசாரி முன்னணியில் எந்தெந்தக் கட்சிகள் இணைந்தள்ளன?**

ஆரம்பத்தில் நவசமசமாஜக்கட்சி, பின்னர் புதிய ஜனநாயகக் கட்சி, தியச கல்வி வட்டம், ஐக்கிய சோஷலிசக் கட்சி ஆகிய நான்கு பிரதான அமைப்புக்கள் இதில் இணைந்துள்ளன.

**இக்கூட்டில் ஜே.வி. பியையும் இணைத்துக் கொள்ளப் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டதாகக் கூறப்பட்ட போதும் அது இதில் இணைந்து கொள்ளாமல் தனித்துப் போட்டியிடுகிறது. வில்லை. இது இடதுசாரிகளுக்குக் கிடைக்கும் வாக்குகளைப் பலவீனப்படுத்தாதா?**

ஜே.வி.பி ஆரம்பத்தில் தேசப்பிரேமி ஜனதா வியாபாரய போன்ற அமைப்புகளுடனும், சம்பிக் ரணவக, நளின் டி சில்வா, திணேஸ் குணவர்தன. பந்துல குணவர்த்தன போன்ற இனவாத அமைப்புக்களுடனும், நபர்களுடனும் தான் தொடர்பைக் கொண்டிருந்தது. தற்போது அத் தொடர்புகளிலிருந்து அது தன்னை விடுவித்துக் கொண்டுள்ளது. அவர்களுடன் முரண்பட்டுள்ளது. எங்களுடன் மிக நெருக்கமான உறவுகளைப் பேணி வருகிறது. நாங்கள் பொதுவான பல வேலைகளில் இணைந்து செயற்பட்டு வருகிறோம். ஆனால் தேர்தலுக்கான வேலைகளில் ஆறு மாதங்களுக்கு முன்னர் இறங்கிய போது அந்த நேரத்தில் எங்களுக்கிடையில் போதுமான புரிந்துணர்வு இருக்கவில்லை. ஆகவே தேர்தலில் இணைந்து போட்டியிடுவது பற்றிப் பேச எங்களுக்கு வாய்ப்பிருக்கவில்லை.

ஆனால் எதிர்வரும் காலங்களில் அதற்கான வாய்ப்புகள் ஏற்படலாம்.

**வடமேல் மாகாண சபையில் நிகழ்ந்தது போல இந்தமாகாணசபைத் தேர்தல்களிலும் வன்முறைகள் நிகழ வாய்ப்புண்டு என்று கருதுகிறீர்களா? அவ்வாறானால் அதனைத் தவிர்க்க என்ன வழிகளை மேற்கொண்டுள்ளீர்கள்?**

வடமேல் மாகாணசபைத் தேர்தலின் போது எங்கள் மீது வன்முறை பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. நாங்களும் வன்முறையில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டோம். தனிப்பட எம்மீது தாக்கினார்கள். ஆனால் நாங்கள் வன்முறையில் இறங்கவில்லை. விளைவு நான் தாக்கப்பட்ட போது ஐந்து முதலமைச்சர்கள் என்னைப் பார்வையிட வந்தார்கள். நாங்கள் உடனடியாக சர்வதேச ரீதியாகவும் உள்நாட்டிலும் வன்முறைக் கெதிரான பிரச்சாரத்தை முன்னெடுத்தோம்.

இது அரசு தனது முடிவை மாற்றுவதற்குக் காரணமாகியிருக்கிறது. அரசாங்கம் அத்தேர்தலுக்குப் பின்னர் ஒரு வட்டமேசை மாநாட்டுக்கு அனைத்து அரசியல் கட்சிகளையும் அழைத்திருந்தது.

ஜனாதிபதி அத்தேர்தலில் வன்முறைகள் இடம் பெற்றதை ஒப்புக் கொண்டார். நாங்கள் நம்புகிறோம். இது அரசாங்கத்துக்கு பலத்த நெருக்கடியைக் கொடுத்திருக்கிறது. அரசாங்கம் உடனடியாக மறுபரிசீலனை செய்ய வேண்டியிருந்தது. மக்கள் மத்தியில் இவை தொடர்பான அக்கறையும் அறிவும் வளரத் தொடங்கி விட்டுள்ளது. இதற்கு தொடர்பு சாதனங்களும் பெரிதும் உதவியுள்ளன. ஆகவே நாங்கள் நம்புகிறோம்: குறிப்பாக மேல் மாகாண சபையில் இவ்வாறான வன்முறைகள் இடம் பெறும்வாய்ப்பு மிகக் குறைவு என்றே. மற்றைய மாகாணங்களில் சில வேளைகளில் அது இடம்பெறலாம். என்னால் உறுதிப்படுத்த முடியாது வன்முறைகள் இடம்பெறாது என்று. ஆனால் மக்கள் மத்தியில் வன்முறைக்கெதிரான ஈடுபாடும், அக்கறையும் அதிகரித்திருக்கிறது என்றே சொல்ல முடியும்.

**வடமேல் மாகாண சபைத் தேர்தல் மிகுந்த வன்முறையுடன் நடந்து முடிந்த தேர்தல் என்பது அனைவரும் அறிந்த விடயம். ஆனால் அத்தேர்தல் ரத்துச் செய்யப்படட்டு மீளத் தேர்தல் நடாத்தப்படவில்லை. இது தொடர்பாக புதிய இடதுசாரி முன்னணி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?**

நாங்கள் இந்த விடயத்தைத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம். சந்திரிகா சொல்கிறார் தனக்கு இதனைக் கலைப்பதற்கான அதிகாரம் இல்லையென்று. நாங்கள் சொல்கிறோம்: முதலமைச்சரை அம் மாகாண சபையைக் கலைத்து விடுமாறு சந்திரிகாவைக் கேட்கச் சொல்லி. 212 இடங்களில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக தேர்தல் ஆணையாளர் ஒப்புக் கொண்டிருக்கிறார். இது போதுமானது அச்சபையைக் கலைப்பதற்கு. அதேவேளை இது தொடர்பாக பலவழக்குகள் போடப்பட்டுள்ளன. அவை நீதிமன்றில் நிரூபிக்கப்படும் போது அது கலைக்கப்பட வேண்டி நேரிடும். இது தற்போது சுப்ரீம் கோர்ட்டின் கீழ் உள்ளது.

**மேல் மாகாண சபைத் தேர்தலைப் பொறுத்தவரை அனேகமாக அனைத்துக் கட்சிகளும் தமிழ் வாக்குகளில் கூடுதலான கவனத்தைச் செலுத்துவதைக் காண முடிகின்றது. இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்?**

நான் நினைக்கிறேன் மேல்மாகாணத்தைப் பொறுத்தளவில் தமிழ் வாக்குகள் ஒரு முக்கியமான தீர்மானிக்கும் பாத்திரத்தை வகிக்கப் போகின்றன. அண்மைக்காலத்தில் யுத்தத்தின் காரணமாக பெருமளவிலான தமிழ் மக்கள் கொழும்பையும் அதனைச் சூழ்ந்த பிரதேசங்களிலும் குடியேறி இருக்கிறார்கள். இதேமாதிரியான பிரச்சினை தோட்டப் புறங்களிலும் காணப்படுகிறது. 94 தேர்தலிலும் அதற்குப் பின்னரும் இந்தத் தமிழ் வாக்குகள் சந்திரிகாவிற்கும் தொண்டமானுக்குமே கிடைத்தன. தமிழ் மக்கள் அந்த நேரத்தில் சந்திரிகா இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பார் என நம்பினார்கள். ஆனால் தற்போது அந்த நம்பிக்கையை அவர்கள் இழந்து விட்டார்கள். ஐ.தே.கவிலும் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. நாங்கள் தொடர்ந்து தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகத் குரலெரழுப்பி வருகிறோம். ஆனால் எவரையும் எங்கள் பக்கம் இழுக்கும் எண்ணம் ஏதுமில்லை. தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் எங்களுக்கு வாக்களிக்கக் கூடும். ஆனால் அவர்கள் வாக்களிக்கிறார்களோ இல்லையோ நாங்கள் தமிழ் மக்களின் அரசியல் அடிப்படைகளுக்காகக் குரலெழுப்பி வருவோம். மிக முக்கியமாக அவர்களுடைய சுயநிர்ணய உரிமை தொடர்பாக. மாகாண சபைகளில் கூட சில விடயங்கள் அவர்களுக்குக் கிடைக்கும். உதாரணமாக மொழிஉரிமை. அதனைப் பயன்படுத்துவது தொடர்பான உரிமை. கிரிபத்கொடையில் தமிழில் கடைப்பெயர்களை எழுதும் உரிமை கூட மறுக்கப்பட்டுள்ளது. தமிழில் எழுதும் உரிமை அம்மக்களுக்கு உண்டு.

முதலமைச்சர் இது தொடர்பாக எதுவும் செய்யவில்லை. மேல் மாகாண சபையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஒரு விடயம் அது. ஆனால் அது எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. மேல் மாகாண சபை ஒரு நல்ல களம் மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பாகப் பரிசீலித்துப் பார்ப்பதற்கு. ஏனெனில் மேல் மாகாணத்தில் எல்லா சமூகத்தவர்களும் வாழ்ந்து வருகிறார்கள். மாகாண சபைகளால் அசமத்துவத்தை நீக்கலாமா எனப் பரிசீலிப்பதற்கு இது ஒரு நல்ல இடம். அனுராதபுரத்திலோ மற்றைய பிரதேசங்களிலோ இவ்வாறு பல சமூகத்தினராக, பல மதத்தினராக மக்கள் இல்லை. இது மேல் மாகாணத்தைப் பொறுத்தளவில் மிக முக்கியமானது.

**ஐ.தே.க. பொ.ஐ.மு ஆகியன கடந்த இரண்டு தசாப்தங்களாக மேற்கொண்டு வரும் யுத்தம் தொடர்பாகவும். அதன் நோக்கம் தொடர்பாகவும் கண்டித்துப் பேசி வருகிறீர்கள். கண்டனத்துக் கப்பால் இப்பிரச்சினையை தாங்கள் எவ்வாறு அணுகுகிறீர்கள் என்று விளக்குவீர்களா?**

யுத்தம் முதலில் நிறுத்தப்பட வேண்டும். அத்தோடு சுயநிர்ணய உரிமை, இனசமத்துவம், சுயாட்சி என்பன வழங்கப்பட்டு அவை அரசியலமைப்பில் அவை உறுதிப்படுத்தப்பட வேண்டும். இது தான் தீர்வு. நான் நினைக்கவில்லை சிங்கள இராணுவத்தால் அங்கு எதனையும் செய்து விட முடியுமென்று. அது அங்கிருந்து வாபஸ் பெறப்பட வேண்டும். நாம் அரசாங்கத்தை அரசியலமைப்பு திருத்தசபை ஒன்றை உருவாக்கச் சொல்லி அழுத்தம் கொடுத்து அதனூடாக அரசியலமைப்பைத் திருத்தி தமிழ் மக்களுடைய பாரம்பரியப் பிரதேசங்களை ஏற்று அங்கு அவர்களுக்கு சுயநிர்ணய உரிமையுடைய சுயாட்சி அலகொன்றை வழங்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். கூடவே எல்லாப் பிரதேசங்களும் சமத்துவமாகப் பேணப்பட வேண்டும்.

**இதில் முஸ்லிம்களுடையதும். மலையகத் தமிழ் மக்களுடையதும் நிலை என்னவாக இருக்கும்?**

இது முஸ்லிம் மக்களுடைய கோரிக்கை என்னவாக இருக்கிறது என்பதைப் பொறுத்தது. தற்போது கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்தளவில் தமிழ் பிராந்திய சபையில் அல்லது கிழக்குப் பிராந்திய சபையினுள் அவர்கள் இப்பிரச்சினை யைத் தீர்க்க முயல்வதாகவே படுகிறது.

இவ்வடிப்படையில் 1989இல் தமிழ் முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. நான் நினைக்கிறேன், அது இன்னமும் வலுவானது என்று. மலையகத்தைப் பொறுத்தளவில் அவர்கள் மலைநாடு கோருகிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. அவர்கள் கூடுதலான அதிகாரத்தைக் கோருகிறார்கள். மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று கோருகிறார்கள்.

நாங்கள் செயற்கையான தீர்வொன்றை எவர் மீதும் திணிக்க விரும்பவில்லை. அவர்கள் எதைக் கோருகிறார்களோ அதை வழங்க வேண்டும்.

**பொதுவாக தமிழ் இளைஞர் யுவதிகள் காரணமின்றிக் கைது செய்யப்படுவது தொடர்பாக் தொடர்ச்சியாகப் பேசி வருகிறீர்கள். இதற்கப்பால் மேலதிகமாக என்ன நடவடிக்கைகளை எடுத்து வருகிறீர்கள் என்று கொல்ல முடியுமா?**

நாங்கள் தெரிவு செய்யப்பட்டால் இது தொடர்பாக தொடர்ந்து பிரச்சாரம் செய்யவும், போராடவும் நாங்கள் பலம் மிக்கவர்களாக இருப்போம்.

கொழும்பு மாநகர சபையில் நான் ஒரு ஆலோசனையை முன்வைத்தேன். மேயர் அதனை பாதுகாப்பமைச்சுடன் கலந்தாலோசித்து தமிழ் இளைஞர் யுவதிகள் காரணமின்றிக் கைது செய்யப்படும் போது அதில் தலையிடுவதற்கான அதிகாரத்தைப் பெற்றுத் தந்திருக்கிறார்.

துரதிர்ஷ்டவசமாக எல்லா உறுப்பினர்களும் அதனைப் பாவிக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. இதேபோல மாகாண சபையிலும் மக்களின் பிரதிநிதிகள் இதில் தலையிடுவதற்கான அதிகாரத்துக்காகப் போரடலாம்.

இந்த விடயத்தில் நிறைய மோசடிகள் நடக்கின்றன. பணத்துக்காகக் கைது செய்யும் சந்தர்ப்பங்களும் உண்டு. தவிரவும் மனித உரிமை மீறல்கள் இவ்விடயத்தில் பெருமளவு நடக்கின்றன. பொலிஸார் கைது செய்வதை அல்லது விசாரிப்பதைத் தடுக்க முடியாது. அனால் அதில் இடம் பெறும் மனித உரிமை மீறல்களையும், ஊழல்களையும் நடைபெற அனுமதிக்காது போராட முடியும்.

**இறுதியாக சரிநிகர் ஊடாக அதன் வாசகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

நான் சொல்ல விரும்புவதென்னவென்றால் ஒன்று சேர்ந்து போராடுங்கள் என்பதைத் தான். நாங்கள் தெரிவு செய்யப்படுகிறோமா இல்லையா என்பதல்ல கேள்வி. உதாரணமாக வலிகாமத்தில் இராணுவம் காணிகளை அபகரிப்பது தொடர்பாக வெள்ளவத்தையில் மிக அண்மையில் நாம் ஒரு போராட்டத்தை நடாத்தினோம். உடனடியாக அது வேலை செய்தது. 12 மணித்தியாலங்களுக்குள் சந்திரிகா அதனை ரத்துச் செய்தார். இது எமது போராட்டத்தால் நடைபெற்றது. நான் நினைக்கிறேன் ஒரு குண்டு வைப்பதை விட இது அதிகம் சக்தி வாய்ந்தது.

நான் ஆயுதப் போராட்டத்துக்கு எதிரானவனல்ல. ஆனால் மக்களுடைய போராட்டம் மிகவும் முக்கியமானது. நாங்கள் தேர்வு செய்யப்பட்டால் எங்களுக்கு மேலும் அதிகாரம் இருக்கும் இவ்வாறான போராட்டங்களை நடாத்துவதற்கு. வடக்கு கிழக்கு என்றாலும் இங்கு என்றாலும் அணி திரண்டு போராடுங்கள் என்பதே நாம் தமிழ் மக்களுக்கு விடும் அறைகூவலாகும்.

**நேர்காணல் : சங்கரன்**

நன்றி - நூலகத்திட்டம்



# யாழ் : தொடரும் துயரங்கள் !



**செம்மணியில்** புதைகுழிகளை அடையாளம் காட்ட ராஜபக்ஷவை அழைத்துச் செல்லும் உத்தரவை நீதிபதி பிறப்பித்து விட்டார். எதிர்வரும் யூன் 15ஆம் திகதி புதைகுழிகள் அடையாளம் காட்டப்படும் என்றும் மறுநாள் அவை தோண்டப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், செம்மணியில் மண் எடுத்து வந்து ஆய்வு செய்தவர்களின் அறிக்கையோ அது ஏற்கெனவே கிண்டிக் கிளறப்பட்டதற்கான தடயங்கள் இருக்கின்றன என்று கூறியுள்ளது. செம்மணி கதை ஒரு புறமிருக்க இப்போது இன்னொரு புதைகுழி செய்தியும் யாழ்ப்பாணத்தில் வெளிவந்திருக்கிறது. துரையப்பா விளையாட்டரங்கில் மலக்குழிக்குள் சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதை தாம் கண்டதாக யாழ் மாநகரசபை ஊழியர்கள் தெரிவித்தது ஒரு பரபரப்பூட்டும் செய்தியாக வெளிவந்திருக்கிறது. புதைகுழிகள் செம்மணியிலும் துரையப்பா விளையாட்டரங்கிலும் மட்டுமல்ல, வடக்கு கிழக்கின் படையினரின் ஆதிக்கம் நிலவிய அனைத்துப் பகுதிகளிலும் இருக்கும் என்று சந்தேகிக்கப்படுகிறது. கடந்த ஒரு தசாப்த காலத்தில் மட்டும் வடக்கு கிழக்கில் காணாமல் போனவர்களின் தொகை இரண்டாயிரத்துக்கும் மேல் என்று தகவல்கள் கூறுகின்றன. இவர்களில் எத்தனை பேர் செம்மணியில் கிடக்கின்றார்கள்? எத்தனை துரையப்பா விளையாட்டரங்குக்குள் கிடக்கின்றன. இன்னும் அறியப்படாத புதைகுழிகள் எத்தனை என்பது யாருக்கும் தெரியாது - புதைத்தவர்களைத் தவிர. வடக்குக்கு தொடர்பு சாதனவியலாளர்களை ஊர்சுற்றிக்காட்டப் போவது போல கூட்டிச் செல்லும் அரச நடவடிக்கைகள் எல்லாம், தனது பெயரைப் பாதுகாக்க அரசு செய்யும் நாடகமே என்பதை அங்குள்ள மக்கள் அறிவர். ஆயினும் அரசாங்கம் அக்கறையுடன் பிரச்சினைகளை அணுகுவதாக இந்த தொடர்புசாதனங்களில் பல செய்தி வெளியிட்டு வருகின்றன. வடக்கிலே காணாமல் போனவர்கள் என்றென்றைக்குமாக காணாமல் போய்விட்டவர்களா அவர்களுக்கு நீதி கிடைக்காதா, அவர்களது உறவினர்களுக்கு புதைகுழித் தடயங்களாவது கிடைக்காதா என்று அங்கலாய்க்கின்றனர் அங்குள்ள மக்கள். ஆனால் இந்த அங்கலாய்ப்புக்களுக்கு அரச தரப்பிடமிருந்தோ தமிழ் அரசியல் கட்சிகளிடமிருந்தோ எந்தப் பொறுப்பான பதிலும் இல்லை. அவர்கள் துயரம் தொடர்கிறது.






பலாலிலியில் விமான நிலைய விஸ்தரிப்புக்கான காணிச்சுவீகரிப்பு கைவிடப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளதென்று தொடர்புசாதனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆயினும், சந்திரிகாவால் வழமையாக தேர்தல் காலங்களில் அள்ளி வழங்கப்படும் வாக்குறுதிகளைப் போல இதுவும் ஒரு வாக்குறுதியாக வழங்கப்பட்ட உத்தரவோ என்ற சந்தேகம் நிலவவே செய்கிறது. அண்மையில் இக் காணிச்சுவீகரிப்பு நடவடிக்கையை எதிர்த்து வெள்ளவத்தையில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்களில் சில இவை. இப்போராட்டத்தினை புதிய இடது சாரி முன்னணி ஒழுங்கு செய்திருந்தது.

அண்மையில் படையினரால் கைப்பற்றப்பட்ட மடு பகுதியை விட்டு இராணுவம் வாபஸ் பெற வேண்டுமெனக் கோரி இன்னுமொரு ஆர்ப்பாட்டத்தையும் கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடைப் பகுதிகளில் நடத்தவிருப்பதாக அம்முன்னணியின் தலைவர்கள் சரிநிகருக்கு கருத்து தெரிவித்தனர்.

---

தேர்தல் கண்காணிப்புக்கு எதிரான

# அமைச்சர் தயாரத்னவின் அச்சுறுத்தல் !

தே.வ.க.நி அறிக்கை

**காணி,** விவசாய அமைச்சரும், பொ.ஐ.மு. யின் பொதுச்செயலாளருமான திரு.டி.எம்.ஜயரத்ன, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் ஐ.தே.க யின் கிளை அமைப்பாகச் செயற்பட்டுவருவதாகவும், தே.வ.க.நி. தனது நிதிகளை டொலர்களிலும் பவுண்களிலும பெற்றுவருகிறதென்றும், ஆயினும் பணம் எங்கிருந்து கிடைக்கின்றது என்பதைக் கூறவில்லையென்றும் ஏதாவது அதன் அலுவலக வேலைகளுக்கு யாரும் உதவி செய்யக்கூடாது என்றும் மீண்டும் மீண்டும் அரசுக்குச் சொந்தமான பொதுமக்கள் தொடர்பூடகங்களில் கூறிவந்துள்ளார். ஏப்.முதலாம் திகதி கண்டியில் இடம்பெற்ற ஒரு பகிரங்கக் கூட்டத்தில் தே.வ.க.நி. கண்காணிப்பாளர்களைக் கண்டால் அவர்களைத் துரத்தும்படி பொ.ஐ.மு. ஆதரவாளர்களை மிகவும் குறித்துரைப்பாக வேண்டிக் கொண்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

தே.வ.க.நி. யின் பக்கச் சார்பாற்ற நுண்ணாய்வு காரணமாகத் ஜயரத்ன அவர்களுக்கு பெரும் பயமும், பாதுகாப்பின்மை உணர்வும் ஏற்பட்டுள்ளமை வெளிப்படையாகும். தே.வ.க.நி. யிற்கு எதிராக குழப்பத்தையும், குரோதத்தையும் தூண்டிவிடும் அவரது முயற்சியின் காரணமாக அவர் தன்னையும் தான் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கத்தையும் அம்பலப்படுத்தியுள்ளார். இதன் மூலம் அவர் சுயாதீன தேர்தல் கண்காணிப்புச் செயல்முறையை வேண்டுமென்றே குழப்ப முயலுகின்றார். 1999 ஜனவரி 25ந் திகதி வடமேல் மாகாணசபைத் தேர்தலின் போது டீ.எம்.ஜயரத்ன வன்செயலாளர்களுள் ஒருவராக குற்றம் சாட்டப்பட்டவர் என்பதை தே.வ.க.நி வெளிப்படுத்தியது. குற்றவியல் மானநஷ்டத்திற்காக தே.வ.க.நி மீது உடனடியாக வழக்குத் தொடரப் போவதாக ஜயரத்ன பகிரங்கமாக கூறியிருந்தார். தே.வ.க.நி. தனது நிலைப்பாட்டில் மாற்றும் எதுவும் இல்லையென்றும், அவர் விரும்பினால் வழக்குத் தொடரலாம் என்றும் பதிலளித்த ஒருவாரமாக அரச அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் ஜயரத்னவின் வெற்றுப் பயமுறுத்தல்களைத் தவிர இது வரையும் வேறு எதுவும் நடைபெறவில்லை.

இரண்டு மாதங்கள் கழிந்த நிலையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. பேச்சுமலிவானது என்ற கூற்று உண்மையாகியுள்ளது. உண்மையில் தே.வ.க.நி தேர்தல் தொடர்பிலான வன்முறை சம்பவ அறிக்கைகள் புனைகதைகள் என்றால் ஜயரத்ன அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம். உண்மை வெல்லும். ஜயரத்னவினால் கேவலமாக தூஷிக்கப்பட்டவர்களும் தீய நோக்கோடு அவதூறு செய்யப்பட்டோருமாகிய தே.வ.க.நி பத்திரிகை அறிக்கைகளுக்கு கையொப்பம் இட்டோர் இதையே செய்யவுள்ளனர். அதிகாரத்தில் இருக்கும் அரசியல் கட்சியில் ஒரு பொறுப்பான பிரதிநிதி என்ற வகையில் அவர், தனது பதவியையும் அரச ஊடக வசதிகளையும் துஷ்பிரயோகம் செய்து தே.வ.க.நி.யிற்கு எதிராக அதன் பக்கச்சார்பின்மை காரணமாக தனக்கு பங்கம் ஏற்படுகின்றதென்ற காரணத்தால் மோசமான பொய் நிறைந்ததும் அவதூறு நிறைந்ததுமான கூற்றுக்களை வெளியிட்டுச் சீரழிவதற்கு முன் சிறிது சிந்தித்திருக்கலாம்.

அமைச்சில் டீ.எம். ஜயரத்ன தே.வ.க.நி, ஐ.தே.கவின் ஒரு கிளை நிறுவனமாக கருமம் ஆற்றுகின்றதென்று சொல்லுகிறாரே தவிர, இக்குற்றச் சாட்டுக்கு ஆதரவாக எவ்வித சாட்சியத்தையும் முன் வைக்கவில்லை. தே.வ.க.நி. தனது நிதி மூலங்களை வெளிப்படுத்தியதில்லை-யென்று அவர் மேலும் உண்மைக்குப் புறம்பாக உரத்துக் கூறி வருகின்றார். தே.வ.க.நி.யின் கடந்தகால, தற்போதைய மற்றும் எதிர்கால அறிக்கைகளை நிராகரிக்க வேண்டும். மற்றும் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்புக்கு வழங்கக் கூடாது என்றும் கேட்பதிலிருந்து. மாறுவதற்கு இப்பொழுது அதன் வேலைகளை முழுமூச்சாக எதிர்க்க வேண்டுமென்று ஒளிவுமறைவற்ற விதத்தில் தே.வ.க.நியிற்கு எதிராக விரோத உணர்வைத் தூண்டிவிடுதவற்கும் ஒரேயொரு நோக்கம் மாத்திரமே இருக்க முடியும். அமைச்சர் ஜயரத்னவும், அவரது அரசாங்கமும் தே.வ.க.நியின் அலுவலகங்கள் மற்றும் பதவியினர் மீது உடல் ரீதியான தாக்குதல்களை கட்டவிழ்த்து விடுவதற்கான காரணங்களைத் தயாரித்து வருகின்றனர்.

உண்மையில் ஏற்கனவே, பதுளை இரத்தினபுரி, மாத்தளை, களுத்துறை, நுவரெலியா மற்றும் பொலனறுவை ஆகிய இடங்களிலுள்ள தே.வ.க.நி கள அலுவலக பதவியினருக்கு இனந்தெரியாத நபர்களிடமிருந்து தொலைபேசியில் பயமுறுத்தல்கள் கிடைத்துள்ளன. உண்மையில் நிகழ்ந்தது என்னவெனில் பொ.ஐ.மு வாக்களிப்பு கண்காணிப்புக் குழு மார்ச் 31ந் திகதி சகல தே.வ.க.நி. கள அலுவலகங்களினதும் முகவரிகள் தொலைபேசி இலக்கங்களைத் தருமாறு வேண்டிக் கொண்டது. ஏப்ரல் 1ம் திகதி தகவல்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. பொ.ஐ.மு. வாக்களிப்பு கண்காணிப்புக் குழுவிற்கு பக்ஸ் தகவல்கள் அனுப்பப்பட்ட ஒரு சில மணி நேரத்துள் பயமுறுத்தல்கள் தீவிரமாக ஆரம்பித்தன. வாசகர்கள் தமது சொந்த முடிவுகளுக்கு இலகுவாக வந்துகொள்ள முடியும் .மேலும் பொ.ஐ.மு. ஆதரவாளர்களுக்கு எதிராக செய்யப்படும் முறைப்பாடுகள் குறித்த விபரங்களைத் தமக்கு தரவேண்டும் என்று பிராந்தியங்களில் உள்ள பொ.ஐ.மு. உத்தியோகத்தர்கள் தே.வ.க.நி மாவட்ட அலுவலகங்களிலும் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த அலுவலகங்கள் தமது விசாரணைகளை தே.வ.க.நி கொழும்பு தலைமை ஸ்தாபனத்துக்கு அனுப்பியுள்ளமையினால் பொ.ஐ.மு. வாக்களிப்பு கண்காணிப்பு குழுவின் கூட்டிணைப்பாளர் எஸ்.ஏ.சிறிபதி இத்தகவலைத் தருமாறு மிகவும் மரியாதையாக கடிதம் எழுதியுள்ளார்.

ஆயினும் சிறிபதி பொ.ஐ.மு. கட்டமைப்பில் வகிக்கும் பதவி என்னவென்று தே.வ:க.நி.யிற்குத் தெரியாது. இந்த விபரங்களை தருமாறு செய்யப்பட்ட வேண்டுகோள் உள்நோக்க மற்றதா அல்லது சட்டரீதியானதா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை. இவ்வாறாக இனங்காணப்படும் பொ.ஐ.மு. ஆதரவாளர்களுக்கு எதிரான முறைப்பாட்டாளர்கள் வேட்டையாடப்படுகிறார்கள் என்று தே.வ.க.நி அச்சம் கொண்டுள்ளது. எது எவ்வாறாயினும் தேவ.க.நி பொ.ஐ.மு. உயர்பீடத்தாலும் பொ.ஐ.மு. வாக்களிப்பு கண்காணிப்பு குழுவினாலும் தொடர்ச்சியாகவும் தேவையற்ற முறையிலும் அவதூறுக்கு உள்ளாக்கப்படும் இந்த நேரத்தில் அவசர ஒத்தழைப்புக்கு மிகவும் அவசியமான அடிப்படை நம்பிக்கை மற்றும் ஒத்தநோக்கு என்பதை அறவேயில்லாத நிலைமையே தென்படுகின்றது.

தே.வ.க.நி. இவ்வாறாக வேகமாக மாறிவரும் சூழ்நிலை குறித்த தகவல்களை தெளிவான பார்வை கொண்ட பொது மக்களாகிய உங்கள் முன் வைப்பதால் நீங்களே விடயங்களை அறிந்து ஒரு தீர்மானத்திற்கு வரமுடியுமென்று எண்ணுகின்றது. எங்களுக்கு அத்தகைய தடைகள் ஏற்பட்ட போதிலும் ஐந்து மாகாணங்களிலும் தேர்தல் தினம் வரையில் உள்ள சம்பங்களை அச்சமோ பக்கச் சார்போ இன்றி கண்காணிப்பதாகவும் நாம் உங்களுக்கு வாக்குறுதி தருகின்றோம். இலங்கையில் ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கான இந்த முயற்சிக்கு உங்கள் ஆதரவு மற்றும் துடிப்பான ஒத்துழைப்பும் கிட்டுமென்று எதிர்பார்க்கின்றோம்.

1997ல் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி.) சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் அரசியல் வன்முறைகளுக்கான கூட்டமைப்பு என்பவை இணைந்து தேர்தல் தொடர்பிலான வன்முறைகளைக் கண்காணிக்கும் சுயாதீன கட்சிசார்பற்ற அமைப்பாக தே.வ.க.நி. உருவாக்கப்பட்டது.

நன்றி - நூலகத்திட்டம்



**புதிய இடதுசாரி முன்னணி இந்தத் தேர்தலில் குதித்திருப்பதற்கான பிரதான காரணம் என்ன?**

எங்களுடைய கட்சி புதிய இடது சாரி முன்னணி என்ற ஒன்றை ஏனைய தோழமைக் கட்சிகளோடும் தொழிற் சங்கங்களோடும் இணைந்து உருவாக்கியது. அவ்வாறு அது இரண்டு வருடமாக நடத்திய பேச்சு வார்த்தைகளின் பயனாக பொது வேலைத் திட்ட மொன்றை முன் வைத்துள்ளது. அந்தப் பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் அதை மக்கள் மத்தியில் வெளிக் கொணருமுகமாகவும் ஒரு வெகுஜன இயக்கத்தை கட்டி எழுப்ப வேண்டுமென்ற அக்கறையுடனும் அதனுடைய பொது வேலைத் திட்டத்தின் அடிப்படையில் புதிய இடது சாரிக் கட்சி இந்தத் தேர்தலில் பங்கு கொள்ள முனைந்துள்-

**நீங்கள் அடிப்படை வேலைத் திட்டம் என்று கூறினீர்கள். அந்த அடிப்படை வேலைத் திட்டத்தின் முக்கியமான அம்சங்களைக் கூறுவீர்களா?**

இந்த நாடு ஒரு பல்லின நாடு அந்தப் பல்லினப் பண்பாடுடைய நாட்டை சிங்கள பௌத்த நாடு என்ற பிரமையில் இருந்து அகற்றி அதை பல்லினப் பண்பு முறைமை மிக்க நாடு என்ற நிலையில் முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற அடிப்படையில் இன்றைக்கு நாட்டின் தேசிய நெருக்கடியாக இருக்கக் கூடிய அந்த யுத்தத்தை நிறுத்துவதற்கு சிங்கள தமிழ் முஸ்லிம் மலையக மக்கள் அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்பது.

இரண்டாவதாக அந்த யுத்தத்தை நிறுத்துவதற்கு உடனடிக் காரணமாக இருக்கக் கூடிய நான் முன்னர் குறிப்பிட்ட நான்கு தேசிய இனங்களுடைய தனித்துவத்தையும் அதனுடைய இறைமையையும் சகல சமூகத்தவர்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிலைமையும் உருவாகி இருக்கிறது.

அந்த சகல தேசிய இனங்களினதும் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து இந்த பொது வேலைத்திட்டம் அமைந்திருப்பதன் காரணமாகவும் நாம் இதில் இணைந்திருக்கிறோம். இன்னொரு வகையில் சொன்னால் நாமே உருவாக்கியிருக்கும் சுயவேலைத் திட்டம் இது.

அடுத்ததாக பல் தேசிய கொம்பனிகளுக்கு நாட்டை விற்கின்ற தனியார் மயப்படுத்துகின்ற அந்தப் பெரு முதலாளித்துவத்துக்கு எதிராகவும் சிங்கள தமிழ் முஸ்லிம் மலையக மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதற்குமாக நாங்கள் இதனைத் தொடங்கியுள்ளோம்.

**இந்த முன்னணியில் ஜே.வி.பி இல்லை. அது தனித்துப்போட்டியிடுகிறது. இது உங்களுக்குக் கிடைக்கும் வாக்குகளை சிதறடிக்கும்அல்லவா? அதைப் பற்றி என்ன கூறுகிறீர்கள் ?**

ஓம். ஜே.வி.பியோடு புதிய ஜனநாயகக் கட்சியினராகிய நாங்கள் ஒன்று இரண்டு சந்தர்ப்பங்களில் பேசியிருக்கின்றோம். ஜே.வி.பி உண்மையில் சிங்கள இளைஞர் மத்தியில் செல்வாக்குள்ள ஒரு இயக்கம் என்பது மறுக்க முடியாத விஷயம். அதனால் நாங்கள் அவர்களை மதித்து அவர்களுடன் இரண்டு தடவை பேசியிருக்கின்றோம். இதில் இன்று நடந்து கொண்டிருக்கும் இந்த நாட்டின் தேசிய நெருக்கடியான யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்கின்ற எங்களுடைய பிரதானமான வேலைத்திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்துவதற்கு அடிப்படையாக அல்லது முன்தேவையாக அல்லது முன் நிபந்தனையாக இருக்கிற விடயம் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்பது, ஆனால் மலையக மக்களை ஒரு தேசிய இனமென்றோ, முஸ்லிம் மக்களை ஒரு தேசிய இனமென்றோ, தமிழ் மக்களை ஒரு தேசிய இனமென்றோ அங்கீகரிப்பதில் அவர்களுக்கு மிகவும் தயக்கம் இருக்கிறது. அதை அவர்கள் இனவாதக் கண்ணோட்டத்தில் பார்க்கின்ற பார்வையாக கருதுகின்றார்கள். அவர்கள் இந்த முதலாளித்துவ அமைப்புக்குக் கீழே இவ்வாறான இனவாதக் கண்ணோட்டத்தில் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது என்றும் ஒரு சோசலிஷ சமூகம் ஏற்பட்ட பின்னர்

## யுத்த நிறுத்தம், தேசிய இன அங்கீகாரம், தனியார்மய எதிர்ப்புக்கான ஒரு வெகுஜன அமைப்பைக் கட்டி எழுப்புவதே எம் நோக்கம்!

— சோ.தேவராஜா —

தான் உண்மையில் விசுவாசமாக இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் அது வரை பொறுத்திருக்க வேண்டும் என்றும் மக்களை அதற்கு முதல் ஏமாற்ற விரும்பவில்லையென்றும் தெரிவித்திருக்கிறார்கள். அது எமக்கு ஒரு பிரச்சினை.

அடுத்ததாக அத்தேசிய இனங்களை அங்கீகரித்தல். தேசிய இனங்கள் என்ற அடிப்படையில் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தல் என்ற முக்கியமான நவீன வளர்ச்சிகளை அவர்கள் உள்வாங்கத் தயங்குகிறார்கள். அது மட்டுமல்லாமல் இப்பொழுது இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்கள் தரப்பில் தலைமைச் சக்தியாக விளங்கக் கூடிய விடுதலைப் புலிகள் இயக்கத்தை அவர்கள் வெறுமனே ஒரு பயங்கரவாத இயக்கமாகவே இன்றைக்கும் கருதிக் கொள்கின்றார்கள். அது தமிழ் மக்களுக்கு ஏற்புடைய விடயமல்ல. மூன்றாவதாக அவர்கள் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதையோ அல்லது இந்த அரசாங்கம் முன் வைத்துள்ள அரசியற் தீர்வைக் கூட ஏற்றுக் கொள்வதற்கோ அவர்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள். அது நாட்டை சின்னா பின்னப்படுத்துகின்ற ஒரு விஷயமாக, துண்டாடும் விஷயமாகக் கருதுகிறார்கள். அவர்கள் நாட்டின் ஒற்றை ஆட்சியில் அதீத நம்பிக்கை உடையவர்களாக இருப்பதை சிங்கள பௌத்த சிந்தனைக்குப் பணிந்து போகின்ற சிவப்புச் சாயம் பூசிய ஒரு ஷோசலிஷத் தன்மையைத் தான் ஏற்படுத்த முனைவதாகத் தான் நான் காண்கிறேன்.

**ஆக. ஜே.வி.பி இந்தப் புதிய இடதுசாரி முன்னணியில் இணைவதற்கான வாய்ப்புகள் இல்லை என்று சொல்கிறீர்கள்?**

அப்படியில்லை. இந்தத் தேர்தலில் அவர்கள் பெறக் கூடிய படிப்பினைகள் மூலமும் அல்லது அவர்கள் தமிழ் மக்களுடைய அடிப்படையான உரிமைகளைப் புரிந்து கொள்வதன் ஊடாகவும் எதிர் காலத்தில் இதில் இணைந்து கொள்ளலாம். ஜே.வி.பி ஒரு இடதுசாரி இயக்கமென்று கருத்தில் கொண்டால் அவர்கள் இயங்கியல் உண்மைகளைப் புரிந்து கொண்டு தவறுகளைத் திருத்தி இதிலிருந்து புதிய பாடங்களைக் கற்று முன்னேறுவார்கள் என்ற எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் எங்களுக்கு இருக்கிறது.

**பாராளுமன்ற தேர்தல் பாதையூடான வழிமுறை உண்மையில் மக்களுக்கு எந்த விதமான சுபீட்சத்தையும் வழங்காது என்று சொல்லப்படுகின்ற அபிப்பிராயங்களுக்கு ஒரு இடது சாரிக் கட்சியைச் சேர்ந்தவர் என்ற வகையில் நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

ஓம். அது ஒரு உண்மையான, சரியான விஷயம். கடந்த 25 ஆண்டுகளாக நாங்கள் தோழர் சண்முகதாசனின் தலைமையிலான கொம்யூனிஷ்ட் கட்சியிலிருந்தம், பிறகு தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் தலைமையில் கொம்யூனிஷ்ட் கட்சி (இடது) யிலிருந்தும், இப்பொழுது தோழர் சி.கா.செந்திவேல் தலைமையில் புதிய ஜனநாயகக் கட்சியிலிருந்தும் . பாராளுமன்றம் ஒரு கள்வர் குகை என்று சொல்பவர்க்கு பின்னால் இருநது நாம் அதை அவதானித்து வந்திருக்கிறோம். ஆனால் நாட்டு நிலைமையைப் பொறுத்த வரையில் இரத்தம் சிந்தும் அரசியல் என யுத்தம் வெடித்திருக்கிறது. இரத்தம் சிந்தும் அரசியலாக - அரசியல் தான் இப்பொழுது யுத்தமாக மாறியிருக்கிறது.- அதை நாம் உணர்ந்து யுத்தத்தை தடுப்பதாகவோ தவிர்ப்பதாகவோ இருந்தால் இரத்தம் சிந்தாத ஒரு யுத்தத்தை நடத்தும் ஒரு தேவை எமக்கு ஏற்பட்டுள்ளது. எனவே இரத்தம் சிந்தாத ஒரு யுத்தத்தை நடாத்தி யுத்தத்தை நிறுத்த வேண்டும் என்று சொன்னால் மக்கள் நம்பிக்கையுடைய தேர்தல் பற்றி நாம் அக்கறை கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். மக்கள் அரசியல் விழிப்புணர்வும் அரசியல் அக்கறையும் உள்ள அந்தக் காலத்தில் நாம் தேர்தலில் இருந்து ஒதுங்கி இருந்தது எங்களைத் தனிமைப்படுத்தி விட்டதைத் தான் எமது கடந்த காலம் எமக்கு அனுபவத்தில் உணர்த்தியிருக்கிறது.

எனவே மக்களுக்குத் தெரிந்ததிலிருந்து மக்களினுடைய அக்கறையிலிருந்து அவர்களை அணுகுவதனூடாக அதை ஒரு களமாகப் பாவிப்பதனூடாக - இரத்தம் சிந்தாத யுத்தத்தை நடத்துகின்ற ஒரு களமாகப் பாவிப்பதில் - உண்மையில் யுத்தத்தை நிறுத்துவதற்கும் எங்களுடைய பொது வேலைத் திட்டத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்துவதிலும் நாம் அதில் முனைந்து ஈடுபடுவதற்கும் இன்றைக்கு இந்தத் தேர்தல் எங்களுக்குப் பயன்பட்டிருக்கிறது. நாங்கள் அதில் ஈடுபட்டிருக்கிறோம். அதனூடாகத்தான் எங்களுக்கு ஒரு அரசியல் அங்கீகாரம் கிடைக்கும் என்றும் நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றோம். அதை நிராகரித்துத் தனிமைப்பட்டவுடன் எங்களை பத்திரிகைகள் தொடக்கம் எல்லாத் தொடர்பூடகங்களும் ஏன் பொதுமக்கள் கூட எம்மை ஒரு புரட்சிகர இயக்கம் என்ற அடிப்படையில் அறிந்திருக்கிறார்களே தவிர அதை ஒரு வெகுஜன இயக்கமாக அறிந்து கொள்ள முடியாத சூழல் ஒன்று இருக்கிறதை இந்த அண்மைக்கால நிகழ்வுகளிலிருந்து அவதானிக்க முடியும்.



**நீங்கள் கூறிய இதே காரணங்களைச் சொல்லிக் கொண்டு தான் தமிழ்க் கட்சிகளும் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு பாராளுமன்ற ஜனநாயக வழிக்கு வந்தன. ஆனால் தமிழ்க்கட்சிகளின் இன்றைய நிலையை நீங்கள் அறிவீர்கள். இக்கட்சிகளின் இன்றைய நடவடிக்கைகள் பெருமளவிற்கு தமிழ் மக்கள் மீது மேற் கொள்ளப்படும் ஒடுக்கு முறைகளுக்கு காரணமாகவுள்ளது. எப்படி நீங்கள் இதே வழிமுறையிலிருந்து உங்களை வேறுபடுத்திக் காட்டப் போகின்றீர்கள்?**

இரு ஒரு நல்ல அருமையான கேள்வி. இந்த நாட்டின் வரலாற்றிலே சிகப்புக் கட்சி என்று சொல்லப்பட்ட கொம்யூனிஷ்ட் கட்சி சமசமாஜக் கட்சி ஆகியன எப்பொழுது இந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இரண்டறக் கலந்து கொண்டு அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டு அதனுடன் ஒட்டுறவாடி பலனடைந்ததோ அன்றைக்குச் சிவப்புச் சாயம் வெளுத்தது. அதன் பின்னர் அதன் தனித்துவம் காப்பாற்றப்படவில்லை. அவர்கள் ஐக்கியம் என்ற அடிப்படையில் சரணடைந்தார்கள் என்பதையே நாம் வரலாற்றில் கண்டு கொள்ளலாம். அதே போலத்தான் தமிழீழமென்று சொல்லிப் புறப்பட்ட விடுதலை இயக்கங்கள் அனைத்தும் பொது எதிரியாக விடுதலைப் புலிகளை முன் வைத்துக் கொண்டு அந்த அடிப்படையில் எவரை எதிரிகளாகக் கருதினார்களோ அந்தப் பெருமுதலாளித்துவ அரசுடன் இரண்டறக் கலந்து அவசரகாலச் சட்டத்திற்கு கையுயர்த்துவது முதல் அரசினுடைய சகல நடவடிக்கைக்கும் பாராளுமன்றத்தில் ஒத்துாதுவதனூடாக அவர்களும் இரண்டறக் கலந்து தமது சாயத்தை வெளுக்க வைத்தார்கள். தங்களுடைய தனித்துவத்தை இழந்தார்கள்.

ஆனால் நாங்கள் ஐக்கியத்தையும் போராட்டத்தையும் நடத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அதற்குரிய தன்னம்பிக்கை உரியவர்களாக இருக்க வேண்டும். அந்த ஐக்கியம் என்பது ஒரு நட்புறவின் அடிப்படையில் இருக்கின்ற அதே நேரத்தில் தவறைக் கண்டு விமர்சிப்பதற்கும் போராடுவதற்கும் தைரியமுடையவாத்களாக இருக்க வேண்டும். நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைக் கூற விரும்புகின்றேன். 17 வருட அதாவது நீண்ட நெடுங்கால யு.என்.பி ஆட்சி இந்த நாட்டில் ஏற்பட்டு ஜனநாயக மனித உரிமைகள் கேள்விக்கு உட்படுத்தப்பட்ட சூழ்நிலையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களை நாம் ஆதரித்த பொழுது எமது தலைவர் கே.ஏ.சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் அவரைச் சந்திக்க் ரொஸ்மிஸ் பிளேசில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்றோம். அப்பொழுது ஸ்ரீமாவோவிடம் தோழர் கே.ஏ.சுப்பிரமணியம் மிகத் தெளிவாகச் சொன்னார் உங்களுக்கு நாங்கள் யு.என்.பி யை விழுத்துவதற்காகத் தான் ஒத்தாசை புரிகின்றோம். ஆனால் யு.என்.பி யை விழுத்தி நீங்கள் ஆட்சி அமைத்தால் அதற்குப் பின்னர் இந்த நாட்டின் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையை நீங்கள் அங்கீகரிக்கத் தவறினால் உங்களுக்கு எதிராகவும் நாம் போராடுவோம் என்று. இது 1988இல் இந்திய இராணுவம் இருந்த பொழுதிலே இடம் பெற்றது .இப்போதும் சுயநிர்ணய உரிமைக்காக எந்தவொரு இழப்பையும் ஏற்றுக் கொள்ளவும் எதிர்கொள்ளவும் நாம் தயாராகவுள்ளோம்.

**ஆனால். இவ்வாறு சொல்லும் நீங்கள் தான் இவை எவையுமே அங்கீகரிக்கப்படாத நிலையிலே 1994ம் ஆண்டு திரும்பவும் மீளவும் பொ.ஐ.மு ஆட்சிக்கு வரும் போதும் ஆதரவு வழங்கினீர்கள். அது எந்த அடிப்படையில்?**

1988ம் ஆண்டு நாங்கள் ஆதரவு வழங்கிய நேரத்தில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவால் வெற்றி பெற முடியவில்லை. தொடர்ந்து வந்த யூ.என்.பி அரசை விழுத்துவதற்கு எங்களால் முடியவில்லை. அந்த ஆதரவின் தொடர்ச்சி தான் 1994ம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவிற்கும், பாராளுமன்றத் தேர்தலில் பொ.ஐ.மு.வுக்கும் நாங்கள் ஆதரவு வழங்கியது. ஸ்ரீமாவோ ஒரு பொது வேலைத் திட்டத்தை குமார் பொன்னம்பலத்தோடு சேர்ந்து 1988ல் வைத்திருந்தார். மலையக மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை கொடுப்போம் என சந்திரிகா பேசியது கூட வீரகேசரியில் தலைப்புச் செய்தியாக வந்தது. அந்த அடிப்படையில் இருந்தும் மக்களின் விருப்பத்தில் இருந்தும் நீண்ட கால ஆட்சியில் மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பிலிருந்தும் நாங்கள் அந்த நிபந்தனைக்கு உட்பட அந்த ஆதரவை வழங்கினோம். அதை ஒரு பூரணமான சரணடைவுவாதமென்றோ பூரண சங்கமமமென்றோ யாரும் கருதி விட முடியாது.

**அந்த ஆதரவு குறித்து புதிய ஜனநாயகக் கட்சியின் இன்றைய நிலைப்பாடு என்ன?**

ஓம், அந்த ஆதரவு அது காலத்தின் தேவை. அந்த ஆதரவை நாங்கள் என்றைக்கும் தவறென்று கருதவில்லை. அன்று நீண்ட நெடுங்காலமாக இருந்தது கொடுங்கோலான யு.என்.பி ஆட்சி. வேலை நிறுத்தம் செய்ய முடியாது, கூட்டம் கூட முடியாது. எந்த ஜனநாயக, மனித உரிமைகளுக்கும் எந்த வித உத்தரவாதங்களும் இல்லை என்கின்ற அடிப்படையில் யு.என்.பி இந்த நாட்டில் ஒரு பெரிய இருண்ட ஆட்சியை நடத்திக் கொண்டு வந்தது. எனவே அதற்கெதிராக சிங்கள மக்களிடம் ஏற்பட்ட வெறுப்புணர்ச்சி இந்த சிங்கள மக்களுடைய விருப்பு ஆகியவற்றினையும் இணைத்து தமிழ் மக்களுடைய விருப்பத்துக்கும் ஏற்றது போல நாங்கள் அந்த நேரம் ஆதரவு வழங்கினோம், நிபந்தனைகளுடன்.

**இன்றைக்கும் அவ்வாறே ஆதரவு வழங்குகிறீர்களா?**

இல்லை. இன்றைக்கு இந்த அரசாங்கத்துக் நாம் எந்தவித ஆதரவும் வழங்க முடியாது. அதாவது புலிகளோடு பேச்சு வார்த்தை என்ற பெயரில் ஒரு போலிப் பேச்சு வார்த்தை நடத்தியது முதல் யுத்தத்தை தொடங்கியதில் இருந்து அந்த பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டது, யுத்தத்தைத் தொடங்கியது, இன்றைக்கு தமிழ் மக்களுக்கு எதிராக செய்யப்படுகின்ற அட்டுழியங்கள் படுகொலைகள். சிங்கள இராணு வத்தில் சிங்கள இளம் வறிய விவசாயக் குடும்பங்களிலிருந்து வருகின்ற ஏழை விவச்சாயிகளுடைய பிள்ளைகள் பலியிடப்படுவது. இந்த நாட்டில் பல பண்பாட்டு சீரழிவுகள் ஏற்படுவதற்கும் கட்டற்ற பல்தேசியக் கொம்பனிகளின் வருகைக்கும் காரணமான இந்தச் சூழலை நாங்கள் அங்கீகரிக்க முடியாது. நுரைச்சோலையில் வோய்ஸ் ஒப் அமெரிக்கா விடயத்திலோ, அனுராதபுரம் பொஸ்பரஸ் கம்பனி பற்றிய விடயங்களிலோ அமெரிக்காவோடு சேர்ந்து விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளென்று சொல்லி முத்திரை குத்துவதற்கோ நாங்கள் அனுமதியளித்துவிட முடியாது. இவர்களுடைய அரசியற் தீர்வு எந்தவொரு அர்த்தமும் அற்றது. எந்தவொரு பிரயோசனமும் அற்றது. பேச்சுவார்த்தைக்கு ஒரு முன் நிபந்தனையாகக் கூட வைக்க முடியாதது. அதை வைத்துப் பேசுவதற்கு கூடத் தகுதியில்லாத ஒரு அரசியற் தீர்வைத் தான் இந்த அரசு முன் வைத்திருக்கிறது. எனவே இந்த நாட்டின் சிறுபான்மை மக்கள் இதிலே நம்பிக்கை இழந்துள்ளார்கள். பெரும்பான்மை சிங்கள மக்கள் கூட விரக்தி அடைந்துள்ளார்கள்.

நன்றி - நூலகத்திட்டம்



# தலித் இலக்கியம்: விவாத மையப் புள்ளிகளும் விளக்கக் குறிப்புகளும் !

'சாவுப் பறையடித்த சரித்திரம் போயிற்று.
போர்ப்பறை அடிக்கிறோம் புரிந்து கொள்வீர்
தலித் என்றொரு இனம் உண்டு.
தனியே அவர்க்கொரு குணமுண்டு
தலித் விடுதலை இல்லையேல்
தமிழன் விடுதலை சாத்தியமில்லை'

1995ம் ஆண்டைய அனைத்திந்திய தலித் இலக்கியப் பேரவையின் தொனிப்பொருள் கவிதை இது. இதேபோன்று அர்ஜுன் தாங்களே, தயாபவார் போன்றோரது நூற்றுக்கு மேலான கவிதைகளும், சிறுகதைகளும் இந்திய இலக்கிய சூழலில் புதியதோர் உத்வேகத்தையும், உயிர்த்துடிப்பையும் ஏற்படுத்தி வருவதோடு 'ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் விடுதலையில் பல புதிய முற்போக்குப் பாய்ச்சலுக்கான வித்தாகவும் விழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அண்மையில் வெளியிடப்பட்ட அர்ஜுனின் "Poison Bread" என்ற இலக்கியத் தொகுப்பு பலரது கவனத்தையும் கவர்ந்துள்ளமை தலித் இலக்கிய வளர்ச்சியின் மற்றொரு வெளிப்பாடு என்கின்றனர் இந்திய இலக்கிய ஆய்வாளர்கள்.


இன்றைய துணைக்கண்ட இலக்கியக் சூழலில் தலித் இலக்கியம், புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்ற கோஷங்கள் மிக வேகமாகவே எழுப்பப்படுவதோடு அவை தொடர்பான வாத, விவாதங்களுக்கான கருத்தியல்தளமும் விரிந்துகொண்டே செல்வதைக் காணலாம். தலித் இலக்கியம் என்ற பிரத்தியேக வகையறாக்கத்திற்கெதிரான காரசாரமான எதிர்வினைகள் இந்தியாவில் மாத்திரமல்ல இலங்கையின் முற்போக்கு இலக்கிய மூலவர்கள் என்று கருதப்படும் அ.செ. முருகானந்தன், தி.ச. வரதராசன், வ.அ. இராசரத்தினம் போன்றோர்களால் கூட முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் தலித் இலக்கியம் என்பதன் கருப்பொருள் விளக்கம், அதனை ஒரு தனியான இலக்கிய வடிவமாகக் கருதமுடியுமா? தலித்தின் பண்பாட்டுத் தோற்றச்சூழல் எது? பொதுவாக உலகளாவிய இலக்கிய வகையீட்டிலிருந்து இது எங்ஙனம் வேறுபடுகின்றது? அது புரியப் புறப்படும் சாதனை எவை? இலங்கைத் தமிழ்ச்சூழலில் தலித் இலக்கியத்தின் செல்வாக்கு என்ன? போன்ற பல்வேறு வினாக்களுக்கு விடை தேடுவதே இப்பத்தியின் குறிக்கோளாகும்.

தொடக்ககால இலக்கிய வகையீடு (Classification) இன்று பல புதிய புரட்சிகரமான மாறுதல்களுக்கு முகங் கொடுத்து வருவதனை எல்லா உலக மொழிகளிலும் காணமுடிகின்றது. இப்பகைப்புலத்தில் இலக்கியத்தை "சார்பு இலக்கியம்" (Applied Litreature), தூய இலக்கியம் (Pure Litreature) என்று பகுப்பாக்கம் செய்யும் போக்கு பெரிதும் தளர்ந்துள்ளது. மற்றொரு வார்த்தையில் குறிப்பிடுவதாயின் கலை இலக்கியக் கட்டமைப்புக் கூறுகளை (Structural elements of art உணர்ச்சி வடிவம் கற்பனை) அடிப்படையாகக் கொண்ட இலக்கியத்தினை Literature of Power, Literature of Knowledge என வேறுபடுத்தும் நிலை இப்போது தூர்ந்துபோய் தோற்றச் சூழல் பின்னணி சார்பியல் (Paticularism) போன்ற நிலை இலக்கிய ஆக்கங்களின் போக்குகளை வரையறை செய்வதில் பெரிதும் முன்னிற்கின்றன. இந்த வகையிலேயே இன்றைய அகநிலைப் போராட்டங்களால் பிறந்தகத்தைவிட்டு வெளியேறி வேறு இடங்களுக்கு குடிபெயர்ந்தவர்களது ஆக்க இலக்கிய முயற்சிகளை மேலைத்தேய இலக்கிய மூலவர்கள் நாடோடி இலக்கியம் என்றும், அமெரிக்க வெள்ளையர்களால் ஒடுக்கு முறைகளுக்குள்ளாக்கப்படும் கறுப்பின மக்களால் விடுதலைக் கூக்குரலாக முன்மொழியப்படும் இலக்கியப்பதிவுகள் நீக்ரோ இலக்கியம் (Negroid Literature) எனவும் வகையறாக்கம் செய்கின்றனர். பொதுவாக இத்தகு இலக்கிய வெளிப்பாடுகளை எதிர்ப்பு இலக்கியம் (Protest Literature) என வழங்குவர். படைப்பிலக்கியத்தின் கட்டுக்கோப்பையும் வெளிப்பாட்டாற்றலையும் செம்மையான முறையில் மதிப்பீடு செய்யும் திறனாய்வாளனுக்கு இவ்வகையீடு ஒரு பரிமாற்றுவசதியை அளிக்கிறது. படைப்பு முயற்சிகளின் கருத்து நிலை (Sence), உணர்ச்சி (Feeling), தொனி (Tone), உள்நோக்கு (Intention) இவை குறித்த நுணுக்கமான தர அளவீடுகளை வெளிக்கொணரவே தோற்றச்சூழல் சார்பியலின் அடிப்படையிலான இவ்வகையறா முக்கியமானது என்பது இலக்கியத் திறனாய்வாளர்களின் கருத்தாகும்.

இத்தகையதொரு பகைப்புலத்திலேயே இன்றைய தலித் இலக்கியம் பற்றிய கருத்தாடலை நாம் அணுக வேண்டியுள்ளது. ஏனெனில், நீக்ரோ இலக்கியப் பாதிப்பின் மாற்றுவிளைவே தலித்தின் தோற்றம் என்றால் இதில் இரு கருத்துக்கு இடமில்லை எனலாம். 1957 மகாராஷ்டிராவில் தோன்றிய இந்திய இலக்கிய வட்டத்தில் (ILC) தலித் இலக்கியம் ஒரு கிளர்ச்சிப் பூகம்பமாய் வெடித்தது. அதுகாறும் மௌனித்துக் கிடந்த மராட்டிய ஒடுக்கப்பட்ட இலக்கிய புரட்சிநாவுகள் தலித் எனும் புதிய ஆயுதத்தால் பல அதிர்ச்சியலைகளை அள்ளி வீசின. சாதிக்கொடுமையும், வர்ணாச்சிரம தர்மமும் புரையோடிப்போயிருந்த இந்திய சமூக வாழ்வியலின் அடிப்படைகளையே பெயர்த்து ஒரு புதிய சமூக அமைப்பின் ஆக்கக்கூறுகளை தலித் இலக்கியம் அடையாளம் காட்டியது.

இன்று இந்தியாவின் பல்வேறு மொழிகளில் குறிப்பாக மராட்டி, கன்னடம், மலையாளம், குஜராத் போன்ற மொழிகளில் மட்டுமன்றி தமிழ்ச் சூழலிலும் தலித்திய அலைகள் மிக வேகமாக வீசத்தொடங்கியுள்ளன. இந்தியாவின் ஏனைய மாநிலங்களைவிட மகாராஷ்டிராவிலேயே தலித் வேர் விட ஆரம்பித்தது எனலாம். இதற்கான காரணம் 1880 காலப்பகுதியிலேயே தீண்டாமை எதிர்ப்பு இயக்கமும் ஜாதிக்கட்டுப்பாடும் மற்ற மாநிலங்களை விட இங்கு இறுக்கமாகவே இருந்தது.

இந்திய சமூக வாழ்வின் அடிமட்ட மக்கள் எழுச்சியிலும், ஒடுக்குதலுக்குள்ளானவர்களின் கிளர்ச்சியிலும் பாபா சாகேப் அம்பேத்கருக்கு ஒரு மகத்தான பங்கு உண்டு. அம்பேத்கர் அவர் வாழும் காலத்திலேயே இந்து சமயத்தை மறுத்து பல கட்டுரைகள் எழுதினார். இந்தியாவில் நிலவும் சாதியக் கொடுமைகளுக்கு உரமிட்டு அதனை வளர்த்து விட்டதில் இந்து மதத்துக்கு நிறையவே பங்கு உண்டு. ஏனெனில், சாதி, குல வேறுபாடுகளை தூண்டி அதற்குத் தூபமிடும் வகையில் அமைந்த பல்வேறு கருத்துக்களையும், இதிகாசங்களையும் இந்து சமய வேத நூல்கள் கொண்டிருப்பதாக அம்பேத்கர் அடையாளப்படுத்தினார். இக்காலப் பகுதியில் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் சீர்திருத்தவாதியாக கருதப்பட்ட அம்பேத்கரின் இத்தகு கட்டுரைகளாலும் வெளியீடுகளாலும் உந்தப்பட்ட ஒரு புதிய தலைமுறை தலித் அரசியல் இயக்கத்தோடு தலித் இலக்கிய இயக்கத்தையும் கால்கோள் செய்தனர்.




இன்று பரவலாகக் கையாளப்படும் இத்தலித் இலக்கியம் எனும் தனித்த சொல்லாடல் மேலெழுச்சிக்கு மற்றொரு சூழலும் சாதகம் சேர்த்தது. அதாவது மேலைத்தேய பல்கலைக்கழகங்களில் கற்றுத்தேர்ந்த இந்தியர்கள் பலர் அவர்களது பல்கலைக்கழக இலக்கியச் சூழலினால் பெரிதும் பாதிப்படைந்தனர். 1950களில் கறுப்பு இலக்கியம் (Black Literature) அல்லது நீக்ரோ இலக்கியம் அமெரிக்காவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தலானது. வெள்ளையர்களின் முகங்களில் ஓர் அதிர்ச்சிப் பிரவாகத்தை அடித்துப்போனது. மேலைத்தேய இனவாத ராட்சதப் பசிக்கு இரையாகிப்போன கறுப்பு மக்கள் போராட்டத்தில் விடுதலைக்குரலாக கறுப்பு இலக்கியம் தன்னை தற்பிரகடனம் செய்தது. கறுப்பு எழுத்தாளர்களிடையே ஒரு புதிய கிளர்ச்சி நிலையை அது தோற்றுவித்தது. சுருங்கச் சொல்லின் ஒரு மௌனக்கலகத்தின் மையமாக நீக்ரோ இலக்கியம் புத்தெழுச்சி பெறலானது. உண்மையில் மேல்தட்டு வெள்ளை மக்களின் கறுப்பின ஒதுக்கல் (Reciale Segregation) மனப்பான்மையைக் கண்டித்தே இவ்வகை படைப்பிலக்கியங்கள் மேலெழுந்ததால் இதனை எதிர்ப்பு இலக்கியம் (Protest Literature) என்றனர்.

இந்த வரலாற்றுச் சூழல் மேலைத்தேய பல்கலைகழக இந்திய மாணவர்களைப் பெரிதும் கவர்ந்தது. நீக்ரோ இலக்கியத் தோற்றச் சூழலின் ஒத்திசைவு (Synchronocity) மகாராஷ்டிராவில் அதாவது மராட்டிய தலித்திற்கான பின் உந்துதல்களைப் பின்னலானது காலக்கிரமத்தில் சாதிய அடக்கு முறை வர்ணாசிரம தர்மம் என்பவற்றால் சிதைந்து, வதைந்து கிடந்த ஒட்டுமொத்த இந்திய சமூக வாழ்வின் குறுக்கு வெட்டுத் தோற்றத்தையும் பன்முகத் தன்மையையும் வரைந்து காட்டும் வேதனைக்கனலாகவும் கோபக் குரலாகவும் கொப்பளித்துக் கொண்டு வெளியே பாய இத்தகைய மேலைய நீக்ரோ இலக்கியம் சூட்சுமமாக துணை நின்றது எனலாம்.

## "தலித் இலக்கியம்" சொல்லாடல் விளக்கம்

'தலித்' என்னும் பதத்தை பலர் தவறாக புரிந்து வைத்திருக்கிறார்கள். இது ஒரு இந்து மொழிச் சொல் என அல்லது கன்னட மொழிப்பதம் என்றும் பலர் ஊகித்துக் கொள்கின்றனர். உண்மையில் இது ஒரு மராட்டிய மொழிச் சொல் ஆகும். மராட்டிய மொழியில், தலித் என்பது பூமியையும் மண்ணையும் அதில் வேர்பிடித்த ஒரு பொருளையும் குறிக்கும். அதை ஒட்டியே "இந்த மண்ணில் வேர்பிடித்தவர்கள்" என்ற பொருளில் தலித் என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. எனவே தலித்தின் அடிப்படை: இந்திய சமூக வாழ்வில் தமக்கும் ஒரு பூர்வீக உறுதிப்பாடு உண்டு என்பதாகும். அந்த வகையில் தங்களது விடுதலையும் விமோசனமும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என இவ்விலக்கிய வடிவத்திற்கான அடிப்படை விளங்கப்படுகின்றது. மற்றொரு வார்த்தையில் குறிப்பிடுவதாயின் தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்கப்பட்ட மக்கள் குழுமத்தின் வாழ்வியல் பரிமாணங்களை வல்லியமாகச் சித்திரிக்கும் படைப்பு முயற்சிகளே இன்று இந்தியாவில் 'தலித் இலக்கியம்" என்றும் பிரத்தியேக நாமம் பெறுகின்றது.

இந்த இடத்தில் இன்னொரு விவாதத்துக்கான மையப்புள்ளியும் இந்தியாவின் இலக்கிய வட்டத்தில் ஊடாடுவதையும் குறித்துக் காட்ட வேண்டியுள்ளது. அதாவது தலித் சாதியைச் சேர்ந்த எழுத்தாளனின் படைப்பிலக்கியம் மாத்திரமா இந்த தலித் இலக்கியம் என்ற வகையறாவில் சேர முடியும் அல்லது வேறு உயர் சாதியினரின் "ஒடுக்குமுறைக்கெதிரான" ஆக்க முயற்சிகளை தலித் இலக்கியம் என்று அழைக்க முடியுமா என்பதும் இன்றைய தமிழ்ச் சூழலில் கூட ஒரு சூடான விவாதப்பொருளாக மாறியுள்ளது. தலித் சாதியைச் சேர்ந்த எழுத்தாளனின் இலக்கியம் மட்டும்தான் அவனது அக நிலையை யதார்த்தத்தையும் நம்பகத் தன்மையையும் உண்மையின் வளையத்தையும் கொண்டிருக்க முடியும் என்பது சில குஜராத்திய இலக்கியவாதிகளின் வாதமாகும்.

எனினும், தாழ்த்தப்பட்டவர்களின் வாழ்தலுக்கான போராட்டத்தில் ஈடுபடுகின்ற மனித குலப்பகுதியின் நாடித்துடிப்புக்களை வார்த்தைகளில் வெளிப்படுத்த முயல்கின்ற எந்த இலக்கியப் படைப்பும் அதன் பரந்துபட்ட அர்த்தத்தில் தலித் இலக்கியமே. இங்கு இப் புரட்சிக்குரலைப் பாடுபவன் ஒரு பார்ப்பனியனாகக் கூட இருக்கலாம்" (பார்க்க: இந்திரன் பிணத்தை எரித்தே வெளிச்சம் பக்.43) இது இன்று செல்வாக்குப் பெற்று வரும் ஒரு கருத்தாக மாறிவருவதையும் அவதானிக்க முடிகிறது.

இந்த வகையில் சாதியம் என்ற நுகத்தடியில் பிணைக்கப்பட்டு மேட்டுக்குடியினரின் ராஜபாட்டையில் இழுக்கப்பட்டு உராய்வுகளுக்கு உட்பட்டு காயப் பட்டுக் கிடக்கும் உரிமையிழந்த மனித குலத்தின் மன்றாடல்களைப் பட்டவர்த்தனம் செய்யும் படைப்பிலக்கியங்கள் அனைத்துமே தலித் இலக்கியம் என துணிந்து கூறலாம். இன்று இந்தியாவில் தீண்டத்தகாதவர்கள், சேரிஜனங்கள், ஹரிஜனங்கள், அருந்ததியினர், ஆதி திராவிடர்கள் ஆகியோரின் அவலங்களையும் ஆதங்கத்தையும் இவ்விலக்கிய முயற்சிகள் காட்சிப் படுத்த விளைந்தாலும், உலகின் எந்த மூலையிலும் ஒதுக்கப்பட்டவர்களின் ஓலக்குரலாக தலித் ஒலிக்க முடியும். அதுவொரு உலகம் தழுவிய உரிமைக்குரல். புறக்கணிக்கப்பட்ட மக்களின் புரட்சி நாவு.

இலக்கியத்துக்கும் சமூக வாழ்க்கைக்கும் இடையிலான இறுக்கமான தொடர்பையும், சமூக நிர்மாண மாற்றம் என்பவற்றுக்கான அதன் காத்திரமான பங்களிப்பையும் தலித் இலக்கியம் கட்டிக்காக்க முனைவதானது அதன் முற்பாய்ச்சலுக்கான ஆருடம் எனலாம். ஏனெனில் மனிதர்களின் மீது பின்னப்பட்ட சமூகத்தின் சக்திகளையும் ஆற்றல்களையும் எதிர்த்தும் அதனோடு இணைந்தும் போராடிவரும் மனித உறுதியின் வெளிப்பாடே சிறந்த படைப்பிலக்கியமாகும்.

## தலித் இலக்கியத்தின் போக்கும் நோக்கும்

"தலித் இலக்கியம்" என்பது ஏனைய உலக மொழியிலான படைப்பிலக்கியங்களை விட்டும் மிகச் சேய்மையான அக நிலப்பண்புகளைக் கொண்ட ஒரு பிரத்தியேக இலக்கிய வகை அன்று. ஒடுக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வை அதாவது விளிம்பு நிலை மக்களின் கொந்தளிப்பு வாழ்வியலையும் விகாரமும் விசாரமும் சமவிகிதத்தில் இழையோடும் அவர்களது அவலத் தளங்களையும் அடையாளம் காட்டுவதோடு தமக்கு எதிரான ஆதிக்க சக்திகளின் அராஜகப் பேய்நகங்களைப் பிய்த்தெறியும் பணியையுமே இவ்வகை இலக்கியப் படைப்பு முயற்சிகள் முன்னெடுத்துச் செல்வதனால் அவை "தலித் இலக்கியம்" என வழங்கப்படுகின்றதே ஒழிய, இலக்கியத்தின் பொதுவான இயங்குவிதிகளையும் அமைப்பியல் நியமங்களையும் நிராகரிக்கும் போக்குகளை இதில் காணமுடியாது. எனினும் மராட்டிய தலித் இலக்கியப் படைப்பாற்றல்களில் சில சிரேஷ்ட குணாம்சங்கள் பிரதிபலிப்பதையும் மறுப்பதற்கில்லை. இவை மேலோட்ட பண்புகளேயன்றி அடிப்படை மாறுபாடுகளன்று என்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது. தலித் கவிதைகளோ, கதையாடல்களோ எப்போதும் தங்கள் யதார்த்தமான வாழ்வுப் பரிமாணங்களை சித்திரிக்கும் போக்கில் மிக எளிமையான நடையில் சாமான்ய மனித மனங்களிலும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஆக்கப்படுகின்றது. அந்த வகையில் சாமான்யம், எளிமை, (Mediocrity and Simlicity) தலித் இலக்கியத்தின் ஒரு முக்கிய பண்பாகும். மேலும் சமூகத்தின் மேற்கட்டுமானத்தில் பின்னப்பட்டிருக்கும் ஆதிக்கத்தளங்களின் ஆணிவேர்களையே உலுக்கிவிடும் அளவுக்கு சமூக வரலாற்றின் புறவயமான சாதிய மதிப்பீட்டளவு கோள்களை ஒட்டுமொத்தமாகவே தலித் மறுதலிக்கின்றது. ஆதலால் 'மறுதலிப்பு' என்பது அதன் அடிப்படைப் பண்புகளில் ஒன்றாகும்.

மேலும் சாதாரண தலித் இலக்கியப்படைப்புகள் வாசகர்களின் மனத்தில் ஒடுக்குமுறைச் சக்திகளுக்கெதிரான கிளர்ச்சி நிலையை எளிதில் தூண்டும் தன்மையைக் கொண்டுள்ளன. இத்திக்கில் நின்று நோக்குகையில் ஆர்பாட்டம் கிளர்ச்சி (Acclamation and excitement) என்பதும் இதன் அடிப்படைகளில் ஒன்றாகும். சுருக்கமாகச் சொன்னால் Bio - Politics கருத்தோடு இணைந்து Class Politics க்கு எதிரான தனது கோட்பாட்டை அது முன்னிறுத்த முனைகின்றது. எடுத்துக் காட்டாக இந்தியாவின் பிரபல தலித் கவிஞர் அர்ஜுன் தாங்களேயின் கவிந்தயொன்றைக் குறிப்பிட முடியும்.

சூரிய சந்திரர்களிடம் சொல்ல முடியுமா
யாரிடம்.... யாரிடம் நான் சொல்வது
இந்த 58 கோடி மக்களின் நாட்டில்
இப்படித்தான் நான் வாழ்தல் வேண்டும்
மக்களின் நெரிசலில்.. சாதிய விரிசலில்
யார் துயரத்தைக் கேட்பார்கள்...
எனக்கு ஜீவரசத்துடன் கூடிய
ஒரு வாழ்க்கை வேண்டும்
நெற்றியில் பூ சிக் கொண்டால்
விழிகளில் நீரை வரவழைக்கும்
ஒரு மண் வேண்டும் -
தன் ஒளிக்கதிர்களால்
என்னைத் தங்களோடு பிணைத்துக்கொண்டு
தடவிக் கொடுக்கும் ஒரு சூரியனும் சந்திரனும்
வேண்டும்'

கீழ்மட்ட வாழ்வியலின் துயரத்தையும் அவலத்தையும், ஆதங்கத்தையும் அதற்கு இயைவான விடுதலையையும் இதைப்போன்ற பன்னூறு கவிதைகள் பாட முனைகின்றன. மெழுகுபோன்ற நெளிவும் இதழ்போன்ற இதமும் கொண்ட இதயமுள்ளவர்களுக்கு இக்கவிதைகள் அழுகைப்பரிசைக்கூட சிலபோது அள்ளிக்கொடுத்து விடுகின்றது. "Whatever Literature may be Communicative it must be") என்ற நோக்கம் இங்கு எளிதாகவே ஈடுசெய்யப்படுகின்றது.

இந்தியாவில் மிகத் தொன்மையான காலம் முதலே சாதிய வேறுபாடுகளும், குலகோத்திர பாகுபாடுகளும், இந்தியாவின் சமூக அரசியல், பொருளாதார வாழ்வில்

நன்றி - நூலகத்திட்டம்



பெரும் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது. கிராமங்களின் எல்லைகளைக்கடந்து நகரங்களிலும் சாதியக் கலவரங்களும், சச்சரவுகளும் தலைவிரித்துத் தாண்டவ மாடுகின்றன. ஆனால், இந்திய சமூக வாழ்வியலில் ஆழவேரூன்றியுள்ள இத்தகு சாதியத்துக்கான ஊற்றுக்கண் இந்துமத ஆசாரங்களும் புராணங்களுமாகும் என இந்திய சமூகவியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இப்பிரச்சினை ஓயாமல் இருப்பதற்கு இதுவே முதற்காரணமாகும். இந்து மத நம்பிக்கை, சடங்குகள், கலாசார ஒப்பனைகள் (Cultural Trappings) சாதியக் கோட்பாட்டை வளர்த்தெடுப்பதற்கு பெரிதும் வலிமை சேர்த்துள்ளது எனலாம். வைதா, மனுசாஸ்திரம், பகவத்கீதை, பதஞ்சல், ஸ்ம்ஸ்கிய மகாபாரதம் ஆகிய சமய நூல்கள் மட்டுமன்றி தொல்காப்பியம் புறநானூறு போன்ற புராதன இலக்கிய நூல்களிலும் இக்கருத்துக்களை நாம் காணலாம்.

இந்தியாவில் நிலவும் இச்சமூக அடுக்கமைவு நிலை (Social Startification) நிலையினால் ஹரிஜனங்கள் எனும் தாழ்த்தப்பட்ட சாதியினர் தீண்டாமைக்குரியவர்களாகவும், இழிவானவர்களாகவும் ஓரவஞ்னையோடு நோக்கப்படுகின்றனர். அரசியல் ரீதியாக பின்தள்ளப்பட்டிருக்கும் இவர்கள் இந்தியாவில் கொந்தளிப்பு அரசிலின் கட்சி லாபங்களுக்காக வெறும் பகடைக்காய்களாக பயன்படுகின்றனர். மட்டுமன்றி வழிபாட்டுத் தலங்கள் வியாபார நிலையங்களில் மணமுறைகளில் கூட இவர்களது அபிலாஷைகள் வெறும் தசமங்களுக்குப் பின்னால் வரும் புறக்கணிக்கப்பட்ட பூச்சியங்களாக புறந்தள்ளப்படுவதானது, தலித் படைப்பிலக்கிய உத்வேகத்துக்கு உயிர்த்துடிப்பையும் உரமேற்றியுள்ளன. அதன் தவிர்க்கவியலாத தோற்றச்சூழலுக்கு இந்த சாதீயம் என்னும் பண்பாட்டு மரபுரிமையே (Cultural Aeritage) அடிப்படைக் காரணம் எனலாம். இந்த வகையில் தான் "தலித் இலக்கியம்" ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலைப் பிரத்தியேகமாகப் படம் பிடித்துக் காட்ட விளைகிறது என்கிறோம். அதுபோக இதுவொரு தனித்த இலக்கியவெளிப்பாடு அன்று.

எனினும் இன்று "தலித்" என்று அதனைக் குறிப்பிட்ட வகையீடு செய்ய வேண்டியதில்லை என்றும், அவ்வாறு வகைப்படுத்துவதால் இலக்கியத்தை நாம் குறுகிய எல்லைக்குள் கொண்டு வருகிறோம். மேலும் இலக்கியத்தின் பரந்துபட்ட ஒருமைப்பாடு இதனால் சிதைவுறுவதாகவும் காரசாரமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றது. எது எப்படியிருப்பினும் தமிழை விட மராட்டியிலும், கன்னடத்திலும் குஜராத்திலும் தலித்தின் இலக்கிய வளர்ச்சி விருட்சமாக விரிகின்றது. மாறுபடும் கருத்தாடல் தளங்களை உள்வாங்கிய வண்ணம் தனக்கென ஒரு தனித்த பாதையில் சமூக அடிமட்ட மாற்றம் என்னும் தொலைதூர இலக்கை நோக்கிய அதன் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இலங்கைச் சூழலில் டானியல், காவலூர் ஜெகநாதன் ஆகியோர் இதில் கணிசமான முயற்சியை முன்னெடுத்துள்ளனர். மற்றும் மலையக எழுத்தாளர்கள், யாழ்ப்பாணத்தில் சாதியத்திற்கெதிராக படைப்பாற்றலில் ஈடுபாடுள்ளோர் போன்றோரையும் இந்தவகை இலக்கிய ஆக்கவியலாளர்கள் எனலாம்.

முடிவாக தலித் இலக்கியம் புலம்பெயர்ந்தோர் இலக்கியம், ஒடுக்கப்பட்டோர் இலக்கியம் நீக்ரோ இலக்கியம், எதிர்ப்பு இலக்கியம், சங்க இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், தூயஇலக்கியம், சார்பு இலக்கியம் என்பவை திறனாய்வு செம்மைக்கான பரிமாற்று வசதியே அன்றி அது தன்னளவிலான குறிக்கோளன்று என்பதை மனதிற்கொண்டு எந்தப் படைப்பாற்றலும் கொண்டுள்ள படைப்புத் திறனையும் சமூக மாற்றத்தை நோக்கிய அதன் முற்பாய்ச்சலையும் பற்றிய மிகச் சரியான மதிப்பீடுகளுக்கு வருதலே ஒரு தார்மீகக் குறிக்கோள் கொண்ட இலக்கியவாதியின் பணியாக விளங்கும் என நினைக்கிறேன்.

**'தொப்புள்கொடி அறுக்கப்பட்ட**
**உடனே**
**நாம் அவனை நெருப்பில் சுடுவோம்**
**வளரும் நெருப்புத் துண்பங்களை**
**இரையெடுக்கும் பீனிக்ஸ் பறவை**
**ஆற்றல் நிரம்பிய வானத்தில் எழும்**
**இந்த நாடு உனக்கும் எனக்கும்**
**கொடுத்திராத**
**மகிழ்ச்சியையும் பெருமையையும்**
**அவன் தன் காலுக்கு கீழே**
**கொண்டுவருவான்.'**

**-இறக்காமம் றவூப் ஸெயின்**

# தீண்டாமை ஒழிப்பின் முன்னோடி எஸ்.ரி.என்னின் நினைவுகளும் மற்றும் சில குறிப்புகளும்-2

**1930கள்** சாதியால் ஒடுக்கப்பட்ட மக்கள் சற்று விழிப்புனர்வு பெற்ற காலமாக விளங்கியது. யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் ஆரம்பத்திலும், 1935இல் உருவாக்கப்பட்ட இலங்கையின் முதலாவது இடது சாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியும் இம் மக்களுக்கு துணைச்சக்திகளாக விளங்கின. தாழ்த்தப்பட்ட மக்களும் அவர்களின் முதலாவது அமைப்பான "ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கமும்" இம்மக்கள் தொடர்பான கோரிக்கைகளையும் ,போராட்டங்களையும் முன்னெடுக்கும் போது அவற்றை நியாயப்படுத்தி வெளி உலகுக்கு கொண்டு வருவதில் இவ்விரண்டு அமைப்புக்களும் பெரிதும் துணைபுரிந்தன.

இவற்றுக்கு புறம்பாக சர்வஜன வாக்குரிமையும் , பிரித்தானியர் ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட கட்டற்ற வர்த்தகமுறைமையும் கிறிஸ்தவ மிஷனரிகளினதும் இந்து நிறுவனங்களினதும் ஆட்சிக்கு போட்டியான கல்வி முயற்சிகளும் இவர்கள் மத்தியில் இருந்து சுயாதீனமாக சொந்தக்காலில் தனியாக நிற்கும் கூட்டத்தை உருவாக்கியிருந்தது. சாதிய அமைப்பில் ஒடுப்பட்ட சாதியினர் உற்பத்தி உறவுகளினால் உயர்சாதியினரின் மேலாதிக்க நிலைக்கு உட்பட்ட நிலைகளில் வாழ்வதே வழக்கமானதாகும். மேற்கூறிய நிகழ்வுகளினால் இவர்கள் மத்தியிலிருந்து ஒரு கூட்டம் இந்த இரும்புப் பிடியிலிருந்து விலகியது. அரசாங்க உத்தியோகம் பார்ப்பவர்களாகவும், சொந்த நிலங்களை வைத்திருப்பவர்களாகவும், சொந்த வர்த்தகத்தில் ஈடுபடுவர்களாகவும், நகர் புறத்தில் பட்டறைத் தொழில்களில் ஈடுபடுவர்களாகவும் இவர்கள் விளங்கினர். யாழ் நகரப் பகுதி, மானிப்பாய், சங்கானை, வதிரி, மட்டுவில் போன்ற இடங்களில் இவ்வாறான ஒரு கூட்டம் உருவாகியிருந்தது. இக் கூட்டமே சாதிப் போராட்டங்களுக்கு தலைமை தாங்கியது.



கல்வி, பொருளாதாரம் அரச உத்தியோகங்களில் வாய்ப்பினைப் பெறுதல் என்பதில் இந்த கூட்டம் அதிக கவனம் செலுத்தியது.பாடசாலை அனுமதியில் சமத்துவம், ஆசிரிய கலாசாலையில் சமத்துவம் போன்ற விடயங்களில் ஆரம்பத்தில் கவனம் செலுத்தியவர்கள் 30களின் இறுதியில் தாழ்த்தப்பட்டவர்களின் பொருளாதார முன்னேற்றங்களில் கவனம் செலுத்தினர்.

இதன் ஒரு நடவடிக்கையாக தாழ்த்தப்பட்டவர்களின் பிரதான தொழிலான கள்இறக்கும் தொழிலில் உள்ள சிரமங்களை நீக்கும் பொருட்டு 1933இல் வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கம் உருவாக்கப்பட்டது. எ.வி. தம்பையா இச் சங்கத்தினை உருவாக்குவதில் முன்னின்றார்.

1931 இல் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டதனால் அரசாங்க சபையில் பிரதிநிதிகளான உயர்சாதித் தமிழர்களும் தாழ்த்தப்பட்டவர்களினதும் வாக்குகளை பெறுவதற்காக தமது சாதி அகங்காரத்தை சற்று அடக்கி வாசித்து அவர்களின் நலன்களிலும் தவிர்க்க முடியாமல் அக்கறை காட்டினர்.

த்ாழ்ந்த சாதியினரும் வாக்குகளைப் பெற்று விடுவார்களே என்பதற்காக சர்வஜனவாக்குரிமையை கடுமையாக எதிர்த்த சு.நடேசன் (சேர்.பொன் இராமநாதனின் மருமகன்) பின்னர் இவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக 1936ம் ஆண்டு அரசாங்கசபையில் மரவரிமுறையை சட்டமாக்கினார். ஆரம்பத்தில் இவரது தொகுதியான காங்கேசன் துறைத்தொகுதியில் பரீட்சார்த்தமாக அறிமுகப்படுத்தப்பட்ட மரவரி முறை வெற்றியளித்ததைத் தொடர்ந்து பின்னர் குடாநாடெங்கும் அமுலாக்கப்பட்டது. இம்மரவரிமுறை உயர்சாதியினரின் கெடுபிடிகளிலிருந்து இவர்களது சீவல் தொழிலை பாதுகாக்க பெரிதும் உதவியது.

40களின் ஆரம்பத்தில் இச் சுயாதீனப் பிரிவினர் மத்தியில் தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் அவர்களின் ஒன்றுபட்ட குரல் அவசியம் என்பது உணரப்பட்டது. வட இலங்கையில் வாழும் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்த அமைப்பை உருவாக்க வேண்டும் என இவர்கள் தீர்மானித்தனர். எஸ்.ஆர். ஜேக்கப் ஆ.ம.செல்லத்துரை, வி.ஜே.அரியகுட்டி போன்றவர்கள் இதில் முன்னனியில் நின்றனர். இவர்களின் முயற்சியினால் "வடஇலங்கை ஒடுக்கப்படும் தமிழர்களின் மாநாடு" 1943ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 24ம் திகதி கூட்டப்பட்டது. இம்மாநாட்டிலேயே "வட இலங்கைச் "சிறுபான்மைத் தமிழர் மகாசபை" எனும் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக ஒடுக்கப்படும் தமிழ் ஊழியர் சங்கத் தலைவராகவும் சாதிப் போராட்டங்களை நடாத்தி, அவர்கள் மத்தியில் பிரபல்யமாகவும் இருந்தவரான "யோவேல் போல்" தெரிவு செய்யப்பட்டார். 1944இல் இவ் அமைப்பு இலங்கையில் வாழும் அனைத்து தாழ்த்தப்பட்ட தமிழர்களையும் இணைக்கும் வகையில் "அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் இரண்டாவது மாநாடு, 1944ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24ம் திகதி யாழ்நகர மண்டபத்தில் நடைபெற்றது. தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியிலிருந்து முதலியார் பட்டம் பெற்ற ஏ.பி.இராமச்சந்திரா மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

இம் மாநாட்டிலும் சாதிய உற்பத்தி உறவுகளிலிருந்து விடுபட்ட கூட்டத்தினரின் நலன்களே முதன்மைப்படுத்தப்பட்டன. தாழ்த்தபட்ட மாணவர்களின் கல்வி நிலையை முன்னேற்றுதல் , ஆசிரிய பயிற்சிக் கலாசலைத் தெரிவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் வாய்ப்பளித்தல், சிறு உத்தியோகங்களில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல், தாழ்த்தப்பட்டவர்களுக்கென தனியான சட்டசபைப் பிரதிநிதித்துவத்தைப் பெறுதல் போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அத்துடன் அடிநிலை தாழ்த்தப்பட்டவர்களின் பிரச்சினைகள் என்ற வகையில் சீவல் தொழிலைப் பாதுகாத்தல், பனைவள குடிசைக் கைத்தொழிலை வளர்த்தல் என்பன பற்றிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1944ம் ஆண்டு சோல்பரிக் குழுவினர் புதிய அரசியல் யாப்பினை சிபார்சு செய்வதற்காக இலங்கைக்கு வந்தபோது மகாசபையும் சாட்சியம் அளித்தது. உயர் சாதியினரது எதிர்ப்பையும் மீறி இரகசியமாக சோல்பரிக்குழு உறுப்பினர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் வசிப்பிடங்களும் காட்டப்பட்டது. இச்சாட்சியங்களில் மகாசபையின் இரண்டாவது மாநாட்டு தீர்மானங்களையே இவர்கள் அதிகளவில் வலியுறுத்தினர். ஆயினும் யாப்பில் உயர்சாதித் தமிழர்களின் கோரிக்கைகள் கவனத்தில் எடுக்கப்பட்டதே தவிர இவர்களின் கோரிக்கைகள் ஏறெடுத்தும் பார்க்கப்படவில்லை.

1945ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ம் திகதி மகாசபையின் மூன்றாவது மாநாட்டின் போது இவர்களின் கோரிக்கைகளில் சற்று வளர்ச்சி காணப்பட்டது. இவர்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் இந்திய தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவரான "அம்பேத்காரின்" கோரிக்கைகளோடு பெருமளவிற்கு ஒத்திருந்தன. தாழ்த்தப்பட்ட சட்டசபையில் விசேட பிரதிநித்துவத்தினை உருவாக்குதல், தாழ்த்தப்பட்டவர்களின் பொருளாதார கஸ்டங்களை விசாரிக்க ஒரு தனி ஆணைக்குழுவை உருவாக்குதல், கல்விப்பிரச்சினைகளில் சலுகைகளை வழங்குதல், உள்ளூராட்சிச் சபைகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஏற்றவகையில் வட்டாரங்கள் பிரிக்கப்படுதல் என்பன தீர்மானங்களாக எடுக்கப்பட்டன. இவர்கள் மத்தியில் இருந்து உருவான சட்டத்தரணி ஜே.டி.ஆசீர்வாதம் மாநாட்டிற்கு தலைமை வகித்திருந்தார்.

இக்காலகட்டத்தில் இடது சாரிக் கட்சிகளும் வடக்கே வளர்ச்சியுற ஆரம்பித்தன. 1940இல் லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து ஸ்ராலினை ஆதரித்தவர் வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து வெளியேறியவர்கள் , 1943இல் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினர். இக் கம்யூனிஸ்ட் கட்சி மு. கார்த்திகேயனால் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போது தாழ்த்தப்பட்டவர்கள் மத்தியில் இருந்தும் கம்யூனிஸ்ட்டுகள் உருவாகினர். டொமினிக் ஜீவா, டானியல், எம்.எல். சுப்பிரமணியம், கே. பசுபதி போன்றவர்கள் இவர்களில் முக்கியமானவர்களாக விளங்கினர். இவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் அங்கம் வகித்த அதே வேளை, தாழ்த்தப்பட்டவர்கள் என்ற வகையில் மகாசபையிலும் அங்கம் வகித்தனர். எனினும், மகாசபையின் ஆதிக்கம் இவர்கள் கைகளில் இருக்கவில்லை. மாறாக சற்று மிதவாதிகளான ஏனையவர்களின் கைகளிலேயே இருந்தது. இம்மிதவாதிகள் தீவிர போராட்டங்கள் எவற்றையும் ஆதரிக்கவில்லை. மகஜர்கள், வேண்டுகோள்கள் என்பவற்றினூடாக தாழ்த்தப்பட்டவர்களில் இருந்து தோன்றிய உயர் பிரிவினருக்கு சலுகைகளைப் பெற்றுக் கொடுப்பதே இவர்களின் நோக்கமாக இருந்தது. இவ் இரு பிரிவினருக்குமிடையிலான முறுகல் நிலை சபைக்குள் தொடர்ச்சியாக இருந்து வந்தது. ஏற்கனவே யாழ்ப்பாணம் வில்லூன்றி மயானப் பிரச்சினை இம் முறுகல் நிலையை வெளிக்காட்டியிருந்தாலும், 1947 தேர்தலே அதிகளவில் வெளிக்காட்டியிருந்தது.

1944ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 24ம் திகதி சாதி அடிப்படையிலான வழக்கத்திற்கு மாறாக ஆரியகுளத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட ஒருவரின் உடல் யாழ் வில்லூன்றிமயானத்தில் எரிக்கப்பட்டபோது உயர்சாதியினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் முதலி சின்னத்தம்பி என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியாகினார். இப் போராட்டத்திற்கு மகாசபையில் கம்யூனிஸ்ட்டுகள் ஆர்வம் காட்டிய அளவிற்கு மிதவாதிகள் ஆதரவு காட்டவில்லை. இப்பிரச்சினை தொடர்பான வழக்கில் சமசமாஜக் கட்சியின் தலைவர்களான சி.தர்மகுலசிங்கம், வி.சிற்றம்பலம் போன்றோர் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வாதாடினர்.

மகாசபை உருவான காலம் இரண்டாம் உலக யுத்தக் காலமானபடியால் இலங்கையின் தேர்தல்கள் அனைத்தும் ஒத்திப்போடப்பட்டன. இதனால் 1947 வரை தேர்தல்கள் குறிப்பாக சட்டசபைக்கான தேர்தல்கள் பிற்போடப்பட்டன. 1947ம் ஆண்டு புதிய சோல்பரி யாப்பின் கீழ் தேர்தல் நடைபெற்றது.இந்நாட்டில் இருபெரும் சக்திகளாக தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரும், ஐக்கியதேசியக் கட்சியினரும் போட்டியிட்டனர். மூன்றாவது சக்திகளாக இடது சாரிகள் விளங்கினர். தேர்தலில் யாருக்கு வாக்களிக்கப்பது என்பது தொடர்பாக மகாசபைக்குள் குழப்பநிலை காணப்பட்டது. தமிழர் காங்கிரஸ் கட்சியை எதிரியாக கருதியமையினால் அதற்கு வாக்களிப்பது தொடர்பாகவே முரண்பாடு காணப்பட்டது. மிதவாதிகள் ஐ.தே.கட்சிக்கு ஆதரிப்பதிலேயே அக்கறை காட்டினர். ஐ.தே.க. ஆட்சி அமைக்கக் கூடிய நிலை இருப்பதனால் உடன் சலுகைகளைப் பெறுவது இலகுவாக இருக்கும் என அவர்கள் கருதினர். குறிப்பாக நியமன சட்டசபை பிரதிநிதித்துவம் வழங்கப்படும் என ஐ.தே.கட்சியினர் ஏற்கனவே ஆசை காட்டியிருந்தனர். மாறாக மகாசபையில் இருந்த கம்யூனிஸ்டுகள் இடதுசாரிக் கட்சிகளை ஆதரிப்பதையே நோக்கமாக கொண்டிருந்தனர். இம் முரண்பாடுகள் பெரிதாக வளர்ச்சியடைந்ததால் இறுதியில் மகாசபை அமைப்பு ரீதியாக எவருக்கும் ஆதரவாக பிரச்சாரம் செய்வதில்லை எனத் தீர்மானித்தது. எனினும் மிதவாதிகளில் பெரும்பான்மையோர் ஐ.தே.க சார்பாக பிரச்சாரம் செய்தனர். குறிப்பாக சபையின் முக்கிய தலைவர்களில் ஒருவரான முதலியார் இராசேந்திரா, ஐ.தே.கட்சிக்காக நேரடிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். குறிப்பாக சபையின் பெரும்பான்மை ஐ.தே. கட்சிக்கு சார்பாகவே பிரச்சாரத்தில் ஈடுபட்டது. மகாசபையில் இருந்த இடது சாரிகளில் பெரும்பான்மையோர் கம்யூனிஸ்ட் கட்சிக்காக பிரச்சாரம் செய்தனர்.

மகாசபையின் பெரும்பான்மை ஐ.தே.கட்சிக்கு சார்பாக இருந்ததினால் தாழ்த்தப்பட்டவர்கள் தமிழ்த் தேசியத்திற்கு எதிரானவர்கள் என முதன் முதலாக முத்திரை குத்தப்பட்டது. ஏனெனில் இத் தேர்தல் , தமிழ்த் தேசியம் வலிமையானதா இல்லையா என்பதை பரிசீலிக்கும் ஒரு தேர்தலாகவே குடாநாட்டில் கணிக்கப்பட்டது. இதனால் தமிழ்த் தேசிய சக்திகளும், தாழ்த்தப்பட்டவர்களும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இரு துருவங்களாகினர்.

உண்மையில் இவ்இரு துருவ நிலைக்கு தாழ்த்தப்பட்டவர்களின் அமைப்புகளை விட தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்த அமைப்பு என்ற வகையில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியே அதிகபொறுப்பினை எடுத்திருக்க வேண்டும். ஒரு ஒடுக்கப்பட்ட சமூகமாக இருப்பதனால் தேசிய சக்திகளே முதலில் ஆதரவுக்கரத்தினை நீட்டியிருக்க வேண்டும். அவர்கள் நீட்டாதது துரதிஸ்டமானது. அவ்வாறு நீட்டுவதற்கு ஜீ.ஜீ. பொன்னம்பலத்தினதும், தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரதும் உயர் சாதித் தடிப்பு விட்டுக்கொடுக்கவில்லை.

ஆனால் சமூகத்திற்கு மாறன தாழ்த்தப்பட்டவர்கள் ஏற்கனவே ஆதரவுக்கரத்தினை நீட்டியிருந்தும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் உதறித் தள்ளினார். 1945 சோல்பரிக் குழுவினர் விசாரணை நடாத்திய போது மகாசபை தாழ்த்தப்பட்ட மக்கள் சார்பாக தனியான சாட்சியத்தை விரும்பியது. ஜீ.ஜீ. தனியான சாட்சியம் அளித்து தமிழர் ஒற்றுமையைக் குழப்ப வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். இது தொடர்பான ஒரு கூட்டம் மகாசபையால் யாழ்ப்பாணத்தில் கூட்டப்பட்டது. அதற்கு ஜீ.ஜீயும் வருகை தந்திருந்தார். அக்கூட்டத்தில் வைத்து ஜீ.ஜீயின் சாட்சியத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் நலம், கல்வி, தொழில், தீண்டாமை போன்ற விடயங்களும் இடம் பெற்றால் தாம் தனியாக சாட்சியம் அளிப்பதை கைவிடுவதாக மகாசபையினர் கூறினார். ஜீ.ஜீ.இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மகாசபையினர் தனியாக சாட்சியமளிப்பதாக முடிவெடுத்தனர்.

தமிழ்த் தேசியம் முதற் தடவையாக தாழ்த் தப்பட்டவர்களை இணைப்பதில் தோற்றுப்போனது.

இரண்டாவது சந்தர்ப்பம், 1947 தேர்தலின் போது இடம் பெற்றது. தேர்தல் அறிக்கைகளில் ஐ.தே.க. தீண்டாமைக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்ததோடு, அவர்கள் நலன் சார்ந்த பல திட்டங்களையும் முன்வைத்தது. அத்தோடு தேர்தலின் பின்னர் நியமன சட்டசபை பிரதிநிதித்துவம் வழங்குவதாகவும் உறுதியளித்தது. ஆனால் ஐ.தே.க.வின் அளவுக்கு கூட தமிழ்க்காங்கிரஸ் கட்சியினர் எதையும் முன்வைக்கவில்லை. தாழ்த்தப்பட்டவர்களை வேட்பாளர்களாக நிறுத்தவும் இல்லை.

ஐ.தே.க. தான் உறுதியளித்த படியே தேர்தலின் பின்னர், முதலியார் இராசேந்திராவை செனட்டராக்கியது. தமிழ்த் தேசியம் இரண்டாவது தடவையும் தாழ்த்தப்பட்டவர்களை இணைப்பதில் தோல்வி கண்டது.

மறுபக்கத்தில் மகாசபையினரும் அதில் அதிகம் பங்கு வகித்த இடது சாரியினரும் வளர்ந்து வரும் தமிழ்த் தேசியத்தை அடையாளம் காணத்தவறினர். இவ்வொடுக்கு முறைகளும் அதற்கு எதிரான போராட்டங்களும் இவர்களுக்கு ஒரு கேலிக்குரிய விடயங்களாகவே விளங்கின.

தேசிய இன ஒடுக்குமுறைகள் பூதம் போல வளர்ந்து இவர்களையும் கொள்ளை கொண்டபொது அரசியல் இவர்களை விட்டு மிகத் தொலைவிற்கு சென்றுவிட்டிருந்தது.

விளைவு தமிழ் மக்கள் மத்தியில் இருந்து மட்டுமல்ல தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்தும் கூட இவர்கள் அடையாளம் காணாமல் தூக்கி வீசப்பட்டனர்.

**-பரந்தாமன்**

நன்றி - நூலகத்திட்டம்



# கனடா; தமிழ்ப் பெண்கள் மீது வதை! தொடரும் சாதியம்...



மார்ச் மாதம் கனடாவின் ரொறன்டோ மாநகரில் இடம்பெற்ற கோரமான சம்பவம் ஒன்று தமிழ்ச் சமூகத்துக்குள் 'மூளாத் தீ ' போல உள்ளே கனன்று கொண்டிருக்கும் சில விஷயங்களை வெளிக்கொண்டு வந்து விட்டது. மிக இளம் பெண்கள் இருவர் இரண்டு பேருமே தமிழ்- இவர்களது நெருங்கிய ஆண் உறவினர்களால் கொடூரமாகச் சித்திரவதைக்கு உள்ளானார்கள். அவர்களுடைய உடலெங்கும் இஸ்திரிக்கைப்பெட்டியால் (Iron Box) சுட்ட காயங்கள் இருந்தன. என்று ரொறன்ரோ மாநகரப் பொலிசார் தமது அறிக்கையில் தெரிவித்திருந்தனர்.

கொடுமையான இச் சித்திரவதைக்கு இந்த இரண்டு இளம் பெண்களும் உள்ளாக்கப்பட்டமைக்கான காரணம் தமது பள்ளித் தோழர்களான ஆண்களுடன் அவர்கள் உரையாடியது தான் என பொலிசாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். இந்தச் சம்பவம் பற்றி, ரொறன்ரோ மாநகரில் வெளியாகிற பிரதானமான பத்திரிகைகளில் தகவல்கள் வெளிவந்தன. இந்தச் சம்பவம் பற்றி 'வல்லுநர் சில கருத்துக்களைத் தெரிவிப்பார்' என்ற தோரணையில் National Post என்றும் கனடிய ஆங்கிலத் தினசரிக்கு அபிப்பிராயம் தெரிவித்த ஒரு மூத்த பொலிசார் (வெள்ளை - ஆண்) "இத்தகைய கொடுமை ஒரு கலாசாரப் பிரச்சினை, தென்னாசியச் சமூகங்களில் மட்டும் தான் காணப்படுகிறது" என்று சொல்லப்போய் கனடாவிலுள்ள பெண்ணிய அமைப்புகளிடம் வாங்கிக் கட்டிக்கொண்டார்.

பெண்கள் மீதான வன்முறை எல்லா நாடுகளிலும் எல்லாப் பண்பாடுகளிலும் எல்லா இனத்துவக் குழுமங்களிலும் காணப்படுகிற ஒன்று என்கிற அடிப்படை உணர்வே இல்லாத ஒருவர்தான் ரொறன்ரோ மாநகர பொலிஸ் உயர் அதிகாரிகளுள் ஒருவராக இருக்கிறார் என்பதைக் கவனியுங்கள். ஆனால் இதில் ஒன்றும் பெரிதாக ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

இளம் தமிழ்ப் பெண்கள் கொடுமைக் குள்ளாகிய சந்தர்ப்பங்கள் அபூர்வமானவை அல்ல. ரொறன்ரோவில் தமிழ்ச் சமூகத்தில் குடும்ப வன்முறையும், பெண்கள் மீதான இம்சிப்பும் நிறையவே இடம் பெற்று வந்தாலும் அவை வெளித் தெரிய வருவதில்லை. பாதிக்கப்பட்ட தமிழ்ப் பெண்களுடன் பணிபுரியும் சமூக சேவையாளர்களுக்கும் உளவள / உள நல ஆலோசகர்களுக்கும் தான் எமது சமூகத்தில் விரவியிருக்கிற இந்த மோசமான வன்முறை பற்றித் தெரிய வருகிறது. இவை பற்றிய அக்கறையும் விழிப்புணர்வும் ரொறன்ரோவிலிருந்து வெளியாகிற ஒரு தமிழ் வாரப் பத்திரிகைகளுக்கும் கிடையாது. (ஏழு தமிழ் வாரப் பத்திரிகைள் என்றவுடன் அதிர்ந்து போக வேண்டாம். இப்பத்திரிகைகளின் 80 வீதமான பக்கங்கள் புடலங்காய், பூசணிக்காய், லக்ஸ்சோப், தலைமுடி உதிராமலிருக்க அபூர்வ மூலிகை, நல்லி சில்க்ஸ், படையப்பா, என் சுவாசக்காற்றே, மணவறை-கல்யாண மண்டபம் - சாப்பாட்டுடன் ஐயரும் பிராமணியமும் கூடவே றெடிமேட்டாகக் கிடைக்கிற Package deal என்பவற்றுக்கான என்பவற்றுக்கான விளம்பரங்கள் ஏனைய பக்கங்களில் பத்து வீதம், வியாழமாற்றம், சனிப்பெயர்ச்சி, இந்த வார பலன்களில் போக எஞ்சிய பக்கங்கள் வீரகேசரி, தினமுரசு, சரிநிகர், Tamil net.com. உபயம்!)

இந்த வதைச் சம்பவம் தொடர்பாக இன்னுமொரு "வல்லுநர்" National Poat பத்திரிகைக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார். Tamil Women Community Services கனடிய பெண்கள் சமூக சேவைகள் அமைப்பு - என்னும் நிறுவனத்தின் பணிப்பாளராக இருக்கும் திருமதி கரினா மகேந்திரா என்னும் அம்மணிதான் அந்த வல்லுநர்.

"பெண்கள் மீது இத்தகைய கொடுமைகளைச் செய்பவர்கள் கல்வி அறிவு குறைந்த, கீழ்சாதித் தமிழர்கள் தான். கனடாவின் வளர்ச்சியடைந்த நிலைமைக்கு இவர்களால் ஈடுகொடுக்க முடியாமல் இருக்கிறது ஏனென்றால் பின்தங்கிய கிராமப்புறங்களிலிருந்து தான் இவர்கள் இங்கு வந்துள்ளார்கள் என்பது தான் திருமதி மகேந்திரா அவர்கள் தெரிவித்தது.

திருமதி மகேந்திராவின் கருத்துக்களில் அப்பட்டமாக வெளிப்படுகிற சாதியம், இனவாதம் இரண்டையும் பற்றி ரொற்னரோ தமிழ்ச் சமூகம் அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. பெண்ணியம், சாதிய எதிர்ப்பு ஆகியவற்றில் தீவிரமாக உழைத்து வருபவர்களுக்கு ரொறன்ரோ தமிழ்ச் சமூக நிலை ஒரு சவாலாக உள்ளது. ஒரு பொறுப்பான சமூக சேவை நிறுவனத்தின் பணிப்பாளரிடம் இருந்தே பஞ்சமர்கள் பற்றிய மோசமான வகைமாதிரிகள் (Stereotypes) வெளிப்படையாக பேசப்படுவதும் ஏனைய தமிழ் நிறுவனங்கள் வானொலி மற்றும் விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புக்கள் எல்லாம் இதனைக் கண்டிக்கத் தயங்குவதும் அல்லது கண்டிக்க மறுப்பதும் எங்களுடைய கவனத்துக்கும் கண்டனத்துக்கும் உரியது. சாதிப்பிரச்சினைகள், பெண் ஒடுக்குமுறை பற்றிப்பகிரங்கமாகப் பேசாமல் மூடி மறைத்து விடுவதுதான் தந்திரோபாயமாக இருக்கிறது.

இந்தச் சம்பவங்களைக் கண்டித்த , "சாதியம் இங்கேயும் தொடர்கிறது" என்ற தலைப்பில் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரம் ஒன்று எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பப் பட்டபோதும் அது இருட்டடிப்புச் செய்யப்பட்டு விட்டது.

"மறக்க வேண்டாம்! திருமதி மகேந்திரா ஒரு வெறும் உதாரணமும் குறியீடும் மட்டுமே. எமக்குள்ளேயும் பல மகேந்திராக்கள் உள்ளனர்" என்று இந்தத் துண்டுப் பிரசுரத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இந்தத் துண்டுப் பிரசுரம் ஒரு அநாமதேயப் பிரசுரம் அல்ல என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டியது ஆகும்.

இளம் பெண்கள் வதை செய்யப்பட்டது தொடர்பாக ரொறன்டோவில் உள்ள இருபத்தி நான்கு மணி நேரத் தமிழ் வானொலிச் சேவையான CTBC (Canadian Tamil Broadcastic Corparation )யில் ஒலிபரப்பான நேயர்களம் தொலைபேசி மூலம் கலந்து கொண்ட நிகழ்ச்சி ஒன்றில் இடம் பெற்ற கருத்துக்களம் அதிர்ச்சி தருபவை "இளம் பெண்களை வதை செய்திருக்கக் கூடாதுதான்" என்று பலரும் கருத்துத் தெரிவித்திருந்தாலும் இவர்களைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் சகோதரர்களுக்கும் ஆண் உறவினர்களுக்கும் உள்ளது என்பது பலரது தாக இருந்தது.

வயது வந்த இளம் பெண்கள் ஆண்களுடன் பேசுவது எமது பண்பாட்டுக்கு அழகல்ல, அது பிழையானது என்ற 'மணிமொழியை திரு. எம். எஸ். அலெக்ஸாந்தர் என்ற ஒரு தமிழ் ஆசிரியர் தெரிவித்திருந்தார். இலங்கையின் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஒன்றின் அதிபராகப் பணிபுரிந்தபின் ரொறன்ரோவில் தமிழ்மொழியை ஒரு பாடமாகப் புகட்டுபவர் இவர் என்பது மேலதிகத் தகவல். பண்பாடும் பெண்பாடும் படும் பாட்டைப் பார்த்தீர்களா?

தமிழ் ஈழம் வந்த பிற்பாடு இந்த மாதிரிப் பிரச்சினைகள் எல்லாம் வெய்யிலைக்கண்ட பனிபோல ஓடிவிடும். எனவே தமிழா இப்போது நீ செய்ய வேண்டியது, விழி! எழு! போராடு! என்று ஒரு பகுதியினர் கூப்பாடு போடுகின்றார்கள். பெண்ணியம் கிளப்பும் பிரச்சினைகளையும் சாதியப் பிரச்சினைகளையும் வர்க்கப் பிரச்சினைகளையும் அவ்வளவு எளிதாக Post - Pone பண்ணிவிட முடியுமா என்ன?

**— கிப்புளிங் அப்புலிங்கம் — கனடா**

---

# ஏன் தான் இந்தப் பொய்யறிக்கைகளோ?

பிட்டும் தேங்காய்ப்பூவுமாக இணைந்திருந்த சகோதர இனத்தவர்களான தமிழர்களும், முஸ்லிம்களும் தொடர்ந்து பிணைந்து இருக்க வேண்டுமென்பதே அனைவரினதும் விருப்பமாகும். ஆனால், இதற்கு சாவுமணி அடிப்பது போன்று சில சம்பவங்கள் அம்பாறை மாவட்டத்தின் வீரமுனைக் கிராமத்தில் நடந்தேறுவதைக் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை.

1990ம் ஆண்டில் விடுதலைப்புலிகளும், அரசும் சமாதான உடன்படிக்கையை மீறி யுத்தத்தை ஆரம்பித்த மறுகணமே முஸ்லிம் தீவிரவாதப்போக்குள்ள சிலர் படையினருடன் இணைந்து தமிழர்களின் உயிர், உடமைகளில் கைவைக்கலாயினர். அப்பாவி இளைஞர்களை விடுதலைப்புலிகள் என நாமஞ்சூட்டி துன்புறுத்தலில் ஈடுபட்டனர். சம்மாந்துறைக்கு தொழில் ரீதியாகச் சென்றவர்களும், வீரமுனை எல்லைப்புறங்களில் வாழ்ந்த சிலரும் இந்தத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டனர். கிட்டத்தப்பட்டவர்கள் இன்றுவரை என்னவானார்கள் என்பதை அறியமுடியாமல் இருக்கின்றது. இவ்வேளையில் விடுதலைப்புலிகள் ஆங்காங்கே முஸ்லிம்களைத் தாக்கலாகினர். இதனால் சினமுற்ற சம்மாந்துறை முஸ்லிம்கள் வீரமுனையினுள் ஆயுதங்களுடன் புகுந்து மீளத் தாக்கினர். இச்சம்பவத்திலிருந்து எஞ்சிய அப்பாவித் தமிழர்கள் அயலில் உள்ள தமிழ்க் கிராமங்களுக்குச் சென்று தஞ்சம் கோரினர். தஞ்சம் கோரிய இடத்திலேயே இரண்டு வருடங்கள் வாழ்ந்து அரசினால் பாதுகாப்பு தரப்படும் எனும் உத்தரவாதத்தில் மீள்குடியேற்றம் பெற்றனர். முதற்கட்டமாக சிங்கள அதிகாரியுடன் கூடிய உப பொலிஸ் நிலையமொன்று அமைக்கப்பட்டு நீதி பேணப்பட்டதால் மக்கள் நிம்மதியாக வாழ்ந்து வந்தனர். இருந்தும் சில புகைச்சல் சம்பவங்கள் இடம்பெற்றாலும் பெரிதுபடுத்தாமல் வாழலாகினர். (1996ம் ஆண்டு திருவெம்பாவை உற்சவத்துக்குச் செல்லவென அதிகாலையிலே தயாராக இருந்த சகோதரர்கள் இருவர் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் வீட்டினுள் வைத்தே சுட்டுக்கொல்லப்பட்டனர்.)

விடுதலைப் புலிகள் யுத்தத்தைத் தொடருவதோ அல்லது ட்ரான்ஸ்போமர் தகர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுவதோ இந்தத் தமிழ் அப்பாவி மக்களினால் ஊக்குவிக்கப்படும் செயலல்ல. அதைத் தடுப்பதும் ஊக்குவிப்பதும் அரசாங்க படைத்தரப்பையே சார்ந்துள்ளது. கடந்த 16ம் திகதி இரவு பாராளுமன்ற உறுப்பினர் யு.எல்.எம். முகைடீன் அவர்களின் வீட்டிற்கு குண்டு வீச்சு இடம்பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து தெருவால் சென்ற இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் தாக்குதல் நடத்தியவர்களைப் பிடிக்க முனைந்தபோது ஆயுத தாரிகளின் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அப்பாவிகள் எவராவது தாக்கப்பட்டால் கண்டிக்க வேண்டியது மனித தர்மம். அந்த வகையில் இந்த இளைஞர்களுக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொலை செய்ய முயற்சித்த ஆயுததாரிகளை வன்மையாகக் கண்டிக்க வேண்டிய சூழ்நிலை இதுவாகும். இச்சம்பவத்துக்கு மறுகணம் சம்மாந்துறைப் பள்ளிவாசல்களில் உள்ள ஒலிபெருக்கியில் "விடுதலைப் புலிகள் வந்துவிட்டார்கள் கவனமாக இருக்கவும்" என ஒலி பரப்பப்பட்டது. இதன் பின்னர் வீரமுனை எல்லைக்கு விரைந்து வந்த ஊர்காவற் படையினர் தமிழர்களைத் துன்புறுத்தத் தொடங்கினர். ஏற்கெனவே முஸ்லிம் ஆயுதபாணிகளால் நொந்து வீடு வாசல் உறவுகளை இழந்து மீண்டும் வாழ வந்த அப்பாவி மக்கள் தாங்கிக்கொண்டு இருப்பார்களா? பயத்தில் ஊரின் கண்ணாய் இருக்கும் ஆலயத்திலும் பாடசாலையிலும் இரவோடிரவாக ஓடிவந்து தஞ்சமடைந்தனர். இவ்விடயம் உடனடியாக பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டதும், பாதுகாப்பு தரப்புக்கு அறிவிக்கப்பட்டு முஸ்லிம் தமிழ் இன விரிசல் இடம்பெறாமல் தவிர்க்கப்பட்டது. காலையில் நிலைமை சுமுகமாகத் தெரியவே ஆலயம், பாடசாலை என்பவற்றில் தஞ்சமடைந்திருந்தவர்கள் தங்களது வீடு வாசல்களுக்குத் திரும்பினர்.

மறுநாள் 17.02.1999 மாலை எல்லைப்புறத்தில் குண்டு வீச்சுச் சத்தங்களும், துப்பாக்கி வேட்டுக்களும் தொடர்ந்த வண்ணமிருந்தன. வேட்டுச் சத்தங்கள் காதைச் செவிடாக்கவே மீண்டும் பதட்டமடையலாகினர். அவ்விடயமும் பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் சம்மாந்துறை பொலிசாரிடமும், அம்பாறை பிரதம பொலிஸ் அத்தியட்சகருக்கும் அறிவிக்கப்பட்டு விசாரித்தபோது விடுதலைப் புலிகள் ஊருடுவி ட்ரான்ஸ்போமரைத் தகர்க்க முனைந்தபோது தாங்கள் விரைந்து தடுத்து விட்டோமெனப் பதில் கூறப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால், குண்டுச்சத்தம் கேட்ட பகுதியில் எவ்வித ட்ரான்ஸ்போமரும் இல்லை.

மறுநாள் வீரமுனை எல்லையில் மதிலில் "விடுதலைப்புலிகளுக்கு உதவினால் கொல்லப்படுவீர்கள்" எனும் சாரத்துக்கமைய சுவரொட்டி "சம்மாந்துறை இளைஞர்கள் அமைப்பால்" ஒட்டப்பட்டிருந்தது. (இச்சுவரொட்டியை பல வெகுஜன நிறுவனங்கள் வந்து பார்த்துச் சென்றுள்ளன.) இவ்விடயம் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தினால் பொலிசாரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. மாறி மாறி இடம்பெறும் சம்பவங்களினால் இப்பகுதித் தமிழ் மக்கள் அச்சத்துடனேயே வாழ நேர்கின்றது.

மீண்டும் மீண்டும் வீரமுனை மக்கள் அல்லல்படும் விடயம் வெகுஜன ஊடகங்கள் மூலமாக அம்பலத்துக்கு வந்ததும் முஸ்லிம் ஆயுத பாணிகளின் அடாவடித்தனம் உலகுக்குத் தெரிந்துவிடுமே எனப் பயந்த சம்மாந்துறை பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர் சம்மாந்துறைப் பொலிசாருடன் இணைந்து இச்சம்பவத்தினை மூடி மறைக்கும் நோக்கில் செயற்பட்டனர். சமாதானக் கூட்டமொன்றினை சம்மாந்துறை தாறுல்ஹாம் வித்தியாலயத்தில் நடத்தினர். இதில் முஸ்லிம்கள் தரப்பில் பலரும், பொலிசார் அழைத்ததற்கிணங்க வீரமுனை தமிழர்கள் மூவரும் கலந்து கொண்டனர். இவர்கள் வீரமுனை மக்கள் சார்பில் செல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கலந்துரையாடலில் தமிழ் - முஸ்லிம் உறவு பாதிக்கப்படக்கூடாது என்பதே கருப்பொருளாக இருந்தது. இறுதியில் வீரமுனை எல்லைப்புற மக்கள் 16ம் திகதி இரவு ஆலயத்திலும், பாடசாலையிலும் தஞ்சமடைந்த விடயம் மறுநாள் பத்திரிகைகளிலும் பிரசுரமாகியிருந்தன. இச்சம்பவம் நடக்கவில்லையென அறிக்கைவிடவேண்டுமெனவும் முஸ்லிம்கள் சார்பில் கோரப்பட்டது.

தமிழ் மக்கள் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் அன்றிரவு தஞ்சமடைந்த விடயம் உண்மை. இதனை மறுத்து தங்களால் கருத்துக்கூற முடியாதென கருத்தரங்கில் கலந்து கொண்ட ரி. சபாநாயகம், எஸ். அருளம்பலம் (முருகேசு), பாஸ்கரன் போன்றோர் கூறினர். இதனைத் தொடர்ந்து சமாதானக் கூட்டம் கலைந்தது. இக்கருத்தரங்கில் தீர்மானங்கள் தொடர்பாக அறிக்கை எதுவும் தயாரிக்கப்படவுமில்லை. அதில் ரி. சபாநாயகம் ஒப்பமிடவுமில்லையென மற்றைய இருவரும் கூறுகின்றனர்.

பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத்தலைவர் யூ.எல்.ஏ. கபூருடன் இணைந்து வீரமுனையைச் சேர்ந்த ரி. சபாநாயகம் கலந்துரையாடல் தொடர்பான தீர்மானங்களை அறிக்கையாக வெளியிட்டுள்ளதாக தினக்குரலில் செய்தி பிரசுரமாகியுள்ளது.

ரி. சபாநாயகம் வீரமுனை மக்களின் பிரதிநிதியாகச் செல்லாமல் கோயில் தர்மகர்த்தா செயலாளர் தானேயென கூறி ஒப்பமிட்டிருப்பதற்கும் ஸ்ரீசிந்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய அறங்காவற்குழுவிற்கும் அல்லது ஊரவர்கட்கும் எதுவித தொடர்புமில்லையென வீரமுனை ஸ்ரீசித்தாயாத்திரைப் பிள்ளையார் ஆலய நிர்வாகசபையினர் அறிக்கை விட்டுள்ளனர்.

உண்மைக்குப் புறம்பான ஒரு நடவடிக்கையேயன்றி வேறில்லை.

**இளையஅவதானி, வீரமுனை.**

நன்றி - நூலகத்திட்டம்



குவாட்டமாலா:

# அமெரிக்காவின் கறைபடிந்த வரலாறு!

கொஸோவோ மக்களை சேர்பியர்களுடைய இராணுவப் பயங்கரவாதத்திலிருந்தும் இனப்படுகொலையிலிருந்தும் பாதுகாக்கிற தார்மீக கடமையைத் தலை மேல் ஏற்றுக் கொண்டதாக கூறுகிற அமெரிக்க அரசை பாரதூரமாகக் குற்றம் சாட்டி ஒரு நீதி அறிக்கை சென்ற மாதம் குவாட்டமாலா நாட்டில் வெளியாகி இருக்கிறது.

குவாட்டமாலாவில் இரண்டு லட்சம் மக்களை - இவர்களில் பெரும்பாலானோர் குவாட்டாமாலாவின் பூர்வீக மக்களான மாயன் மக்கள் ஆவர்- கொன்றொழித்த அரசும் அதனுடைய மரணப்படைகளும் 80களில் அமெரிக்க அரசிடம் இருந்தும் உை ய யிடமிருந்தும் எராளமான உதவிகளைப் பெற்றிருந்தன. இராணுவ உதவி, உளவு சேவைகளில் உதவி, கோடிக்கணக்கான டொலர் பண உதவி என குவாட்டமாலாவின் அரசுக்கு அமெரிக்கா தாராளமாக வழங்கி இருந்தது.

பூர்வீக மக்களின் சமூக நீதிக்காக போராடிய விடுதலை இயக்கங்களுக்கும் குவாட்டமாலா அரசுக்கும் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்து கடந்த கால அநியாயங்களை விசாரணை செய்து ஆவணப்படுத்தி அறிக்கை செய்ய ஒரு நீதிவிசாரணைக்குழு (Truth Commission) அமைக்கப்பட்டது. இத்தகைய ஆணைக்குழு ஒன்று தென்னாபிரிகாவிலும் அமைக்கப்பட்டிருந்தது. இத்தகைய ஆணைக்குழுக்களால் என்ன பயன்? கொல்லப்பட்டவர்களும் காணாமல் போனவர்களும் திரும்பி வரவா போகிறார்கள்? என்கிற குரல்கள் எழாமல் இல்லை.

ஆழமான மனக்காயங்களை ஆற்றுவதற்கும் தமது குழந்தைகளுக்கும் குடும்ப உறவினருக்கும் என்ன நடந்தது என்றாவது அறிவதற்கும் அதன் விளைவான துயர நீக்கம் (Healing process) மெல்ல மெல்ல இடம் பெறுவதற்கும் இத்தகைய நீதி விசாரணை ஆணைக்குழுக்கள் பெருமளவுக்கு உதவக்கூடும் என்பது தென்னாபிரிக்க அனுபவங்களில் இருந்து நாம் தெரிந்து கொண்டது.


குவாட்டமாலாவில் கொல்லப்பட்ட இரண்டு லட்சம் பேரின் படுகொலைக்கு 98வீதமும் அரசும் அதனுடைய மரணப் படைகளுமே பொறுப்பு என்று குவாட்டமாலாவின் ஆணைக்குழு ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளது. இந்தப் படுகொலைக்குப் பொறுப்பான அரசையும் இராணுவத்தையும் மரணப்படைகளையும் எல்லா வழிகளிலும் ஆதரித்து வந்த அமெரிக்க அரசையும் ஆணைக்குழு நேரடியாகக் குற்றம் சாட்டியுள்ளது.

அண்மையில் குவாட்டமாலாவுக்குச் சென்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டன் அமெரிக்கா நடந்து கொண்ட முறை தவறானது என்று சொன்னதோடு நிறுத்திக் கொண்ட விட்டார்.

பழியை அவருக்கு முன்பிருந்த ஜனாதிபதிகளான றொனால்ட் றேகன், ஜோர்ச் புஷ் ஆகியோர் மீது வசதியாகப் போட்ட விடலாம் என்று அவர் நினைத்திருக்கக் கூடும். ஆனால் இன்று வரை கொலம்பியா, துருக்கி, இந்தோனேஷியா, இலங்கை போன்ற ஒடுக்கு முறை அரசுகளுக்கும் அவ்வரசுகளின் இனப்படுகொலைச் செயல்களுக்கும் கிளிண்டன் நிர்வாகமும் உதவி வருகிறது என்பது ரகசியம் அல்ல.

குவாட்டமாலாவின் ஆணைக்குழு ஊ ஐ யுயின் இரகசிய ஆவணங்கள் பலவற்றையும் அமெரிக்க அரசின் வெளியுறவுத்துறையின் இரகசிய ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. National security





Archives என அழைக்கப்படும் ஒர ஆய்வு நிறுவனமே இத்தகைய ஆவணங்களை குவாட்டமாலாவின் ஆணைக்குழுவுக்குப் பெற்றுக் கொடுத்தது. இந்த ஆவணங்கள் வெளியாவதில் கிளின்டன் நிர்வாகத்துக்கு ஆட்சேபனை இருக்கவில்லை என்று தெரிகிறது.

1954 ஆம் ஆண்டு குவாட்டமாலாவில் இடம்பெற்ற ராணுவ சதிப் புரட்சிக்கு CIAதான் பொறுப்பு என்பதும் சதிப் புரட்சியின் பின்னான எல்லா வலதுசாரி ராணுவ அரசாங்கங்களையும் அமெரிக்க அரசும் CIAயும் தான் வழி நடத்தியுள்ளன என்பதும் இந்த ஆவணங்களூடாகத் தெரிய வருபவை. கொம்யூனி-ஸத்தை அழிப்பது என்ற பெயரில் இலட்சக்கணக்கான அப்பாவி வறிய நிலமிழந்த பூர்வீக மக்களைக் கொன்றெழித்தமை தான் லத்தீன் அமெரிக்காவில் CIA யாலும் அமெரிக்க அரசாலும் செய்ய முடிந்தது. அப்போது அமெரிக்காவின் இராணுவத் தளபதியாக இருந்த ஜேம்ஸ் டூலிட்டில் (James Doolittle) பின்வருமாறு விளக்குகிறார்.

எங்களுடைய விளையாட்டுக்கு எந்த விதிகளும் ஒழுங்குகளும் இல்லை: இதுவரை காலமும் பேசப் பட்டுவந்த மனித ஒழுக்கம், மனிதம் எல்லாம் இங்கு சரிப்பட்டு வராது. இப்படி அவர் எழுதுகிற அதே நேரம் CIAயும் குவாட்டமாலாவின் ராணுவமும் கொல்லப்பட வேண்டியவர்களின் பட்டியலைத் தயாரிப்பதில் மும்முரமாக இருந்தன.

இந்த ஒத்துழைப்பு 30 வருடங்களாகவே நீடித்தது என்று நீதி விசாரணைக் குழுவின் அறிக்கை தெரிவிக்கிறது. Death squads என்று அழைக்கப்படுகிற அரச மரணப்படைகளை உருவாக்கிப் பயிற்சியளித்தும் அமெரிக்க அரசம் CIAயும் என்பது இந்த அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

றேகன் ஆட்சியிலிருந்த போது நிலைமை இன்னும் மோசமானது. பூர்வீக மக்களான மாயன் இனத்தவர்கள் வாழும் நுாற்றுக்கணக்கான கிராமங்களை குவாட்டமாலா ராணுவமும் மரணப்படைகளும் தீப்பற்ற வைத்த போது குவாட்டமாலா இராணுவ அரசு மனித உரிமைகளை எவ்வளவு அற்புதமாகப் பாதுகாக்கிறது என றேகன் உரையாற்றியிருக்கிறார். அக்காலத்துக்குரிய அமெரிக்க அரசின் உலக நாடுகளில் மனித உரிமை மீறல்கள் பற்றிய வருடாந்த அறிக்கையிலும் குவாட்டமாலா இராணுவ அரசுக்கு நல்ல பெயரையே அமெரிக்கா வழங்கியிருந்தது.

1990 இல் குவாட்டமாலாவுக்கான இராணுவ உதவியை நிறுத்தி விட்டதாக ஜோர்ஜ் புஷ் அறிவித்திருந்தாலம் CIAயின் ஊடாக ஆயுத மற்றும் பண உதவிகள் மரணப்படைகாரருக்கு கிடைத்தே வந்தன. நீண்ட காலமாக குவாட்டமாலாவின் இராணுவம் புரிந்து வந்த மனித உரிமை மீறல்களையம் படுகொலைகளையும் அமெரிக்க காங்கிரஸிடம் வெளிப்படையாகத் தெரிவிக்கவில்லை என்ற காரணத்தால் இரண்ட CIA அதிகாரிகளை வேலை நீக்கம் செய்து விட்டமையோட அமெரிக்க அரசு திருப்திப் பட்டக் கொண்டது. இது வெறம் கண்துடைப்பு என்று சொல்கிறார் நோம் சொம்ஸ்கி குவாட்டமாலா மக்கள் மீது இவ்வளவு பயங்கரமான கோபம் அமெரிக்காவுக்கும் CIA க்கும் ஏற்பட என்ன காரணம்?

1950களில் குவாட்டமாலாவின் கொம்யூனிஸ்ட் கட்சி ஜக்கோபோ ஆர்பென்ஸ் (Jacoboo Arbenz) என்பவர் ஆட்சித் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட உதவிற்று. அவருடைய ஆட்சியின் கீழ் United Fruit company என்னும் பல்தேசிய நிறுவனத்துக்குச் சொந்தமாக இருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பொதுவுடமையாக்கப்பட்டது. மாயன் மக்களும் தொழிற்சங்கங்களும் இவற்றைப் பெருமளவுக்கு ஆதரித்த சூழல் இருந்தது.

united fruit company யும் வேறு நிறுவனங்களும் அமெரிக்க முதலீட்டிலேயே இயங்கிப் பெருமளவு லாபம் சம்பாதித்த வந்தன.

ராணுவச் சதிப் புரட்சி மூலம் இடதுசாரி அரசை ஒழித்த பிற்பாடு அமெரிக்கா செய்த முக்கியமான வேலைத்திட்டங்களில் ஒன்று இராணுவ ஆட்சியை வெள்ளை இனத்தவர்களும் அவர்களது வழித் தோன்றல்களுக்கும் எனத் தெளிவாக வரையறுத்தமை தான். பூர்வீக மக்களுக்கு எதிராக இனவாதத்தை நன்கு வளர்த்து விட்டும் குவாட்டமாலாவின் ராணுவத்தையும் மரணப்படைகளையும் முற்றாகவே வெள்ளை இன மக்களுக்கானதாகப் பூரணமானதாக மாற்றியதும் இந்த வேலைத்திட்டத்தின முக்கிய அம்சமாகும்.

இத்தகைய சூழலில் தான் ஊஐயு தன்னுடைய அவப்புகழ் பெற்ற எதிர்ப் புரட்சியாளர்களுக்கான பயிற்சிக் கைநூல் ஒன்றைத் தயாரித்து வெளியிட்டது. சித்திரவதைகளுக்கான பல்வேறு வழி வகைகளிலிருந்து அதிகளவு இரத்தம் சீறாமல் எப்படிப் படுகொலை செய்வது என்பது வரை ஏராளமான தகவல்களும் அறிவுறுத்தல்களும் நிரம்பப்பெற்ற ஒரு "வழிகாட்டி" யாக இந்த நுால் அமைந்திருந்தது.

இப்போதுலத்தீன் அமெரிக்காவில் எல்சல்வடோர், குவாட்டமாலா ஆகிய நாடுகளில் ஒரு 'சமரசத் தீர்வு' ஏற்பட்டு விட்டது. நிக்கரகுவாவில நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறது என்று அமெரிக்கா கருதுகிறது.

அடுத்தது எந்தக் கண்டத்துக்கு மீட்பராகச் செல்வது என்பது தான் கேள்வி!

**– சேரன்**

## ஈழத்து மெல்லிசையின் பிதாமகர் -பரா



எங்கட பொடியனின் பாடல் என்று ஒரு காலத்தில் அழைக்கப்பட்ட ஈழத்து மெல்லிசையை வானொலி ஊடகத்தில் அறிமுகம் செய்து அதனை நிரந்தரமான ஒரு நிகழ்ச்சியாக்கிய பெருமை அமரர் எஸ்.கே.பரராஜசிங்கம் அவர்களுக்குரியது!

ஈழத்தின் தொல்சீர் கலைமரபாய்க் கொள்ளப்பட்ட கர்நாடக இசையின் லகு சங்கீத வடிவமாக மெல்லிசையை அறிமுகம் செய்ததில் முக்கிய மங்கு வகித்தவர் அவர். அவர் சார்ந்த ஒலிபரப்பு, இசை, விளம்பரம் ஆகியவற்றின் மூத்தவர்களும் புதியவர்களும் பரா அண்ணர் என்று உரிமையுடன் அழைக்கும் வகையில் நேயமுடன் வாழ்ந்த மென்மையான கலைஞர் அவர்!

இசை தொடர்பான ஐயங்களைத் தீர்க்கச் செல்வோருக்கு ஓர் ஆசானாக அன்றி மணிக்கணக்காய் சுவை நிறைந்த தம் அறிவினையும் அனுபவங்களையும் இனிமையுடன் விளங்க வைக்கும் பெரியதொரு ரசிகர் அவர்!

இசையின் செம்மைகளை நன்கு அறிந்திருந்தார். ஆனால் இசைபற்றி மற்றவர் அறிந்ததையும் கேட்டறிவார்.

இசை தொடர்பான சஞ்சிகைகள் நூல்களை பிரிவு பிரிவாய் அடுக்கி ஓர் அருமையான நூலகமாய்த் தம் அறையில் வைத்திருந்தார். எல்லா விடயத்தையும் திட்டமிட்டு ஒழுங்கிடுதலை அவருடைய அறை காட்டி நிற்கும்!

ஒரு படைப்பாளிக்குரிய சிறந்த பண்புகளில் ஒன்றோ என்னவோ தமது வாழ்க்கையை மட்டும் அவர் திட்டமிடவில்லை!

வாழ்வில் ஒரு முனிவராகவே அவர் இருந்ததன் பலனை அவருடைய அண்மைக்கால நாட்களைக் கண்ட அவரது நெருக்கமானவர்கள் உணர்வார்கள்.

ஹற்றன் டொன்பொஸ்கோ கல்லூரியில் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராக இருந்த இவருக்கு பேராசிரியர் சிவத்தம்பி, சொக்கன், எஸ்.பி.மயில்வாகனன் ஆகியோரின் தொடர்பு ஏற்பட்டது.

இத்தொடர்புகளின் அறுவடையாய் வர்த்தக சேவையில் அறிவிப்பாளராக அதனையே தமது சாதனைக் களமாக மாற்றினார். அதில் வெற்றி கண்டார். தென்னிந்திய திரைப்படப் பாடல்களையே சீவியமாகக் கொண்டு திகழ்ந்த இலங்கை வானொலியில் சினிமா அல்லாத உள்ளூர் நாட்டார் இசையை புதுப்பித்தும் புதியவற்றை ஆக்கியும் விளம்பர நிகழ்ச்சியாகவே ஒலிபரப்புவது என்பது அக்காலத்தில் பெரும் சாதனையே! வானொலியின் இசையிடையிட்ட சித்திரங்களிலும் இதற்கான வடிவப் பரிசோதனைகளை இவர் மேற்கொண்டிருந்தார்.

திரைதந்த இசை, ஒலிமஞ்சரி, இதயரஞ்சனி, வசந்தன் பாடற்கூத்து ஆகிய நிகழ்ச்சிகள் வர்த்தகசேவையில் அவரால் அறிமுகமானவை!

வானொலி நிலையத்தில் ஈழத்து மெல்லிசை பற்றிய கருத்தரங்கை எழுபதுகளில் நடத்துவதில் முக்கிய கர்த்தாவாக அமைந்தவர் பரராஜசிங்கம்!

கைலாசபதி, முருகையன், சில்லையூர், மௌனகுரு, ஜெயபாலன், பத்தினியம்மா, நித்தியானந்தன், சண்முகலிங்கன் எனப் பல ஆளுமைகள் இந்த மெல்லிசை இயக்கத்தில் சங்கமித்தன.

ஒவ்வொரு திரைப்படப்பாடலும் என்ன ராகம் என வானொலி நிலைய வைப்பகத்தில் INDEX ஒன்றையும் எழுதித் தொகுத்து வைத்தவர்.

-20

நன்றி - நூலகத்திட்டம்



# இன்றைய சாத்தானின் அன்றைய வேதம்!

பிரேமதாச அரசாங்க காலத்தில் நடந்த, குறிப்பாக சொல்வதானால் 1989 டிசம்பர் 4 அன்று பாராளுமன்றத்தில் நடந்த பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது ஆற்றப்பட்ட உரை இது. உரையாற்றியவர் யார் என்பதை நீங்களே கண்டு பிடியுங்கள்.

"....கௌரவ சபைத் தலைவர் அவர்களே! கடந்த மார்ச் மாதம் இந்த தேசிய பாதுகாப்பு அமைச்சின் நிதியொதுக்கீடு குறித்த விவாதத்தின் போது இந்தளவு நிதியினை ஒதுக்கிடுவது குறித்து நாம் பல விடயங்களை முன்வைத்திருந்தோம். அதற்குப் பதிலளிக்கும் போது நாட்டின் இந்தளவு பயங்கரவாத நிலைமை நிலவி வருவதாலேயே இந்தளவு நிதியினை ஒதுக்கிட வேண்டியுள்ளதென பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருந்தார். 1990ஆம் ஆண்டுக்கென்று முன்வைக்கப்பட்டிருக்கிற இந்த வரவுசெலவுத் திட்டத்திலும் 5.6 வீதம் பாதுகாப்பு அமைச்சுக்கென்று நிதி ஒதுக்கிடப்பட்டுள்ளது. இன்று நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலைமைக்குள் இவ்வகையான பெரிய தொகையை இத்துறைக்கு ஒதுக்கிடுவதானது நாட்டின் அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் பாரிய தடையையே குறிக்கிறது. ஆனால் அரசாங்கமோ நாட்டில் ஏற்பட்டிருக்கிற நிலைமையைக் காரணம் காட்டி இவ்வளவு தொகையை ஒதுக்காதிருக்க முடியாது என்றும் ஒதுக்கியே தீருவதென்றும் கூறுகிறது.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினையை இராணுவத் தீர்வொன்றால் தான் தீர்க்க வேண்டுமா என கேட்க வேண்டியிருக்கிறது. இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கிற பிரச்சினைகளின் யதார்த்தத்தை விளங்கிக்கொண்டு அப்பிரச்சினைகளுக்கு காரணமான மூலத்தை தேடிக் கண்டுபிடித்து அவற்றிற்கு அரசியல் ரீதியிலேயோ பொருளாதார ரீதியிலேயோ அல்லது சமூக ரீதியிலேயோ தீர்வினை வழங்குவதற்கு முடியாதது ஏன்? இந்த நாட்டின் பொருளாதார நிலைமை இந்தளவு மோசமாகியிருக்கின்ற நிலையில் இராணுவ ரீதியில் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும்...

...அரசாங்க உளவுப்பிரிவுகள் சரியான வகையில் செயற்படவில்லை என்பதை கடந்த கால நிலைமைகளை வைத்து ஆராய்கின்ற போது தெரிய வருகிறது. இந்நிறுவனங்கள் சரியாக செயற்படவில்லை என்று நீங்களே (பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன) கூறினீர்கள். அப்படியாயின் இந்நிறுவனங்களுக்கு அதிகளவு செலவு செய்வதில் உள்ள பிரயோசனம் தான் என்ன?...

...தென்னிலங்கை பற்றி அமைச்சர் குறிப்பிடுகையில் "Match is Over" என குறிப்பிட்டார். அந்த மெச் ஓவரென்றால், அந்தப் போட்டி முடிந்தது என்றால், இந்தளவு பெருந்தொகையானோரைக் கைது செய்வது ஏன்?...இதன் அர்த்தம் தான் என்ன? ஜனநாயக ரீதியிலேயே இயங்கி வருகின்ற, ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரைக்கூட கைது செய்து வருவது ஏன்? அப்படியென்றால் அமைச்சர் அவர்களும் எதிர்காலத்தில் தேர்தல் போட்டிகளில், எதிர்காலத்தில் நடக்கவிருக்கின்ற மெச்களில் போட்டியின்றி வெற்றிபெற "walk over" ஒன்றைப் பெற எதிர்பார்க்கிறாரா? நீங்கள் கூறுவதைப் போல மெச் ஓவரென்றால் இனிமேலாவது ஸ்ரீ.ல.சு.க.வினரைக் கைது செய்வதை நிறுத்துங்கள்.

...பாதுகாப்புப் படைகளுள் நிறைய ஊழல் இடம்பெற்று வருகிறது. அவ்வாறான ஊழல் இடம் பெறுவதற்குரிய காரணங்களில் ஒன்று தான் படையில் இருப்போருக்கு சரியான பயிற்சி வழங்காமை. நாட்டின் தேவையைக் காரணம் காட்டி மூன்று மாத பயிற்சியளித்து துவக்கையும் கையில் கொடுத்து பாரிய அதிகாரங்களை வழங்கி வெளியனுப்புவதனால் பல தீய விளைவுகள் நேர்கிறது...


...தென்னிலங்கையிலும் பல பிரச்சினைகள் இடம்பெற்றன. அவ்வாறான பிரச்சினை விரைவில் தீர்க்கப்பட வேண்டும் என்பது உண்மை தான். ஆனால் அவ்வாறான பிரச்சினைகளுக்கு இராணுவத் தீர்வை வழங்கி விடக் கூடாது. அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது போனால் இராணுவ செயற்பாட்டையே நிரந்தமாக்கி விடும்.

...அந்தந்த நேரங்களில் சரியான வகையில் அரசியல் ரீதியில் பிரச்சினைக்குத் தீர்வு காண முனைந்திருந்தால் இன்று இந்தளவு பாதகாப்புக்கென -5.6 வீதம்- நிதியொதுக்கீடு செய்ய நேரிட்டிருக்காது. அந்த வகையில் இப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு சரியான தரவுகளைப் பெற்றுக் கொண்டு, தெளிவான அரசியல் முடிவுகளை மேற்கொண்டால் மாத்திரமே இப்பிரச்சினைக்கு சரியான தீர்வைக் காண முடியும்.




"பிரா", "கொல கொட்டி", "களுகொட்டி", "கஹபளல்லு" என பல ஆயதக் குழுக்களை இன்று அரசாங்கமும் அரசாங்க உறுப்பினர்களும் இயக்கி வருகின்றது. இது இன்று எதிர் அரசியலைக் கொண்டிருக்கும் சக்திகளை அழித்தொழிப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. தங்கள் கட்சியும் எமது கட்சியும் சேர்ந்து இந்த சக்திகளை இல்லாது செய்ய முடியும். நாங்கள் ரெடி. நீங்கள் ரெடியா? நாட்டில் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்துவதே எமது நோக்கம். அதன் மூலம் நாட்டு மக்கள் சமாதானத்துடன் வாழவும், பயம், சந்தேகம் இன்றி வாழ்வதற்கான சூழலை உருவாக்குங்கள்....."

இப்படியெல்லாம் உரையாற்றியிருப்பவர் சாட்சாத் நம்ம பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்துவத்தை அவர்களே தான். அன்று ஐக்கிய தேசியக் கட்சியை தமிழ் மக்களுக்கு எதிரான கட்சியாகவும், எதிர்கருத்துக்களைக் கொண்டிருக்கும் சக்திகளை ஆயுத பலம் கொண்டு நசுக்கும் கட்சியாகவும் சித்திரித்துப் பேசிய உரை தான் இது. யுத்த செலவீனத்தின் அதிகரிப்பு குறித்தும், சமாதானமாக பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமெனவும், அரசியல் தீர்வு இன்றிமையாதது என்றும் அன்று அவர் ஆளுங் கட்சியை நோக்கி சரமாரியாக தாக்கிப் பேசினார். அன்று ஐ.தே.க.வை அம்பலப்படுத்தி தாம் சமாதானத்தின் தூதுவர்கள் என்பது போலவும் ஐ.தே.க. வன்முறையான, ஜனநாயக விரோத கட்சியென்றும் இவ்வுரையின் போது அவர் உரையாற்றியிருந்தார்.



அப்போது அவர் எதிர்க்கட்சியில் இருந்து கூறியதை இன்று அப்படியே எதிர்க்கட்சிகள் அவரை நோக்கி எழுப்புகின்றன. அன்று ரஞ்சன் விஜேரத்ன இருந்த இடத்தில் இன்று அனுருத்த இருக்கிறார்.

அனுருத்த பாதுகாப்பு பிரதி அமைச்சாராக நியமிக்கப்பட்டு இன்று 5 வருடங்களும் பிந்திவிட்டது. இந்த ஐந்து ஆண்டுகளில் ஐ.தே.க.வை விட அகோரமான முறையில் அழித்தொழிப்பு, ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்துவதில் தலைமை தாங்கிவருவதுடன், யுத்தத்தின் சுமையையும், இழப்புகளையும் முழு நாட்டின் மீதும் சுமத்திவிட்டுள்ளதுடன், வரலாறு காணாத வகையில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டுள்ளனர். அது மட்டுமன்றி கைது, காணாமல் போதல், அடக்குமுறைகள், பொருளாதாரத் தடை, பட்டினித் திணிப்பு, தமிழ் மக்கள் மீதான பாதுகாப்பு விதிகள் மற்றும் இன்னோரன்ன கொடுமைகள் திணிக்கப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி தொழிலாளர்கள் மீதான அடக்குமுறைகள், இனக்கலவரங்கள், பத்திரிகையாளர்கள், எதிர்க்கட்சிகள் மீதான வன்முறைகள், யுத்த செய்தித் தணிக்கை என முன்னர் ஐ.தே.க. 17 வருடமாக செய்து விட்டிருந்த அனைத்தையும் ஐந்தே வருடங்களில் செய்து முடித்திருக்கின்றன என்றால் அது மிகையாகாது.

பதவிக்கு வந்து ஒரு சில மாதங்களில் தென்னிலங்கையில் அமைதியான முறையில் ஜனநாயக அரசியலில் ஈடுபடத் தொடங்கிய ஜே.வி.பிக்கு எதிராகவும் "ஜே.வி.பி. ஒழுங்காக நடந்துகொள்ளாவிட்டால் என்னிடம் அதற்கு மருந்திருக்கிறது" என்று மிரட்டல் விடுத்தவர். ஜே.வி.பி.யைக் கண்காணிப்பதற்காக விசேட புலனாய்வுக் குழுவொன்றை நியமித்தவர். அது மட்டுமன்றி பல இடங்களில் ஜே.வி.பி. மீதான அரச வன்முறைமுறைகளுக்குப் பொறுப்பானவர்.

யுத்தத்துக்கு செலவிடப்படும் தொகை குறித்து பெரிதாக கவலைப்பட்டு பேசியிருக்கிற அனுருத்த இன்று அதே யுத்தத்துக்கு பல மடங்கு அதிகமாக இன்று செலவிட்டு வருவதும் படைக்கு ஆட்சேர்ப்பதிலும், புதிதாக பல ஆயுதக் கொள்வனவு செய்வதிலும், முன்னைய எந்த அரசாங்கங்களை விடவும் அதிகளவு அக்கறை காட்டி வருவதும் சும்மா விளையாடுவதற்கல்ல என்பதை எவரும் அறிவர்.

இந்த ஏப்ரல் 19 ஆம் திகதியுடன் 3வது ஈழ யுத்தத்துக்கு ஐந்து வருடங்கள் முடிகின்றன. இந்த ஐந்து வருடங்களில் பெரும்பான்மை மக்களைத் திருப்தி செய்வதற்காகவும், தமது அதிகாரங்களைப் பாதுகாப்பதற்காகவும் இவர் சொன்ன வாக்குறுதிகள் ஏராளம், அதே போல இவர் சொல்லாத உண்மைகளும் ஏராளம்.

ஜே.ஆர், போல, லலித் அத்துலத் முதலி போல, ரஞ்சன் விஜேரத்ன போல ரத்துவத்தையும் போரை முடிப்பதற்கு காலக்கெடு விதிப்பதில் சளைத்தவர் அல்ல என்பதை முழு நாட்டுக்கும், முழு உலகத்துக்கும் நிரூபித்துக்காட்டிவிட்டவர்.

மூன்றாம் ஈழ யுத்தத்தில் மாத்திரம் (அனுருத்தவின் தலைமையில்) அரசாங்கம் பன்னிரெண்டாயிரம் படையினரை இழந்திருப்பதாக அரசு சாராத செய்திகள் தெரிவிக்கின்றன. இதை விட அரசு இழந்த ஆகாய விமானங்கள், படகுகள் மற்றும் ஏனைய போர்த் தளபாடங்களின் பெறுமதியை இன்னமும் அரசாங்கத்தாலேயே சரியாக மதிப்பிட முடியவில்லை என கூறப்படுகிறது. இழப்புகளை மறைப்பதற்காக இரண்டு முறை செய்தித் தணிக்கையைக் கொண்டு வந்தது. இரண்டாவது தடவையாக 1998 யூன் 8இல் கொண்டுவரப்பட்ட செய்தித் தணிக்கை பத்து மாதங்கள் கடந்தும் நீடித்து வருகிறது. வடக்கு கிழக்கில் சிவில் வாழ்க்கை சீரழிந்து இராணுவ நிர்வாகமும், தமிழ்க் கூலிப்பட்டாளங்களின் அட்டூழியங்களும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப்பட்டு இன்றைய மூன்று வருடங்களின் பின்னர் 35 கிராம சேவகர் பிரிவுகளில் இராணுவ நிர்வாகமே நடக்கிறது. தமிழ்ப் பெண்கள் மீதான படையினர் புரிந்து வரும் பாலியல் வல்லுறவு குறைந்துவிட்டதாக கூற முடியவில்லை.


உலக ஏகாதிபத்திய நாடுகளின் ராஜதந்திர, நிதி, இராணுவ உதவிகளுடன் நடாத்தப்பட்டு வருகிற இந்த இன அழிப்பு யுத்தத்தினைத் தொடர்ந்து வருகின்றனர். இந்த யுத்தத்தை இன்னும் கடுமையாக்குவதற்கான ஆயுதங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மறுபுறம் அவ்வாறான அடக்குமுறையை தொடர்ந்து நீடிப்பதற்காக அங்கீகாரம் கேட்டு மீண்டும் இக்கட்சிகள் எந்தவித தயக்கங்களுமின்றி அடக்கப்படுவரும் மக்களிடமே வரத் தொடங்கியிருக்கிற காலம் தான் இது. இந்த தேர்தல் காலத்தில் இந்த கொடுங்கோண்மை சக்திகளுக்கு அளிக்கப்படும் வாக்குகள் அரச பயங்கரவாதத்துக்கு அளிக்கப்படும் வாக்குகள், அடக்குமுறையை வலிந்து கேட்கின்ற விண்ணப்பங்கள். எதிர்கால சந்ததியினருக்கும் அவலத்துக்கு சொந்தக்காரர்களாக்கிவிடும் உயில் என்று தான் கூறமுடியும்.

-கோமதி

நன்றி - நூலகத்திட்டம்



# "இன்று ஏழ்மையிலும் நான் நிம்மதியாயுள்ளேன்"



**கடற்படையிலிருந்து தப்பிச் சென்ற ஒரு கடற்படையினன் "பாராதீசய" எனும் சிங்கள சஞ்சிகைக்கு எழுதிய கட்டுரையொன்று இது. படையினரின் மறுபக்கம் குறித்த சில விபரங்கள் படையிலிருந்து தப்பிய ஒருவராலேயே இங்கு கூறப்படுகின்றன....**

"இதனை எழுதும் நான் கடற்படையில் சேவை புரிந்த ஒருவன். உண்மையைச் சொல்லப்போனால் நான் கடற் படையில் சேர்ந்தது, நாட்டையோ, இனத்தையோ காக்கின்ற நோக்கத்திற்காக அல்ல. எனக்கிருந்த பொருளாதார சிக்கலின் காரணமாகவே நான் அவ்வாறு இணைந்தேன்.

நான் இறுதியாக 1995-1996 காலப் பகுதியில் காரைநகர் கடற்படை முகாமில் சேவையாற்றினேன். அங்கு எமக்கு விடுமுறை கோருவதெனில் குறைந்தது, 90-100 நாட்கள் சேவையில் இருந்திருக்கவேண்டும். அதன் பின்னர் விடுமுறையை பெறுவதற்கான விண்ணப்பப்படிவத்தை நிரப்பிவிட்டு மூன்று பேரிடம் அலைந்து சென்று கையெழுத்தை வாங்க வேண்டும். இறுதியில் X.O விடம் போனதன் பின்னர் அவர் நடத்துகின்ற விசாரணையில் விடுமுறையே வேண்டாம் என்றாகி விடும். இது வரை காலம் 9-10 நாட்கள் விடுமுறையில் சென்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் சந்தோஷத்துடன் சென்றதில்லை. வீட்டிலிருக்கும் மனைவி, பிள்ளைகளைக் காண வேண்டும் என்பதற்காகவே வீடு செல்ல முனைகிறோம். அப்படியிருந்தும் கூட விடுமுறையே வேண்டாம் என்ற நிலைக்கு தள்ளப்படுவதற்கு படையதிகாரிகளின் அணுகு முறைகளே காரணம்.

இதன் போது காலையிலேயே காரைநகரிலிருந்து படகில் காங்கேசன்துறைக்கு அழைத்துச் செல்லப்படுவதோடு, சீ கொன்வொய் (ஆயுதப் படகுகளின்) வரும் நாள் வரை காங்கேசன்துறை கடற்படை முகாமில் இருக்க நேரிடும்.

சீ கொன்வொய் நடத்தப்படும் நாட்களில் முழு யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் இருக்கின்ற இராணுவ முகாம்களிலிருந்தும் விடுமுறைக்காக செல்லவிருக்கின்றவர்கள் கடற்படை முகாமுக்கு வந்து சேருவார்கள். ஏலவே விமானப்படைக்குச் சொந்தமான அன்டனோ விமானங்கள் இரண்டும் Y-18 விமானமும் அழிக்கப்பட்டுவிட்டதால் விடுமுறை என்பது பெரும் சிக்கலைத் தந்தது. இதன் காரணமாகவே திருகோணமலை வரைக்கும் கடற்பிரயாணத்தை ஒரு நாளைக்கு கடற்படை, மற்றும் தரைப்படையைச் சேர்ந்த 1500-2000 வரையிலான படையினர் மேற்கொள்வர்.

இந்த கடற்படைக்கப்பல்களோடு, 820 (பெப்லென்டா), ரணரஜ, பப்பத்த போன்ற படகுகளில் இந்தப் படையினர் பிரயாணிப்பர்.

இப்படகுகளில் ஏலவே ஏற்றப்பட்டிக்கும் எண்ணெய்ப் பீப்பாய்கள், கயிறுகள், டெக்குகள் என்பவற்றுக்கு மேல் ஏறிக் குந்திக்கொண்டு தான் நாங்கள் பயணம் செய்ய நேரிடும்.இவ்வாறு ஏற்றப்பட்டுச் செல்கின்ற படகுகள் காங்கேசன்துறையிலிருந்து இரவு 8-9 மணியளவில் புறப்படும். (இதற்கான காரணம்முல்லைத்தீவு கடற்பிரதேசத்தை அண்மித்த எல்லையில் ஜாமத்தில் பிரயாணிக்கக்கூடியதாலேயே) அந்த நேரத்தில் புறப்படும் படகுகள் இரவு 1 மணியளவில் பார்த்தால, காங்கேசன்துறை கடற்பிரதேசத்திலேயே பிரயாணித்துக் கொண்டிருக்கும். தரையிலிருந்து ஏறத்தாழ 40-50 மைல்கள் தொலைவிலிருக்கும் இந்திய-இலங்கை கடலெல்லைப் பரப்பிலேயே பிரயாணம் செய்வோம். (இதற்கான காரணம் புலிகள் எங்கள் படகுகளைத் தாக்க நேரிட்டால் தாக்கிவிட்டு திரும்பிப் போக அவர்களுக்கு படகுகளில் எரிபொருள் இருக்காது என்பதாலேயே இவ்வளவு தொலைவில் பயணம்செய்வது வழக்கம்.) இரவு நேரங்களில் இருட்டில் பிரயாணம் செய்யும் இந்தப் படகுகளை நோக்கி புலிகள் தாக்குதல் நடத்தினால் ஆயுதங்களை கையளித்துவிட்டு விடுமுறையில் சென்று கொண்டிருக்கும் எங்களுக்கு கடவுள் தான் துணை. நீந்தத் தெரிந்தவர்கள் இந்தியாவுக்காவது நீந்திச் தப்பிச் சென்று விடுவார்கள்.

எனக்கென்றால் இந்த துயரமிக்க கடற்பிரயாணத்தைப் போல வெறுப்புமிக்கது வேறு ஒன்றுமில்லை. கடற் பிரயாணம் என்பது அலையில் அடித்துச் செல்லுகின்ற மரக்கட்டையில் மிதப்பு போன்றது. உண்ட அனைத்தும் 2-3 மணித்தியாலயங்களில் வாந்தி எடுக்க நேரிடும். இதற்கு "சீ சிக்" (Sea sick) என்று கூறுவார்கள். இது பலருக்கு ஏற்படும் ஒன்று. வாந்தி எடுத்தெடுத்து மேலும் வாந்தி எடுக்க திராணியற்றவர்களாகி விடுவோம். இறுதியில், விழுந்த இடங்களில் செத்த பிணங்களைப் போலக் கிடப்போம். எம்மில் அக்கறை கொள்ள யாருமிரார். ஒன்றையும் உண்ண கூட மனம் வராது. மயக்கமாக இருக்கும். எதைப் பார்த்தாலும் அலர்ஜியாகவும், வெறுப்பாகவும் தோணும். அந்த நேரத்தில் தான் புலிகள் தாக்கீ செத்தாலும் கூட நல்லதென்று தோன்றும். அடுத்த நாள் விடிந்ததும் பார்த்தால் கூட கரையயை அடைந்திருக்க மாட்டோம். இன்னும் எத்தனை துரம் பயணிக்க வேண்டிவரப்போகிறது என்ற ஏக்கமும் வெறுப்பும் தான் மிஞ்சும்.

மத்தியாணமாகிறபோது முல்லைத்தீவு கடலைத் தாண்டிச் செல்வோம். இந்த நேரத்தில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க நேரிடும். மாலையில் திருகோணமலை பகுதியை நோக்கி கப்பல் திசைதிருப்பப்படுகின்ற போதும் திருகோணமலை நகரத்தை எட்டிக் கொண்டிருக்கின்ற போது தான் பையன்களின் முகத்தில் குதுாகலிப்பையும், சிரிப்பையும் காண முடியும். இருந்தாலும் அதனை எட்டுவதற்கும் ஒரு மணித்தியாலம் செல்லும். திருகோணமலைத் துறைமுகத்தை பூரணமாக பார்க்க முடிகிற போது தான் முழுமையான சந்தோஷத்தை அடைவோம். செத்துப்பிழைத்த ஆனந்தத்தில் இருப்போம். படகிலிருந்து இறங்குகின்ற போது [illegible] எழும்புகின்ற பையனைப்போல எழுந்திருக்கவும் சீவனிருக்காது.

இவ்வாறு அரைஉசிராக விடுமுறையிலிருந்து வருவது நாங்கள் மட்டும் தான். அதிகாரிகளின் பிரயாணம் முழுவதும் "பிளைட்"டுகளில் தான். அவர்களோடு போகும் எங்கள் பையன்கள் அந்த அதிகாரிகளுக்கு நெருங்கிய எடுபிடிகளாக இருந்தால். அவர்களில் சிலரும் பிளைட்டுகளில் செல்ல சந்தர்ப்பமிருக்கும்.

அடுத்த நாள் கொழும்பை நோக்கிச் செல்லுகின்ற கென்வொய் பஸ்களில் பயணிக்கையில் ஹபரனை வரும் வரை எதுவித விசுவாசமுமிருக்காது. ஹபரனையைத் தாண்டியதும் தான் மீண்டும் உயிர்ப்போம்.


வீட்டை எப்படியோ அடைந்தாலும் கூட பிரயாணத்தில் பட்ட களைப்பு தீர 2-3 நாட்கள் எடுக்கும். விடுமுறையில் ஒரு பகுதி பிரயாணத்திலும் ஓய்விலும் கழிந்துவிடும். நான் 2-3 மாதங்களின் பின் வீடு வந்து சேர்ந்ததும் எனது பிள்ளை என்னை அறிய மாட்டாள். அப்போது எனக்கு ஏற்படும் வேதனை சொல்லில் அடங்காது. எதற்காக இந்தத் தொழில், எங்களை மணமுடிக்கின்ற பெண்கள் பெரும் பாவம் செய்தவர்கள் என்று தோன்றுகிறது. எனது பிள்ளை என்னைப் பழகி என்னை நெருங்குகையில் எனது விடுமுறையும் முடிந்து விடும். மீண்டும் விடுமுறையிலிருந்து படைக்குச் செல்லுகையில் மீண்டும் "அந்த"ப் பிரயாணத்தை நினைக்கையில் வாழ்க்கையே வேண்டாம் என்றாகிவிடும். வரும் போது அனுபவித்ததை நினைக்கையில் போகாமல் இருந்து விடுவோமா என்று தோன்றும். அல்லாது போனால் விடுமுறையையே எடுக்காமல் முகாமுக்குள்ளேயே அடங்கிக் கிடக்க வேண்டும். ஆனால் அப்படியிருப்பது எப்படி? எனக்கென்று மனைவி பிள்ளைகள் உள்ளனர். சின்னவளின் முகத்தைப் பார்க்கையில் எப்படி போட்டுப் போவது? நின்று விட்டால் பொருளாதர சிக்கல்களை சரிகட்டுவது எப்படி? விருப்பமின்றியென்றாலும் திரும்பிப் போயே ஆக வேண்டுமே. இனி, மீண்டும் நாங்கள் கொல்லப்படப்போகும் மாடுகளைப் போல வரவேண்டிவரும்.

நாங்கள் விடுமுறையின் பின் அது குறித்து திருகோணமலை கடற்படை முகாமுக்கு அறிவிக்க வேண்டும். சில நேரங்களில் நாங்கள் இது குறித்து அறிவிக்கையில் அதற்கு முன் தினம் தான் கன்வொய் ஒன்று காரைநகரிலிருந்து கிளம்பியிருக்கும். அப்படியென்றால் அதிலிருந்து 15 நாளாவது முகாமில் காத்திருக்க வேண்டிவரும். தினந்தோறும் காலையில் 8-12 வரை நான்கைந்து மணித்தியாலங்கள் வரிசையாக நிற்க வேண்டும். ஒரு சந்தர்ப்பத்தில் அவ்வாறு இருக்காது போனாலும் அவருக்கு தெய்வம் தான் துணை. சில பேர் தமது வீட்டுக்குப் போய் வருவார்கள். அவ்வாறு "போவதாயிருந்தால் அவர் படைச் சிறையில் இருக்கத் தயாராகவே அவ்வாறு போய் வரவேண்டும்.

சில நாட்கள் அந்த முகாமில் காத்திருந்து கன்வொய் இருக்கும் ஒரு தினத்தன்று முன்னைய நாளில் வந்து சேர்ந்ததைப் போல ஊத்தையில் புரண்டு ஒன்றரை தினமாக கடலில் மிகுந்த துயரங்களுடன் முகாமை அடைவோம் அந்த நாளிலிருந்து தான் எமக்கான அடுத்த விடுமுறைக்கான காலம் கணிக்கப்படும். எனவே அடுத்த விடுமுறை நாளானது 15-20 நாட்களின் பின்னர் இருந்து கணிக்கப்படும். (அதாவது 90-100 நாட்கள்)

இந்த விடுமுறைக்காகப் போய் வரும் கடற் பிரயாணத்தினாலேயே எனக்கு கடற்படை மட்டுமல்ல படையே வேண்டாம் என்றாகிவிட்டன. இன்று நான் பொருளாதார ரீதியில் ஏழ்மையை அனுபவித்து வருகின்றேன். இருந்தாலும் அது எனக்கு இன்னொருவகை நிம்மதியை அளிக்கிறது.

**-தமிழில் : ஜென்னி**



ஒரு கோடி நட்சத்திரங்கள் விளிக்கும்
ஓர் இரவில் தானடி அது நிகழ்ந்தது.

எங்களது காவலர்கள் என்று சொல்லிக் கொண்டோர் யாவரும்
ஊர்க்காவலுக்கு வந்தனர்.
அந்தக் கொடுரமான நிலவு எதற்காக அவ்வளவு சுடர்விட்டது
என்பது பற்றி எனக்குத் தெரியாது.

ஆனால் அது எனக்கு நல்லதே செய்தது.
நான் எல்லாவற்றையும் எனக்குள்
உள்வாங்கிக் கொண்டேன்.

எங்களது ஊரை
நீ உன் "போத் டே பாட்டிக்கு" வெட்டினாயே கேக்,
அதைப் போல பலதுண்டுகளாகப் பிரித்தனர்.
ஒவ்வொரு துண்டையும் தங்களுக்கானதாக
வேலி போட்டார்கள்.

அதில் களைபிடுங்கப்பட்டோர் பற்றி
நான் எதுவும் சொல்ல மாட்டேன்.
நீயும் அதைப் பற்றி எதுவும் கேட்காதே.
அதன் பெயர் தான் ஜனநாயகம்.

உன் அன்பான அப்பாவையும்
களைகளில் ஒன்றாய் பிடுங்கி எறிந்தார்கள்.


நான் ஒரு பொம்மை.
என்னை நான் அப்படி ஏற்றுக்கொள்ளவில்லை.
ஆனால் அவர்கள் அப்படித்தான் நினைத்தார்கள்.

எனை சந்தைக்கு இழுத்துப் போய்
ஒரு மாட்டைப் போல கூவி விற்றார்கள்.
- நீ ஏன் எதிர்த்து கூச்சலிடவில்லை எனக் கேட்கிறாயா?
அப்படி சத்தமாக கேளாதே என் மகளே
அன்றில் நான் உயிரோடு இருந்திருத்தல் முடியாதது.

இப்போது அவர்கள் தான் பெல் அடிக்கிறார்கள்.
ஒன்றும் பயப்படாதே.
மறந்தும் உன் அப்பாவைப் பற்றியோ,
அல்லது வேறு எதைப் பற்றியும் மூச்சுவிடாதே.

"நாங்கள் உங்களோடுதான்" என்று
மட்டும் சொல்லிவிட்டு வா.
நீ பீதியுடன் கூறும்
உன் ஒரு வார்த்தையை
இன்னும் தொண்டை கிழியக் கத்தும்
தேசத்தின் விடியலுக்கான பொன் மொழிகளாக
விற்றுக் கொள்வார்கள்.

ஆனால் வோட் போடப் போவது பற்றி
எதுவும் சிரமப் படாதே!
அதை அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.
இன்னொரு முறை என்னை கூவி விற்பதற்கான
அதிகாரத்திற்காய்.



நன்றி - நூலகத்திட்டம்



# கலை எந்நேரமும் எதையாவது தேர்ந்தெடுத்துக் கொள்கின்றது!

நெறியாளர் பிரசன்ன விதானகே

— தமிழில் ரத்னா —

**உங்களது திரைப்படங்கள் மூன்றும் — சிசில கினிகனி, அனந்த ராத்திரிய, பவுறு வளளு — பெண்கள் பாத்திரத்தை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளன. இன்னொரு முறையில் கூறுவதாயின், வெளியாள் ஒருவர் பெண்களின் பாத்திரத்திற்குள் புகுந்து அப்பாத்திரத்தை வெளிப்படுத்துகின்றனர். குறிப்பாக திரைப்படங்கள் மூன்றிலுமே அவ்வாறு நிகழ்வதேன்?**

சிசில கினிகனியை முதலில் எடுத்து விட்டு அடுத்ததாக அனந்த ராத்திரியவை எடுத்தேன். மூன்றாவதாக பவுறுவளளு எடுத்தேன். நான்காவதாக புரஹந்த களுவர எடுத்தேன். மீண்டும் இத்திரைப்படங்கள் மூன்றையும் பார்த்தால், புரஹந்த களுவர திரைப்படத்தில் மட்டுமே ஆண் பாத்திரம் அடிப்படையாக அமைகின்றது. மற்ற திரைப்படங்களில் பெண் பாத்திரங்களே அடிப்படையாக உள்ளன. இந்த கேள்விக்கு இலகுவாக பதிலளிக்க முடியும். பதில், இவை எதிர்பாராத விதமாக நடந்தது என்பதே. ஏனெனில், இந்த பார்வை என்னை விட பிறரை பாதித்திருக்க கூடும் என நினைக்கின்றேன்.

இந்த திரைப்படங்கள் அனைத்தும் சமூகத்தையும், சமூகத்துடன் போராடும் நபர்களையும் சித்திரிக்கின்றது. சிசில கினிகனியில் அப் பெண் தன்னை விட பெரிய ஒரு சமூக சக்தியுடன் மோதுகின்றாள். சமூகம் அவளைவிட பெரும் சக்தி வாய்ந்ததாக உள்ளது. அனந்த ராத்திரியவில் ஒரு நபர் மனச்சாட்சியுடன் மோதுகின்றார். அவரது இறந்தகால நம்பிக்கைகள் அங்கு சமூக சக்திகளுக்கு அடிமையாகின்றது. பவுறு வளளு திரைப்படத்தில் மதத்திற்கும் திருமணத்துக்குமிடையிலான மோதல் சித்திரிக்கப்படுகின்றது. புரஹந்த களுவரவில் தனிமையில் வாடும் வயோதிபனும், அவரது சுற்றுப்புறச் சூழலின் பௌத்த சம்பிரதாய நம்பிக்கைகளுக்கிடையிலான மோதலும் சித்திரிக்கப்படுகின்றது. எனது பார்வைக்கு இத்திரைப் படங்கள் எனக்கு இவ்வாறுதான் காட்சியளிக்கின்றன. ஆனால் ஆழமாக நோக்கும் போதுதான் ஏன் இவை பெண்பாத்திரங்களை மையமாக கொண்டுள்ளன என்பது தோன்றும். புரஹந்த களுவர திரைப்படத்திற்கு பெண் பாத்திரமொன்றை அடிப்படையாகக்கொள்ள எண்ணியிருந்தேன். எனினும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைக்காததனால் நான் வேறு திரைக் கதையை எழுதினேன். அதனால் அப்படத்தின் பாத்திரம் ஒன்று பிரதான பாத்திரமாகியது. ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது. பெண்கள் எந்நேரமும் சமூக அழுத்தத்துக்குள்ளாகும் பாத்திரங்கள் என எனது அரசியல் நம்பிக்கைகளின் அடிப்படையில் எனக்கு தோன்றியது. சமூகத்தின் அதிகளவான அழுத்தத்திற்குள்ளாகும் நபர்களாக நான் பெண்களை கண்டேன் என்பதையே கூற விரும்புகின்றேன். இதற்கு காரணமாகிய பாலியல் மற்றும் வேறு காரணங்களும் இருக்க முடியும். மற்றது, அம்மா என்னில் ஏற்படுத்திய தாக்கத்தினால் அம்மாவினூடு இவ்வுலகத்தை பார்க்கும் இயல்பு என்னில் தோன்றியதாக எண்ணுகின்றேன். குறிப்பாக பவுறு வளளு செய்யும் போது, என் அம்மா வயலட் போன்று இல்லாவிட்டாலும், வயலட்டின் பாத்திரத்தை கட்டியெழுப்பும் போது அம்மாவின் தாக்கம் என்னில் இருந்தது. இவ்வாறு பல காரணங்கள் உண்டு. இவற்றை நல்ல விமரிசகன் கண்டு கொள்வான் என நினைக்கின்றேன்.

**அனுபவத்தை விட அனுதாபத்தை பெறும் நோக்குடன் பெண் பாத்திரங்களை கேந்திரமாகக் கொள்ளும் போக்கு திரைப் படங்களில் காணப்படுகின்றன. உங்களது படைப்புகள் இதில் எந்நிலையில் உள்ளன?**

திரைக்கதை எழுதும் போது பிரதான பாத்திரமாக பெண் பாத்திரம் வரவேண்டும் என ஒரு போதும் எண்ணியதில்லை. அவ்வாறான எண்ணமிருந்திருந்தால் இத் திரைப்படங்கள் பல மாற்றங்களுக்குள்ளாகியிருக்கும். எனது திரைப்படங்களில் நான் உருவாக்க நினைத்த பெண் பாத்திரங்கள் தனியே அனுதாபத்தை பெறுவதை விடுத்து சமூகத்துடன் மோதும் பாத்திரங்களாக உள்ளன.

அனந்த்த ராத்திரிய படத்தின் பெண் பாத்திரம் அனுதாபத்தை பெறுகின்ற போதிலும் தன்னை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியவனை ஏற்றுக் கொள்ள மறுப்பதன் மூலம் பெரும் வலிமையை காட்டுகின்றது. பவுறு வளளுவில் அப் பெண் அழுத்தத்திற்குள்ளானாலும் அவள் தனக்குத் தேவையானதை பெற்றுக் கொள்கின்றாள். இந்த திரைக்கதையை உருவாக்கும் போது பெண் பாத்திரத்தை பயன்படுத்தினால் அனுதாபத்தை பெறலாம் என்ற எண்ணம் ஏற்படவில்லை.

**பெண்ணுக்கு அனுதாபத்தைப் பெற்றுத் தரும் திரைப்படங்களுக்கு சந்தையில் வரவேற்புள்ளதெனக் கூறின் நீங்கள் அதை ஏற்றுக்கொள்வீர்களா?**

ஆம் நான் ஏற்றுக்கொள்கிறேன். திரைப்படத்தில் பெண்ணுக்கு அனுதாபத்தை பெற்றுக் கொடுத்தால் அந்த திரைப்படம் வர்த்தக ரீதியில் வெற்றியடையும் என்பது உண்மை. ஆனால் நான் முன்னர் கூறியது போல், எனது திரைப்படங்களில் பெண்கள் சமூகத்துடன் போராடுகின்றனர். அவர்கள் சமூகத்திடமிருந்து தனியே அனுதாபத்தை பெறுபவர்கள். சரி, நாம் இப்படி யோசிப்போம். பெரும்பாலான நேரங்களில் திரைப்படங்களில் பெண்கள், துன்பப்படுகின்றனர் என்பதை காட்டியே அனுதாபத்தை பெற்றுத் தருகின்றனர். பெண்கள் அழுத்தத்திற்கு முகம் கொடுப்பதனால், அவள் அனுதாபத்திற்குரியவள் என சிங்கள திரைப்படங்களில் சித்திரிக்கப்படுகின்றது. ஆனால் நான் தனிப்பட்ட ரீதியில் பெண்ணுக்கோ ஆணுக்கோ அனுதாபம் காட்டத் தேவையில்லை என கருதுகின்றேன். ஒருவருக்கு அனுதாபத்தை பெற்றுக் கொடுக்க நாம் யார்? நாம் அனுதாபத்தை வழங்குவதன் மூலம் நம் மேல் மட்டத்தில் இருந்து ஒரு பாத்திரத்தை கீழ் தளத்தில் வைத்து அளவிடுகின்றோம். நாம் பிறரை தீர்மானிக்க எமக்கு இருக்கும் தகுதி என்ன? இத்திரைப்படங்களில் நன்மை, தீமை எதுவாயினும் எனது படைப்புகளில் வரும் பெண் பாத்திரங்களை பாவத்தின் ஏற்றுக் கொள்ளலுக்கு கொண்டு சென்று புரட்சிக்கு ஆயத்தப்படுத்தும் தேவையிருந்தது. நல்ல என்ற பிம்பத்திலிருந்துக் கொண்டு புரட்சியை மேற்கொள்வது இலகுவானதல்ல. விகாரமகாதேவி கிளர்ச்சி செய்வதும் நல்ல என்ற பிம்பத்திலிருந்துக் கொண்டாகும். ஆனால், சிசில கினிகனியின் அனட், அனந்த ராத்திரியின் பியுமி மற்றும் பவுறு வளளுவின் வயலட் ஆகிய பெண்கள் தவறுகளினால் கட்டுப்பட்டவர்கள். இங்கு இவர்கள் தான் புரட்சி செய்கின்றார்கள். இவர்கள் பாவம் செய்யும் போது நேர்மையை கடைப்பிடிக்கின்றார்கள். இறுதியில் இப்பாத்திரங்கள் தொடர்பாக அனுதாபம் ஏற்படவில்லை. இறுதியில் இப்பாத்திரங்களின் மூலம் அம் மனித உணர்வுகளை விளங்கிக் கொள்ளவே முயல்கின்றோம். இங்கு சொல்ல வேண்டிய இன்னுமொரு விடயத்தை தெளிவுபடுத்த முனைகின்றேன். அதாவது அவர்கள் புரட்சியை சமூகத்தினுள் உறுதிப்படுத்திக் கொள்கின்றனர். அப்போது சமூக சக்திகள் அவமதிக்குள்ளாகின்றது பவுறு வளளுவில் வயலட் தனது கனவுகளை சித்த சுவாதீன தன்மை மூலம் உறுதிப்படுத்திக் கொள்கின்றாள். அதேபோல், தான் தன்னை இழ்தன் மூலம் உறுதிப்படுத்துகின்றாள். அவள் புதிய உலகத்திற்கு செல்ல முடிவதும், விக்டரை அடைய முடிவதும் இவ்வாறான சூழ்நிலையில் தான் சாத்தியமாகின்றது.



**பவுறு வளளுவில் நீங்கள் வயலட் என்ற பாத்திரத்தின் மூலம் அம்மா என்ற சமூக பிம்பத்தை கேள்விக்குட்படுத்து கின்றீர்கள் என தோன்றுகின்றது. சமூகம் இதனை விளங்கிக் கொள்ளும் என எண்ணுகின்றீர்களா?**

இங்கு நான் ஏமாற்ற முயலவில்லை. அம்மா என்ற பாத்திரத்தை சமூகத்திற்கு இன்னொரு கோணத்தில் திறந்து காட்டும் ஆணின் பாத்திரம் இதில் சித்திரிக்கப்படுகின்றது. சமூகம் அம்மா என்ற பாத்திரத்தை வளைத்துக் கட்டப்பட்ட மதில் சுவர்கள் மூலம் விளங்கிக் கொள்கின்றது. அவளும் பெண் என விளங்கிக் கொள்ள இருக்கும் தடைகளை சுட்டிக்காட்டும், பாடம் ஒன்றை கற்பிக்கும் நபராக வெளிப்படையாக கலைஞனால் இங்கு இருக்க முடியாது. ஆனால், இந்த படைப்பை பார்த்த சில பார்வையாளர்களாவது இதை கொஞ்சம் எண்ணிப் பார்ப்பார்களாயின் அது சந்தோசம் தரக்கூடியதே.

**கலையை சமூக ஊடகமாக பார்க்க முடியும் என நீங்கள் எண்ணுகின்றீர்களா?**

உண்மையில் என்னிடம் இவ்வாறான கருத்தொன்றுள்ளது. திரைப்படங்கள் மற்றும் கலைகள் மூலமான அழுத்தம் உலக தரத்தில் இன்று குறைவடைந்து வருகின்றது. எமது நாட்டிலும் இது தொடர்பாக பெரும் வித்தியாசங்கள் இல்லை. குறைந்தது முன்பு கலைகள் சமூகத்தை பாதித்தது என தெளிவாகியது. சமூக வளர்ச்சிக்கு உதவும் சாரார் என கலைஞர்கள் பாராட்டப்பட்டனர். அவ்வாறான பாராட்டுக்களை ஏற்றுக் கொள்ள கலைஞர்கள் விருப்பம் கொண்டிருந்தனர். அவ்வாறான பங்களிப்பை தரக்கூடிய கலைஞர்களின் திறமை தொடர்பாக எனக்குள் சந்தேகம் நிலவுகின்றது. அப்படியாயின் நாம் ஏன் படைப்புத் தொழிலில் ஈடுபடுகின்றோம் என்ற கேள்வியெழுகின்றது.

நான் இதற்கு ஒரு கதையை கூற விரும்புகின்றேன். கிஸலொவிஸ்கி எனும் திரைப்படவியலாளர், அவரது A short film about Love எனும் திரைப்படத்தை போலந்தில் திரையிட்ட போது ஒரு இளம் பெண் அவரிடம் வந்து "நான் இதுவரை எனது அம்மாவுட கதைத்தது கிடையாது. இந்தப் படத்தை பார்த்ததும் அம்மாவுடன் கட்டாயம் கதைக்க வேண்டும் எனத் தோன்றியது" எனக் கூறியிருக்கிறாள். அப்பொழுது கிஸலொவிஸ்கி "இதுபோல் பலர் இருக்கின்றார்களா என எனக்குத் தெரியாது. ஆனால் இதுபோன்ற சிலர் இருந்தாலும் எனக்கு போதும் " என்றார். இதுதான் உண்மை. சமூகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த எம்மால் முடியாது.

அதே போல் திரைப்படம் தொடர்பாக பல விளக்கமளிப்புகள் இருக்க முடியும். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் திரைப்படங்களை உள்வாங்கிக் கொள்கின்றனர். 60,70களில் தான் ஒரு குறிக்கோளோடு திரைப்படத்தை எடுக்கத் தொடங்கினர். எமது நாட்டு இயக்குனர்களும் இந்த கருத்துக்கள்தான் இந்த திரைப்படத்தில் உள்ளன என விளக்கமளிப்பை உருவாக்க முயற்சிக்கின்றனர். இது தவறானது. இயக்குனர்கள் என்ன சொன்னாலும், பார்வையாளர்கள் தமது வாழ்வில் திரைப்படத்தை உள்வாங்கிக் கொள்வது வெவ்வேறு முறையிலேயே. ஆனால், திரைப் படங்கள் பல கோணங்களில், தளங்களில் ரசிக்கக் கூடியதாக இருப்பது நன்று. சில வேளைகளில் சில திரைப்படங்களை பல கோணங்களில், தளங்களில் ஸ்பரிசிக்க முடிவதில்லை. பவுறு வளளு திரைப் படத்திலும் நான் ஒரு கேள்வியை முன் வைத்திருக்கின்றேன். அதனை பலர் விளங்கிக் கொள்வார்களாயின் எனக்கு சந்தோஷமே.

**உங்களது படைப்பு பற்றிய உரையாடலில் நீங்கள் குறிப்பிட்டவாறு. திரைப்பட வியலாளர் ஒருவர் தமது படைப்பில் எங்ஙனம் பிரவேசிக்க வேண்டும் என கருதுகின்றீர்கள்?**

இந்தக் கேள்விக்கான விடையாக நான் கிஸலொவிஸ்கி கலை தொடர்பாக கூறிய விளக்கங்களை குறிப்பிட விரும்புகின்றேன். நானும் அவரது கலை தொடர்பான கூற்றை ஏற்றுக்கொள்கின்றேன். " கலைஞன் ஒன்றுமே செய்வதில்லை. உங்களிடம் இருப்பவற்றை இலகுத் தன்மையாக்கி, தெளிவாக்கி நீங்களே காண வைக்க முயற்சிக்கின்றார்". எம்மிடம் காதல் இல்லையா? கருணை இல்லையா? அவை எம்மிடம் உண்டு. ஒரு காலத்தில் கலைஞர்கள், உங்களிடம் இல்லாத சக்திகள் எம்மிடம் உண்டு என காட்ட முனைந்தனர். அது அவ்வாறில்லை. திரைப்படங்களில் இந்த பண்புகளை வெற்றி பெறச் செய்ய இயக்குனரின் இலகுத் தன்மை அவசியம். தெளிவாகவும் உண்மையாகவும் மனித வாழ்க்கையை வெளிகாட்ட வேண்டியேற்படுகின்றது. அனைத்து மனிதர்களும் தமது நடவடிக்கைகள் பற்றி ஏதோ ஒரு காரணத்தைக் கொண்டிருப்பார்கள். அந்த காரணத்தின் படி தான் ஒரு நபரை அடையாளம் காண முடியும். அந்நபரின் பாத்திரம் கறுப்பா, வெள்ளையா என்பதை யோசிப்பதை விடுத்து மனிதர்களை மனிதர்களாக அவதானிக்கும் போதுதான் படைப்புக்கும் ஒரு அர்த்தம் ஏற்படுகின்றது. அவ்வாறான முறையில் மனித வாழ்வை நோக்க முடியாவிட்டால், எதிர்காலத்தில் அப்படைப்பு நிலைத்து நிற்கும் எனக் கூற முடியாது.

**உங்களது பவுறு வளளு திரைப்படத்தில் பொதுவாக அனைத்து பாத்திரங்களும் — குறிப்பாக நீட்டாவின் பாத்திரம் — ஒழுக்கமாக கையாளப் பட்டுள்ளது. நடிப்பு பற்றிய உங்களது அபிப்பிராயம் என்ன?**

இங்கு நாம் தேடிச் செல்பவர்களாகவே செயற்பட வேண்டும். நமக்கு நடிப்பு பற்றிய தேடலை செய்ய வேண்டியேற்படுகின்றது. இயக்குனரிடம் குறிப்பிட்ட பாத்திரம் தொடர்பான யோசனைகள் ஏற்கெனவே இருக்கக்கூடும். ஆனால் யதார்த்தமான நடிப்பை எங்ஙனம் பெறுவது? வாழ்க்கையில் ஒவ்வொருவரும் முகம் கொடுக்கும் அனுபவங்களையே நடிப்பு என நாம் குறிப்பிடுகின்றோம். இயக்குனர் பாத்திரங்களை இயக்கும் போது நல்லது கெட்டது என்ற வரையறையில் நிற்காது, அந்த வரையறைகளை மீறி உள் பிரவேசிக்கின்றாராயின், நடிக நடிகையரும் அதற்கு தயாராக இருக்க வேண்டும். நல்லது, கெட்டது என்ற வரையறையில் மட்டும் நாம் இருக்கமுடியாது. ஆசியா, இந்தியா திரைப்படங்களோடு உருவான நடிப்பு பாணி இந்த இரு வரையறைகளில் தான் தங்கியுள்ளது. நடிக நடிகையர் திரைப்படங்களில் நடிக்க வரும்போதே, " இந்த பாத்திரம் sympathy யானதா" எனக் கேட்கின்றனர். இயக்குனரொருவர் வாழ்வின் கறுப்புக்கும் வெள்ளைக்கும் இடையிலான Gray இடைவெளிக்கு செல்ல விரும்பி நடிக நடிகையரிடம் அவ்வாறான நடிப்பை எதிர்பார்க்கின்றார். அவருக்கு கிடைக்கும் நடிகர்கள் அனைவரும் வாழ்க்கை தொடர்பான ஆழமான விளக்கத்தை கொண்டிருப்பார்களாயின் இயக்குனர் அதிர்ஸ்டசாலி என்றே கூற வேண்டும். துரதிருஷ்டவசமாக அவ்வாறானவர்கள் இல்லை. அவ்வாறாயின் இவ்வகையான நடிப்பை எங்ஙனம் பெற்றுக் கொளவது? பிரயோக ரீதியான உண்மை இதுதான். நான் நபர்களை தனித்தனியே விளங்கிக் கொள்வதன் மூலம் இப்பிரச்சினைக்கு தீர்வு தேட முடிவெடுத்தேன். அவர்கள் டோனி, தமயந்தி, நீட்டா, சங்கீதா என்று யாராவதாகவும் இருக்கலாம். எமது எதிர்பார்ப்புக்களை அவர்களிடம் தெரிவித்ததும் அவற்றை விளங்கிக் கொள்ளும் இயல்பு இல்லை. ஏனெனில், எமது நடிகர்கள் நடிப்பு தொடர்பான பாடசாலைகளுக்குச் சென்று நடிப்பு கற்றவர்களில்லை. இதனால் திருட்டுத் தனமாக அவர்களுக்குள் நுழைந்து எமக்கு தேவையான நடிப்பை பெற வேண்டியேற்படுகின்றது.

நடிப்பு என்று குறிப்பிடும் போது உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் ஆண்களை விட பெண்கள் திறமையானவர்கள். ஆண்கள் எப்பொழுதும் தமது ஆண்மையைப் பற்றி நினைக்கின்றனர். அதேபோல், வேதனைகளை வெளிப்படுத்தக் கூடிய நடிக நடிகையர்கள் உலகத்தில் குறைவாகவே உள்ளனர். மாலன் பிரண்டோவை எடுத்துக் கொண்டால் அவர் தனது நண்பனுக்குக் கூட கூறாத இரகசியங்களை, தமது வாழ்க்கையின் மோசமான பகுதிகளை நடிப்பில் வெளிப்படுத்தினார். அவர் இந்தத் தன்மையினால் தான் திறமையான நடிகராக உருவானார். அவர் நன்மை, தீமைகளை பேச்சின் மூலம் வெளிப்படுத்தவில்லை. அவற்றை தன் நடிப்பு மூலமே வெளிப்படுத்தினார்.

திரைப்படத்தில், வாழ்க்கையின் இருண்ட பகுதிகளை வெளிகாட்டுவதில் இலங்கையைச் சேர்ந்த நடிக நடிகையர்கள் போதிய திறமை வாய்ந்தவர்களல்லர். எந்நேரமும் அவற்றை மறைக்கவே முயல்கின்றனர். சரி, தம்மை மறைத்துக் கொணடால் என்ன செய்வது? அப்பொழுது வெளிப்புற நடவடிக்கைகள் மூலம் அவரை செயற்படுத்த நேர்கின்றது. இவ்விடத்தில் இயக்குனர் ஒரு கடினமான காரியத்தில் இறங்குகின்றார். ஏனெனில், உள்ளகம் வெளிப்படும் விதத்தில், வெளிப்புற செயற்பாடுகளை ஏற்படுத்த மற்றும் அச்செயற்பாடுகளை உள்ளகத்திலிருந்து தோன்றுவதாக காட்டும் போலியை தயாரிக்க இயக்குனர் முயல்வார். திரைப்படங்களில் காட்சிகளை தொகுப்பதன் (Editing) மூலம் இந்த போலியை ஏற்படுத்த முடியும்.

நன்றி - நூலகத்திட்டம்



ஈரானிய மக்களுக்கு சலனப் படங்களை முதன் முதலில் அறிமுகப் படுத்தியவர் *மிர்சா இப்றாகிம் கான் சஹாப் பாஷி* (1905) என்பவராவார். *அரசனின் ஐரோப்பிய விஜயம்* என்ற திரைப்படத்தை ஆக்குவதற்காக *மெஸபரடின் ஷாவுடன்* வெளிநாடு சென்ற முதலாவது இயக்குனரும் இவரே.


*கான் பாபா மொஸாடியும்* ஈரானுடைய முதல்தர திரைப்பட இயக்குனர்களாகக் கணிக்கப்படுபவர்களுள் ஒருவர். இவரது

1. CONSTRUCTING TEHRAN'S RAIWAY
2. THE PARADE OF THE ARMY TROOPS
3. THE RAIL ROAD OF THE NORTH என்பன குறித்துச் சொல்லக் கூடிய திரைப்படங்களாகும். அவன்ஸ் அவ்கானியன்ஸ் (1930) ABBY AND ROBBY என்ற முதல் ஈரானியச் சலனப் படத்தைத் தயாரித்தார். ஈரானில் தயாரிக்கப்பட்ட இப்படத்தில் நடித்த இரு டென்மார்க் நகைச்சுவை நடிகர்களான பற், பற்றசோம் ஆகியோர் மக்கள் மத்தியிலும், பத்திரிகை விமர்சகர்கள் மத்தியிலும் மகத்தான வரவேற்பைப் பெற்றனர். அவ்கானியன்ஸினுடைய ஏனைய மௌனத் திரைப்படங்கள் HAJI AGHA - THE CINEMA ACTOR என்பன ஆகும். இவை இரண்டையும் மேவி THE LOR GIRL எனப்படும் ஈரானியச் சலனப்படம் வெளிவந்தது. THE LOR GIRL இனுடைய ஒளிப்பதிவு வேலைகள் இந்தியாவின் இம்பீரியல் கம்பனியிலேயே செய்யப்பட்டு(1933), ஈரானில் அபான் நகரில் காண்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பேசும் சலனத் திரைப்படங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஈரானில் தயாரிக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டன. அவற்றுள் பிரபல்யமான படங்களாவன SHIRIN AND FARHAD, THE BLACK EYES, LEILI AND MAJNOON ஆகும். 1950 களின் பின் அரைப் பகுதியில் முன்னரைவிட ஈரானிய சினிமா உலகு மிகுந்த சுறு சுறுப்படைந்தது. ஈரானில் முதல் ஸ்ருடியோவை உருவாக்கிய *இஸ்மாயில் கௌசான்*, பெரிய அள்விலான சலனப் படங்களைத் தயாரித்தார். இருந்தபோதும்- துரதிஷ்டவசமாக இக்காலகட்டத்தில் பரந்த அளவிலான மலிந்த, தரமற்ற திரைப்படங்கள் தான்தயாரிக்கப்பட்டன. அவற்றுள் அநேகமானவை பலவீனமான, சுபமான முடிவுகளைக் கொண்ட படங்களாக இருந்தன. இந்நிலைதான் 1941-1968 வரையில் ஈரானிய சினிமாவை ஆக்கிரமித்திருந்தது. 1960களில் பல ஈரானியத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் மரபு ரீதியற்ற திரைப்படங்களைத் தயாரிக்க ஆரம்பித்தனர். இவை அக்காலத்தைய மலினத் திரைப்படங்களுக்கு எதிர்நிலைப் பட்டவைகளாக இருந்தன. இவர்கள் தயாரித்த படங்கள் ஈரானிய சமூகம் பற்றிய விவரண, வர்ணனைத் திரைப்படங்களாக இருந்தன. இந்தப் போக்கைக் கொண்ட ஆரம்பப் படங்களில் *தரியுஸ்மெஹ்ருஜியின்* THE COW, *மசூத் கிமியாயியின்* GHEYSAR, *தாவூத் மெலாப்பூரின்* AHOU KHANOM'S HUSBAND என்பன குறிப்பிடத்தக்கன. மேலும் இக்காலப் பகுதியில் ஈரானியத் திரைப்படங்கள் சர்வதேச திரைப்பட விழாக்களில் சில சாதனைகளைப் படைத்தன. எனினும், இச் சாதனைகள் புரட்சிக்குப் பின்னான காலத்துடன் ஒப்பிடும் போது மிகக் குறைவானவையாகும்.

1960களின் இறுதியிலும் 1970களின் ஆரம்பப் பகுதியிலும் மலினமான படங்களை முற்றாகவே நிராகரித்து அவற்றைப் புறமொதுக்கிய சில புதிய முறைமைகளைத் தோற்றுவித்த தனித்துவமிக்க திரைப்படத் தயாரிப்பாளர்கள் தயாரிப்பில் ஈடுபட்டனர். இவர்களில் சிலர் தமது ஆரம்பப் படங்களை (பெரும்பாலும் குறும் படங்கள்), INSTITUTE FOR THE INTELLECTUAL DEVELOPMENT OF CHILDREN AND YOUNG ADULTS இலேயே தயாரித்தனர் மற்றும் சிலர் இந்நிறுவனத்தில் தமது உள்ளார்ந்த வெளிப்பாடுகளை திரைப்படமாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டனர். உதாரணத்திற்கு *அப்பாஸ் கிரியோஸ்றமியைக்* குறிப்பிடலாம். (இவர் புரட்சிக்குப் பிந்திய ஆண்டுகளில் திரைப்படத்துறையில் உன்னத நிலையை அடைந்தார்). இவர் கூட தனது ஆரம்பப் படத்தை இந் நிறுவனத்திலேயே தயாரித்தார். குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய மற்றும் இரு திரைப்படத் தயாரிப்பாளர்கள் *பஹ்றம் பெசாயும், நஸர் தஃவாயும்* ஆவர். இவர்கள் மிகச் சிறந்த தமது அதிகமான படங்களை இஸ்லாமியப் புரட்சியின் பின்னரே தயாரித்தனர். இவர்களும் கூட இந்தக் கல்வி நிலையத்திலேயே தான் தங்கள் ஆரம்பச் செயற்பாடுகளைத் தொடங்கினர். இருப்பினுங் கூட, அந்த ஒரு சில முற்போக்குச் சிந்தனையுடைய படத்தயாரிப்பாளர்களது போராட்டம் 1970 களின் ஆரம்பங்களில் ஈரானிய சினிமாவின் போக்கை மாற்றுவதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. இந்தக் காலத்தில் திரைப்படத் தயாரிப்பாளர்கள் அநேகர் வருமானம் தரும் பட வியாபாரத்தின் பால் தங்கள் கவனத்தைச் செலுத்தத் தொடங்கினர். இவர்கள் தங்களின் பயனற்ற திரைப்படங்களால் ஈரானின் திரைப்படச் சூழலை மாசுபடுத்திக் கொண்டிருந்தனர். மறுபுறத்தில் சினிமா ரசிகர்கள் மலினத் திரைப்படங்களின் அதிகரிப்பால் ஒரு வகை சலிப்புத் தன்மைக்கு உட்பட்டனர். இதன் விளைவாக ஷா ஆட்சியின் இறுதிக் கால கட்டத்தில் ஈரானிய சினிமா ஒரு பலத்த தேக்க நிலைக்குட்பட்டது. எனவே இத் தேக்க நிலையால், ஷா மன்னராட்சி ஆட்டம் கண்டதோடு, ஈரானிய சலனத் திரைப்படத் துறையும் ஆட்டம் காணத் தொடங்கியது. உண்மையில் இந்தத் திரைப்படத்துறை மன்னராட்சியின் தேக்கம், பின்னடைவு என்பதன் உருவகமாக மாறிவிட்டதெனலாம். இது மக்களது கோபத்தின் இலக்காக மாறியது. இறுதியில் பெப்ரவரி 1979 பெஹ்மனில் பஹ்லவியினரின் எதேச்சாதிகார முடியாட்சியும், புரட்சிக்கு முந்திய சலனத் திரைப்படத்துறையும் இழுத்து மூடப்பட்டன.



> சினிமா ரசிகர்கள்
> மலினத்திரைப் படங்களின்
> அதிகரிப்பால்
> ஒரு வகை
> சலிப்புத் தன்மைக்கு
> உட்பட்டனர்.
> இதன்விளைவாக
> ஷா ஆட்சியின்
> இறுதிக் கால கட்டத்தில்
> ஈரானிய சினிமா
> ஒரு பலத்த
> தேக்க நிலைக்குட்பட்டது.



## இஸ்லாமியப் புரட்சிக்குப் பின்னர் ஈரானிய சினிமா

1979ம் ஆண்டின் ஈரானியப் புரட்சியினது வெற்றியின் பின்னர், ஈரானிய சினிமாவும் பெரும் மாற்றத்திற்குட்பட்டது. புரட்சிக்கு முந்திய அநேக திரைப்படங்கள் புரட்சிக்குப் பிந்திய தேசிய மற்றும் இஸ்லாமியப் பெறுமானங்களுக்கு முரணானவையாகவே அமைந்திருந்தன. இவ்வாறானவை தடை செய்யப்பட்டுமிருந்தன. திரையரங்குகளில் சில வெளிநாட்டுப் படங்களுடன் ஒரு குறித்தளவு புரட்சிக்கு முந்திய படங்களும் காண்பிக்கப்படுவதற்கே அனுமதிக்கப்பட்டிருந்தது. உயிர்ப்புள்ள சினிமாத் துறையின் சமூகத் தேவைப்பாட்டை கருத்திற் கொண்ட இஸ்லாமியப் பிரச்சார, கலாச்சர அமைச்சின் சினிமாத்துறைப் பிரிவின் அதிகாரிகள் ஒரு சினிமா நிறுவனத்தைத் தொடங்க திடசங்கற்பம் பூண்டனர். இதன் நோக்கம் சினிமாக் கலைஞர்கள், பார்வையாளர்களின், பெறுமானங்களை, உணர்வு வெளிப்பாடுகளை ஊக்குவித்து ஆதரவளிப்பதாக இருந்தது. இந்த அடிப்படையில் 1983ல் *பராபி* சினிமா நிறுவனம் தொடங்கப் பட்டது. அதே ஆண்டிலேயே இந் நிறுவனம் (இதன் முதல் பணிப்பாளர் *செய்யத் முஹம்மத் பெஹஸ்டி*) முதலாவது 'பஜ்ர்' திரைப்பட விழாவை ஒழுங்கு செய்தது. ஈரானிய சினிமாவின் தரத்தை ஸ்திரப்படுத்தி உயர்த்தும் நோக்கில் இந்த நிறுவனம் மூன்றாம் தர, மலினமான வெளிநாட்டுப் படங்களுக்கு தடை விதித்தது. அத்துடன் ஈரானிய சினிமாத் துறையினரது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றியதுடன், நிதியுதவி வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தது.

ஆரம்பம் தொட்டே வருடாந்தம் நடக்கும் திரைப்பட விழாவானது ஈரானியத் திரைப்படத் துறையினரிடையே பலமான தொடர்புக்கு வழி வகுத்தது. இத் தொடர்பைப் பேணுவதில் அது மிகவும் பிரயத்தனம் எடுத்தது. கூடவே இந்தத் திரைப்பட விழா விமர்சகர்களுக்கும் திரைப்பட ரசிகர்களுக்கும் தங்கள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கான, ஈரானிய சினிமாவின் வருடாந்த சாதனைகளை, அடைவுகளை கணிப்பிட்டுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்கியது. பதினேழு வருடங்களின் முன்பு தொடங்கப்பட்ட இந் நிறுவனமானது, ஆரம்பம் தொட்டே நாட்டின் கலாசார வாழ்க்கையில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க முக்கிய பங்கை ஆற்றியுள்ளது. ஈரானுக்கு எதிரான ஈராக்கின் ஆக்கிரமிப்பு யுத்த ஆரம்பம் தொட்டே பராபி சினிமா நிறுவனம் போர் நிலைமை பற்றிய படங்களைத் தயாரிப்பதிலும் அவற்றிற்கு ஒத்தாசை புரிவதிலும் தன்னை ஈடுபடுத்தியது. உதாரணத்திற்கு- 1986 ல் இந்நிறுவனமானது, முனைப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த யுத்தம் காரணமாக யுத்தம் பற்றிய திரைப்பட விழாவை நாடு முழுவதுமாக நடாத்தத் தீர்மானித்தது. 24 மாகாணங்களில் இத்திரைப்பட விழாவை நடாத்தி மக்களின் பரந்துபட்ட ஆதரவையும், வரவேற்பையும் பெற்றது. இச் செயற்பாடானது இந் நிறுவனத்தின் முக்கியமான பணியாக அமைந்தது. கூடவே, இந்நிறுவனம் யுத்தப் படத் தயாரிப்புகளில் பெருமளவு மூலதனத்தை இட்டது. ஈரானில் இவ்வகையான படத் தயாரிப்புத் துறையின் வளர்ச்சிக்கு உதவுவதே இதன் நோக்கமாக இருந்தது. *இப்றாகிம் ஹத்தாமிக்கியாவால்* நெறியாள்கை படுத்தப்பட்ட THE SCOUT என்ற திரைப்படம் பராபி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இப்படமானது உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பரந்தளவில் கவனிப்பிற்குள்ளானது.

இதே வேளை புரட்சிக்குப் பிந்திய காலப் பகுதியில் இந்நிறுவனத்தின் சர்வதேசத் தொடர்புகள் பிரிவு பல்வேறு முக்கிய சர்வதேசத் திரைப்பட விழாக்களில் ஈரானிய சினிமாவை அறிமுகப் படுத்தும் முக்கிய பணியை மேற் கொண்டது. சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்குபற்றுவதன் மூலமும், குறிப்பிட்டுச் சொல்லத் தக்கதான ஈரானியத் திரைப்படங்களை உலகிற்கு அறிமுகப் படுத்துவதிலும் இந்தப் பிரிவின் அதிகாரிகள் , பொறுப்பானவர்கள் வெற்றி கண்டனர். இச் செயற்பாடுகளால் உலகச் சினிமாவுக்கும் ஈரானியச் சினிமாவுக்குமிடையிலான ஒரு நிரந்தரத் தொடர்பு உருவாக்கப் பட்டது. ஈரானியச் சினிமாவின் முக்கிய செய்தியானது என்னவெனில் "நாங்கள் எங்களுடைய பிரதான கருத்தியலை வெளிப்படுத்திச் சொல்வதற்கு செக்ஸிலும், வன்முறையிலும், வீரதீரச் சாகசங்களிலும் தங்கியிருக்கவில்லை என்பதும், எங்கள் சினிமா இவற்றையெல்லாம் விட தனித்துவமானது என்பதுமாகும்". இந்தச் செய்தியைத் தெரியப் படுத்துவதில் ஈரானிய சினிமா வெற்றுக் கோசங்களை எழுப்பாது, நடைமுறை ரீதியில் வெற்றி பெற்றது. புரட்சிக்குப் பிந்திய ஈரானிய சினிமா புரட்சிக்கு முந்திய காலத்தை விட பல்வேறு வகையிலும் வேறு பட்ட குறிக்கோள்களைக் கொண்டிருந்ததென்பதை படங்களூடாகவே அறிய முடிகிறது. புரடசிக்குப் பிந்திய ஈரானிய சினிமா- உலகம் பற்றிய மனிதாபிமானப் பார்வையை, மானுட நோக்கை அறிமுகப்படுத்தியதில் முன்னோடியாக இருந்ததெனலாம். இந்த அறிமுகப்படுத்தலின் மூலம் சர்வதேசப் பார்வையாளர்கள் மத்தியில் பெரும் புகழை ஈரானிய சினிமா சம்பாதித்துக் கொண்டது. இன்னும் ஈரானிய சினிமாக்கள் சர்வதேச திரைப்பட விழாக்களில் பெற்ற அங்கீகாரங்கள், ஈரானிய சினிமாவின் முக்கியத்துவம் போன்றவை உலகின் பல பல்கலைக்கழகங்களில் ஈரானியச் சினிமாவை பாடவிதானத்திற்குரிய ஒன்றாக மாற்றியது. இதன் மூலம் இந்தச் சினிமாக்களின் கலாசார, கொள்கையடிப்படையிலான பரிமாணங்களை விளங்கிக் கொள்ளக் கூடியதாயுள்ளது.



புரட்சிக்குப் பிந்திய காலப்பகுதியில் ஈரானியச் சினிமாவானது தன் செழிப்பு மிகு தேசிய, இஸ்லாமிய கலாசாரப் பெறுமானங்களில் தனது கவனத்தைப் பதித்தது. இந்தக் கலாசாரத்துடனான தொடர்பை கெட்டியாக்கும் நோக்கில் ஈரானிய சினிமாவானது இறந்தகால இஸ்லாமிய கலாசாரத்தின் ஆன்மீக உள்ளடக்கங்களின் பால் தன் கவனத்தைக் குவித்தது. இந்த வகையில் ஈரானியச் சினிமா, ஈரானிய இஸ்லாமியக் கலாசாரத்தின் ஆன்மீகப் பரிமாணங்களை வெளிப்படுத்தும் வகையிலான திரைப்படங்களைத் தயாரித்தது. புரட்சிக்குப் பிந்திய காலத்திலும் கூட முன்பிருந்த பாலியல் வன்முறைக் குணாம்சங்கள், ஈரானியத் திரைப்படங்களில் பிரிக்க முடியாத அம்சமாக இருந்தது. இந்த பிரிக்க முடியாத சினிமாக் குணாம்சங்களை-ஒழுக்கக் கூறுகளும், ஆரோக்கியமான சமூக உறவுகளும் பிரதியீடு செய்தன. இறந்த காலத்தைய மலினமான, மூன்றாந் தரத் திரைப்படங்கள் ஈரானிய சமூக யதார்த்தங்களை பயன்படுத்தாத காரணத்தால் அதன் இடத்தை, தூய்மையான அன்பு, நட்பு, அமைதி, சமாதானம், மனிதாபிமானம், ஆன்மீகம், பொறுப்புணர்ச்சி மற்றும் இது போன்ற ஈரானின் மரபார்ந்த சமூகப் பெறுமானங்களை அடித்தளமாகக் கொண்ட படங்கள் நிரப்பின. புரட்சிக்குப் பிந்திய ஈரானிய சினிமாவின் குறித்துச் சொல்லத் தக்க இன்னொரு சிறப்பம்சம் யாதெனில், அது திரைப்படத் துறையில் பெண்களையும் உள்வாங்கியமையாகும். புரட்சிக்கு முந்திய கால கட்டங்களில் திரைப்படங்களில் பொருத்தமற்ற பாத்திரங்கள் வழங்கப் பெற்ற ஈரானியப் பெண்கள் இஸ்லாமியப் புரட்சியின் வெற்றியின் பின்னர் திரைப்படத் தயாரிப்பிலும், நெறியாள்கையிலும் ஈடுபட்டனர். அதாவது பெண்களின் முதலாவது திரைப்படம் இஸ்லாமியப் புரட்சியின் பின்னரே தயாரிக்கப்பட்டது. பெண்களின் இந்தத் திரைப்படத்துறைப் பிரவேசமானது, அவர்களின் திரைப்படத்துறை ஆண் சகபாடிகளின் தகைமையை பல வழிகளிலும் பெற்றிருந்ததை காணக்கூடியதாயிருந்தது. புரட்சிக்குப் பிந்திய சில வருடங்களில் ஈரானியப் பெண்கள் நடிகைகளாக மட்டும் தங்கள் பங்களிப்பைச் செய்யவில்லை. நெறியாளர்களாக, தயாரிப்பாளர்களாக, சினிமா எடிட்டர்களாக, கமரா இயக்குனர்களாக, பல முக்கிய பணிகளில் தங்கள் பங்களிப்பைச் செய்திருக்கின்றனர். கலை மற்றும் தொழில் நுட்பத் துறைகளில் ஈரானியப் பெண்களின் பங்களிப்பை உள்வாங்கியதற்கான முக்கியமான காரணம், இஸ்லாமிய கலாச்சாரத் தாக்கங்களுக்குட்பட்ட பாதுகாப்பான, ஆரோக்கியமான சூழலை பேணிக் கொள்வதற்காக இருக்கலாம். புரட்சிக்குப் பிந்திய காலங்களில் பெண்கள் பாலியல் பண்டங்களாக சினிமாவில் பாவிக்கப்படுவது நீடிக்கவில்லை. இதற்குப்பதிலாக இவர்கள் கமராவிற்கு முன்னாலும், பின்னாலும் தமது வலிமையான பிம்பங்களையும், பலமான தன்னடையாளங்களையும் வெளிக்காட்டினார்கள். புரட்சிக்கு முந்திய காலத்தோடு ஒப்பிடுகையில் புரட்சிக்குப் பிந்திய ஈரானிய சினிமா குறிப்பிட்டுச் சொல்லத்தக்க மூன்று வகை வளர்ச்சிகளைக் கொண்டிருப்பதைக் காணலாம்.

*முதலாவது:-*

படத்தயாரிப்பில், அரங்க வடிவமைப்பில், படப்பிடிப்பில், ஒலிப்பதிவில், ஒப்பனையில் ஏற்பட்ட புதிய பரிமாணங்கள் உள் நாட்டிலம், வெளி நாட்டிலுமுள்ள சினிமா விமர்சகர்களின கவனத்தை ஈர்த்தது.

*இரண்டாவது:-*

*திரைப்படத்துறையின் ஸ்திரத் தன்மை.*

உதாரணமாக- CENTER FOR CINEMA போன்ற நிறுவன ரீதியிலான திரைப்பட அமைப்பு இத்துறை சார்ந்தோரினதுஉரிமைகளைப் பாதுகாப்பதிலும், தொழில் உத்தரவாதம் வழங்குவதிலும் துணைநின்றது. இம்முறைமை முந்திய காலங்களில் இருக்கவில்லை.

*மூன்றாவது:-*

புரட்சியின் பின் ஈரானியத் திரைப்படத்துறை சார்ந்தோர் நாட்டின் அரசியல், சமூக செயற்பாடுகளில் பங்கேற்றனர். இது முன்பு நிகழ்ந்திராத ஒரு வளர்ச்சியாகும். இதற்கு மிக அண்மைய உதாரணம், அவர்களின் ஜனாதிபதித் தேர்தல் பங்களிப்பாகும். ஜனாதிபதித் தேர்தலின் போது அதிகமான சினிமாத்துறை முக்கியஸ்தர்கள் ஜனாதிபதி வேட்பாளரான *ஸெய்யத் முஹம்மத் க(த்)தாமியை* பலமாக ஆதரித்ததுடன் அவரின் தேர்தல் வெற்றியை வரவேற்றுக் கொண்டாடினர். இஸ்லாமிய வழிகாட்டல், கலாசார அமைச்சுப் பதவியில் இருந்த போது சினிமாத் துறை சார்ந்தோருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த க(த்)தாமியின் வெற்றியானது எதிர்காலத்திலும் ஈரானிய சினிமா தன் பாதையில் மேலும் ஒளிமயமான நிலையினை அடையும் என்ற

-18



நன்றி - நூலகத்திட்டம்



**தமிழகத்திலிருந்து வெளிவரும் "தலித்" சஞ்சிகை 1997இலிருந்து வெளிவரத் தொடங்கியிருக்கிறது. தமிழகத்தில் தலித்தியம் குறித்த கருத்துருவாக்க விடயங்களில் தொடர்ச்சியாக தன்னை ஈடுபடுத்திவரும் தலித் போராளியான ரவிக்குமாரின் தயாரிப்பில் இது வெளியிடப் பட்டுவருகிறது. இது வரை வெளியாகியிருக்கின்ற இதழ்களில் தலித் கலை, இலக்கியம் மற்றும் அரசியல் சார்ந்த கட்டுரைகள், கதை, சிறுகதை, கள அறிக்கைகள், மொழிபெயர்ப்புகள் என மிகவும் காரமானதும், கருத்தாழம் மிக்கமானதுமான படைப்புகளுடன் வெளிவருவருது இதன் சிறப்பு. 1997ஜூலையில் வெளியான "தலித்" சஞ்சிகையின் 2வது இதழிலில் வெளியான "வரைவு" எனும் சிறுகதை இங்கு நன்றியுடன் மறுபிரசுரம் செய்யப்படுகிறது.**

அவன் தன் முடிவைப்பற்றி அவளிடம் சொன்னபொழுது அதை ஒரு வகையில் தாங்கிக் கொள்ளக்கூடிய நிலையை அவள் அடைந்து விட்டிருந்தாள். அவனோ தன் முறைப் பெண்ணிடம் செல்லும்வழியின் தடத்தில் மனதை அலைய விட்டிருந்தான். அவனின் முகத்தில் அந்த எண்ணமே வழிந்து கொண்டிருந்ததுபோல் அவளுக்குப்பட்டது. தனக்கு நிலையாக எதுவும் கிடைக்காது என்ற சுய சமாதானம் அவளில் உறைந்து போய்வீட்டிருந்தது. அந்த நேரத்தில் அவள் தன் அப்பனைப் பற்றி நினைத்தாள். இத்தனை நாளாக அந்த நினைப்பு எங்கே ஒளிந்து கொண்டிருந்தது என்ற ஆச்சரியம் அவளுள் முகிழ்க்கையில் அவன் சார்ந்த இருப்பு அந்த ஞாபகங்களை மறக்கச் செய்துவிட்டது என்றே எண்ணினாள். அவன் வெளியெ வரவும் இவளும் அவன் கூடவே தயங்கி வந்தவள், வெளியில் ஒரு மரப்பெட்டியில் ஆடுகளை வைத்துக் கொண்டு சென்ற ஒருவனைப் பார்த்தவுடன் அவன் தன்னைவிட்டு விலகிப்போகும் அந்த இறுதிக்கணத்தில் அவன் நினைவு அழிந்து, அந்த ஆடுகளின் கருமை நிறத்தில் பார்வையை ஓடவிட்டாள் தன் அப்பனை நினைத்தவாறு.

அவன் செடிகளுக்கு எரு வைப்பதை தொழிலாகக் கொண்டவன். இதற்காக அவன் பல ஊர்களில் மாட்டுத்தொழுவத்தில் கிடந்தான். அதற்கு கூலியாக அவன் என்ன பெற்றுக்கொண்டான் என்பது அறுதியிட முடியாத விசித்திரமாக இருந்தது. எந்நேரமும் மாட்டுத்தொழுவத்தில் இருந்த அவனின் மீது நல்ல வைக்கோலின் சொணை ஏறிப்போய் கிடந்தது. அவனின் மகிழ்ச்சி செடிகள் வளப்பமாக நிமிர்ந்து வளரும் இளந்துளிர்களில் அடங்கிப்போய் இருந்தது. அவை வளர்கின்ற வரையில் அவன் அவைகளை பாதுகாப்பாக வைத்திருப்பதில் முனைப்பு காட்டுவான். தோட்டமில்லாத குடிசை அவனுடையது. அவனோ மற்றவர்களின் செடிகளைப் பாதுகாத்தான். ஆடுதொடா குச்சிகளால் கூண்டு வரியம் செய்து செடிகளுக்கு தற்காப்பு தருவதில் குறியாய் இருந்தான் இத்தகைய பிழைப்பின் ஊடே அவன் தன் மகளை மறந்துவிட்டான் என்றுதான் சொன்னார்கள். ஆனால், அவன் தன் மகளின் கல்யாணத்திற்காக ஐந்து ஆடுகளை வைத்திருந்தான்.

தெருவில் ருதுவாகி கல்யாணமாகாதவள் தன் மகள் ஒருவள் தான் என்ற சொரணை அவனுக்கு இல்லாமல் இல்லை. வேற்று ஊர்களின் ஆடுபிடிப்பவர்கள் வந்து விலைக்கு கேட்டபொழுதும் அவன் அவர்கள் கேட்டவிலைக்கு தரவே இல்லை. அவர்கள் சொல்லும் விலைப்பணம் சொற்பமாக இருந்ததால் கல்யாணத்திற்கு சரிகட்டுமா என்ற அவநம்பிக்கை அவன் உடல் முழுவதிலும் நுழைந்துவிட்டிருந்தது. தன் கல்யாணம் அந்த ஆடுகளால்தான் முடியும் என்ற நினைப்பில் இருந்த இவள், தனக்கு ஒரு புது உறவு வந்ததும் அந்த ஆடுகள் மரித்துபோய் விடுவதற்கான நிஜம் அதன் பின்னால் இருப்பதை அவள் கொடுக்கும் தழை கொத்துக்களை தின்றுவிட்டு அவை போட்டிருக்கும் புழுக்கைகளை பார்த்து துயர் கொண்டாள். அது அவளுக்காகவே கல்யாணச் செலவை அடக்கிவிடக்கூடிய திண்மையுடன் வளர்ந்து இருப்பதாகவே இருந்தது. ஆட்டுவிலை பேசி ஒவ்வொரு முறையும் தொட்டு தூக்கி விலைசொல்லும் பொழுதும், இவள் அப்பன் மறுத்துவிடும் பொழுதும் அது கொற ஆடாக இல்லாமல் நன்றாகவே வளர்ந்தது. விலை ஆட்டுக்காரன் தொட்டுவிட்டால் ஓங்காது என்பதற்கு நேர் எதிராய் இருந்தது.

இந்த ஆடுகளின் அதிபதி என்கின்ற உரிமையில் இருந்து ஒருநாள் கீழ் இறக்கப்பட்டான். ஆடுகள் திருடுப்போய்விட்டிருந்தது. ஆடுகளை திருடிய அவன் எப்பொழுதாவது ஒரு பருவத்தில் வருவான். அவன் வருகின்ற பருவம் பெரும்பாலும் பயிர்கள் அறுபட்டு உணவுக்கு தயாராகும் தருணமாகவே இருந்தது. பகலெல்லாம் கால்களுக்கு அலைச்சல் கொடுத்துவிட்டு அது ஓய்ந்தபிறகு நடை தளர்ந்து இரவில் வருவான். வீட்டின் வாசல்களில் இருக்கும் சனங்களை பொருட்படுத்தாமல் எந்த ஒரு வீட்டிலும் சகஜமாய் நுழைவான். அவனை அவர்கள் வேற்று ஆளாகப் பார்க்கத் தெரியாதவர்களாக இருந்தார்கள். அவன் நீண்ட அழுக்கான கம்பளியை அணிந்திருப்பான். அதையும் மீறி அவன் மீது கடும்சிக்கு நாற்றம் அடிக்கும். அவனுக்கு அவர்கள் கேட்பதற்கு முன்பே உணவு வகைகளை சூதுவாது தெரியாமல் கொடுத்தார்கள். அவனே சில நேரங்களில் வரப்பில் முளைத்து கிடக்கும் கீரைகளை பியத்துக் கொண்டு போய் சமைக்கச் சொல்வான். பெண்களிடம் அவன் அதை கொடுத்து அவர்களை சீண்டிப்பாடுவான். தெருக்களில் நடந்தவாறே.

*ஆலக்கீரையை அரிஞ்சிக் கட்டினபோல*




*ஏலேலே மச்சான் எண்டி என் கொழுந்தி -*
*என்*
*அடிவயித்த பசி நோவுதடா பாவி பய லோவி*

இப்படி அவன் பாடுவதை இவளும் பார்த்திருக்கிறாள். அவன் இளிப்பும் ரொம்பவும் கேவலமானது. அவன் பெண்களிடத்தில் தாராளமாகவே வார்த்தையடிப்பான். அவன் வம்பளப்பதை காணும் ஆண்கள் அவனை சில நேரங்களில் வைவார்கள். ஆனால், அவன் யாரையும் பெண்டாண்டவன் இல்லை. எப்பொழுதும் சக்தியை மண்ணில் இறக்கும் சம்சாரிகள் அவனின் விட்டேத்தியான சோம்பல் தனமான திரிநிலையை சாக்கிட்டு

"ஏண்டா ஓயா பண்டத்துல வண்டிமாடு ஏற" இப்படி திரிஞ்சிக்கிட்டு இங்க வாற என்பார்கள். ஆனால், அவனோ அதை ஒரு சிரிப்பால் ஏற்றுக்கொள்வான். அவன் தண்ணீரே இல்லாத இடங்களில் அலைந்து திரிந்திருக்கிறான் என்று கூறும்பொழுது அவர்களுக்கு ஆச்சரியமாகவே இருக்கும். "கூடிய வெரசா தண்ணி எங்குமே இல்லாமத்தான் போகப்போகுது" என்று அவன் சொல்வதைக்கேட்டு அவர்கள் பயத்துடன் ஒருவரை ஒருவர் அணைப்பதுபோல் உட்கார்ந்து கொள்வார்கள். தன்னைப் பற்றி அவன் கூடுதலாக பேரிச்சை மரங்களை எல்லாம் பார்த்தவன் என்ற அந்தஸ்தை அவர்களிடம் பரப்பிவிட்டிருந்தான். தங்கள் கொல்லைகளில் இதுவரையில் பார்த்திராத மரவகைகளை அவன் கண்டிருப்பதாக கூறுவதைக்கேட்டு பேரிச்சை பழ இனிப்பையும் நினைவையும் கொண்டு அவன் மேல் மதிப்பு வைத்திருந்தார்கள் பிள்ளைகள். அவன் ஈசல்கள் கிளம்பிய ஒரு மாலைப்பொழுதில் தெருவில் எதிர்பட்ட இவன் அப்பனைப்பார்த்து

"அந்த வெடய என்னா ஊறுகாயா போடப்போற எனக்கு கட்டி குடுத்துடேன்" என்றான்.

இவன் அப்பன் "ஏண்டா உன் வெவகாரத்துக்கு மொற ஏதாவது உண்டா" என கோபமாக கேட்க அவனோ "மொறச்ச கழிக்கு மொற ஏது" என்று சந்தோசம் தொனிக்க சொல்லிவிட்டு நடந்தான். அவன் நினைப்பில் அன்று என்ன ஊறியிருந்து என்பதை அனுமானிக்க முடியவில்லை. அப்படி அன்று பேசிவிட்டுப் போனவன்தான் ஆடுகளையும் கைப்பற்றிக்கொண்டு போய்விட்டான் ராத்திரியில். ஆடுகள் எங்கே என்று அப்பன் கேட்டதற்கு

"நெகாயா இங்கதான் கட்டியிருந்தேன்" என்று இவள் சொல்லவும், எங்கு தேடியும் ஆடுகள் கிடைக்காததால் அவன் உடம்பு தோலில் துயரம் புகுந்து கொண்டது. முகமோ சவளக்களையை பிரதிபலித்தது அன்று இவனின் முகம் பார்த்து கஞ்சிக்கு உப்பு கேட்கக் கூட இயலவில்லை அவனால். அதன்பின் அவன் செடிகளைப்பற்றிய நினைப்பில்லாமல் இருந்தான். அவன் செடிகளுக்கு வைக்கவேண்டிய எரு முழுவதும் குவிந்து போய்விட்டது. ஊரின் மாட்டுத் தொழுவங்களில் அவனால் செய்யப்பட்ட அந்தத் தொழிலை வேறு யாரும் செய்யாததால் செடிகள் எருவின்றி குட்டையும் குறையுமாக சோம்பி வளர்ந்தது. இவன் மகளின் கல்யாணத்தை நினைத்து உடைந்து போய்விட்டதால் புதிதான செடிக்கன்றுகளைக் கூட யாரும் வாங்கவில்லை. எந்த ஒரு புதுக்குழியும் தோண்டப்படவில்லை ஊர்களின் தோட்டங்களில். தன்னைப் பார்க்கும்பொழுது அப்பனுக்கு மிகப்பெரிய துயரம் ஏற்பட்டுக் கொண்டிருப்பதாகவே இவள் உணர்ந்தாள். தன் கல்யாணத்திற்கு வழி அடைபட்டுப்போய்விட்டது குறித்து அவள் மனம் அலைக்கழிந்து கொண்டிருந்தது. முன்பு போலவே செடிகளுக்கு அவன் எரு வைக்கவேண்டும் என்ற எண்ணம் அவளுள் இழைந்து போய் இருந்தது. தன்முகம் அவன் கண்களில் இருந்து விலகி இருந்தால் அது நடக்கும் என்றே தோன்றியது.

தெருவில் முதல் சாணம் தெளிக்கும் சப்தம் தரையில் விழுவதற்கு முன்பே கருக்கலில் ஆடுகள் இன்றி வெறும் புழுக்கை வீச்சம் தங்கியிருந்த அந்த வீட்டிலிருந்து நீங்கியவளாக வெளிவந்தாள். ஒருவரும் தன்னைப் பார்க்கவில்லையென்ற அவளின் எண்ணம் தவறாகியது.இவள் போவதைப் பார்த்தவர்கள் இரண்டுபேர். ஒருவன் சுடுகாட்டு வெட்டியான். இன்னொருவன் கொமுட்டிப் பழத் தோட்டத்துக் காவல்காரன். சுடுகாட்டைத்தாண்டும் பொழுது அவள் நடையின் பரபரப்பில் சலசலத்த ஆலஞ்சருகுகளின் சப்தம் கேட்டு காலை வரையில் தீயில் கருகிக்கொண்டிருக்கும் பிணவாடை கலந்த புகைமூட்டத்தை விலக்கிக்கொண்டு இவள் சரிவில் இறங்குவதைப் பார்த்தான். அவனே இதை அப்பனிடம் கூறவும் செய்வான். அவன் மேல் இவளுக்கு மரியாதை உண்டு. காரணம் வெட்டியான் பெண் பிள்ளைகள் மீது கழிவிரக்கம் உடையவனாய் இருந்தான். இதற்கு மேலும் வெட்டியான் மானஸ்தன் என்று கருகிக்கொண்டிருக்கும் பிணத்திற்குக் கூட தெரியும். பிழைப்புக்காக அசலூருக்கு அறுப்புக்கு சென்ற ஒருத்தி தன் கூலி வெறும் கருக்கா நெல்லாகவும் பதரும் கலந்து இருப்பதற்கு மாற்றுப்படி அளக்கவேண்டும் என்று கங்காணிடம் கேட்டதற்கு அவனோ கோபம் கொண்டு அவள் உடம்பு துணியை உருவிவிட்டான். அதே கூலியை எடுத்துக் கொண்டு துவரைச் செடிகளின் அடர்த்தியிலும் தாழம்புதர்களின் மறைவிலும் உட்கார்ந்து, உட்கார்ந்து இங்கு வந்தாள். சுடுகாட்டுக்கு அண்மையில் வந்தவுடன் கரம்பாகிக் கிடந்த வெளியில் அவள் உடம்பை மறைக்க எந்த பயிர்களுக்கும் வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. வெட்டியான் தன்னைக் கடந்து ஒரு பெண் இந்தக்கோலத்தில் செல்லக் கூடாது என்று, தன் இடுப்பு வேட்டியை அவிழ்த்து விட்டெறிந்தான். அவனிடம் மேலதிகமாக கோவணத்திற்குக்கூட துணி இல்லாதவன் அன்றைக்கு விழுந்திருந்த பிணத்திற்கு குழிவெட்டியாயிற்று என்று சொல்வதற்கு தெருவுக்கு வந்தவன் ஒதியம் மரச்சிம்புகளால் இடுப்பில் குச்சி வளைத்து அதில் கோவைகொடி தழைகளை முன்னும் பின்னும் நெருக்கமாக தொங்கவிட்டு கட்டிக்கொண்டு தெருவில் நுழைந்தான். பூதாகாரமான நகை நட்டு பசையுள்ள பெண்களின் கிண்டல்களை புறக்கணித்தான். அநாதைப் பிணங்களின் வாய்க்கரிசியையும், வாங்காத மனத்துடையவன். இத்தகைய குணமையினால் மற்றவர்களிடம் இருந்து வேறுபட்டு இருந்தால் பெரிய பத்தாயமும் மரக்கால் கொப்பரையடி உள்ள மற்றவர்களையும் தவிர்த்து அலட்சியம் செய்து பங்குனி உத்திரத்தில் காவடிகள் புறப்படும் முன் முதல் ஊர்கூடம் கொளுத்தும் தகுதியை அடைந்தான். ஒரு வெட்டியானுக்கு இத்தனை மரியாதையா என்ற திகைப்பு ஒவ்வொரு குடிகளிடமும் இருந்தது. அவனே அப்பனிடம் சொல்லிவிட்டான் அவன் மகள் ஊரை தாண்டிக்-கொண்டிருக்கிறாள் என்பதை. ஒரு கல்யாணத்திற்காக பந்தல்கால் நட்டுவிட்டு பழம் வெற்றிலையை தட்சணையாகப் பெற்றுக்கொண்டு வருபவனும் எதிர்பட தன் மகளுக்கு பந்தல்கால் நடுவது என்பது இனி சாத்தியமற்றது என்பது உறைக்க அவன் அழுதான். அவனுக்கு அழவும் தெரியும் என்று அப்பொழுதான் எல்லோருக்கும் தெரியவந்தது. அவன் எல்லா வகையிலும் பலசாலிதான். படுப்பதற்கு பெண் துணை இல்லையென்றாலும் கூழு குடித்த தெம்பையெல்லாம் கூத்தியாள்களிடம் இழக்காதவன். இதுவரையில் அவன் கொண்டிருந்த வாழ்பலம் எல்லாம் உதிரத்தொடங்கியிருந்தது. இவள் ஊரைவிட்டு வந்தபின்பு அலங்காரமாக வெறும் பூசணிக்கொடி மட்டுமே படர்ந்து இருந்த தன் கூரை விட்டு முன்பு அவன் புரண்டு அழுது கண்ணிலிருந்து தரை மண்ணிற்கு ஈரத்தை கசிய வைத்தான்.

வெட்டியான் பார்த்தது போக கொமுட்டப் பழ தோட்டக் காவல்காரனும் பார்த்தான். நரிகள் செடிகளையும் பழங்களையும் குலைத்துவிடும் என்று விடியலில் விழிப்பாய் இருந்தநேரம் இராச்சோறு இல்லாத அந்த பொறுப்பான காவல்காரன் தெம்மாங்கை பாடிக்கொண்டிருந்தான். வாகை மரத்தில் அமர்ந்திருந்த பட்சிகள் இந்த வேளை கெட்ட வேளையில் தெம்மாங்கா என்றும் அந்த குரலுக்கு எதிர்சப்தம் தேவையில்லை என்று உட்கார்ந்திருந்தன. அவன் குரல் நிசப்தத்தில் எகிறி காய்த்து இருந்த கொமுட்டிப் பழங்களின் மேல் தோலில் ஒத்தடம் கொடுத்தது. அந்த நேரத்தில் இவள் போவதைப் பார்த்து இரண்டு கொமுட்டிப் பழங்களை பியத்து கொடுக்க நினைத்தவன் காய்கள் குறைந்தால் உன் பொண்டாட்டிய என் வீட்டு நார்க்கட்டிலுக்கு அனுப்பேன் என்று குதறும் தோட்டக்காரனின் வசவுக்கு பயந்து நின்றான்.

அவள் பிரிந்து விட்டபின்பு கூட வீட்டில் அவள் அப்பன் விளக்கு ஏற்றும் மனம் இல்லாதவனாக இருந்தான். அங்கு இருள்தான் எப்பொழுதும் மண்டிவிட்டதாகி விட்டது மண் சுவரில் உள்ள மாடத்தில் இருந்த அகல்விளக்கு ஒளி ஏற்றும் பெண் பிள்ளையின் கைக்காக எதிர்பார்த்துக் கிடந்தது.

குளத்தில் துணியால் மார் முட்டு கட்டி நாட்டு மஞ்சள் அரைத்துக் குளிக்கும் பெண்களின் நடுவில் குளிக்கும் நிலையில் இருந்து பிரிந்துதான் போய்விட்டது அவளின் வாழ்வு. நினைவு வைத்துக்கொள்ள இயலாத இரவும் பகலும் கழிந்திருந்தது அவளுக்கு. அவள் உள்ளங்கால்களின் ரேகைகளுக்கு நகரத்தை பார்க்க வேண்டும் என்ற ஆசை ஈடேறிவிட்டது. பரபரப்பான மனித ஊர்தலும் இரைச்சலும் அவளுக்கு அந்நியமான ஒன்றாக இருந்தது. ஒருக்கால் பதினெட்டாம் பெருக்கின் கூட்டமோ என்று நினைத்தவளுக்கு ஆற்றங்கரையும், புதுமணதாலிச்சரடும் இல்லாத பெண்களின் கழுத்தையும் பார்த்தபொழுது மனம் திகிலுடன் வெளிறியது. அந்த சூழல் அவளை எல்லாவற்றையும் உணரவைத்துவிட்டது வயிறு உட்பட. இவள் அலங்க மலங்க விழித்துக்கொண்டு நின்றபொழுது அந்த முச்சந்தியில் சாமந்திப்பூ குவியலில் அவன் அமர்ந்து பூ தொடுத்துக் கொண்டிருந்தான். ஒரு ஆண் பூ தொடுப்பதை இப்பொழுது தான் முதன் முதலாக பார்த்தாள். அவன் குறுக்கே சென்று கொண்டிருந்த மாட்டுவண்டியில் இருந்த நெல் மூட்டைகளின் சிதைந்துபோன சாக்கின் ஓரத்தின் வழியே கீழே விழுந்து கொண்டிருந்த நெல் மணிகளை பூ குவியலில் இருந்து எழுந்து வந்து பதற்றத்துடன் அவைகளை பொறுக்கி எடுத்து மாடு

ஒட்டியிடம் கொடுத்துக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் இவளின் நாசியில் நீர் நிறைந்த கழனியின் வாசமும், அந்த சாமந்திப்பூவின் வாசமும் சேர்ந்து நுழைந்துகொண்டிருந்தது. அரிசி உள்ளே இருக்கும் உடைக்காத நெல் இந்த சூழலுக்கு முரணானது என்றும் நெல்லின் வகைகளையும் பற்றி அவன் உற்சாகமாக மாட்டு வண்டிக்காரனிடம் பேசிக் கொண்டிருந்தான். அவனின் பேச்சு மற்ற இரைச்சலையும் சப்தத்தையும் துடைத்தெறிந்துவிட்டது. அதுதான் அவளை அந்த கணத்தில் அவள் மனதில் உறவு நூலை சுற்றச்செய்தது. நின்றுகொண்டிருந்த அவளை அவன் அவளின் நிலையை உணர்ந்தவன் போல் திடீரென்று உபசரித்தும் விட்டான். பூக்களை மடிக்கும் சேம இலையில் கொஞ்சம் சோறு வைத்துக் கொடுத்தான். இடையே அவளைப் பார்த்து சரியாக சொன்னால் அவள் உடம்பில் கண் பதித்து,

"இவ்வளவு தெடமான ஒடம்புவாகு குமருங்க இங்க அளிஞ்சிடுவாங்க" என்றான். இவள் ஏதும் அவளை கேட்கும் முன்பே அவன் கரிசனத்துடன் சொன்னான். அவளின் கண்களில் பூத்திருந்த குழப்பத்தைக்கண்டு பயந்த அவன் அவளை வாழவைத்துவிடவேண்டும் என்ற தீவிரத்துடன் அவளை அங்கு அழைத்துச்சென்றான். அது நாறத்தனமானது என்பதை அவன் நன்றாக தெரிந்து வைத்திருந்தான். அவன் பூக்களை குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் பெரும்பாலும் தானமாகவே கொடுத்துவிடக்கூடியவன். அவளின் வாழ்வை நீட்டுவதற்கு தன்னிடம் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லை என்றே அங்கு சென்றுவிட்ட பின்பு சொன்னான் குற்ற உணர்ச்சி மேலிட

அந்த இடத்தில் நிறைய வண்ணங்கள் குழைத்த குப்பிகளும் தூரிகைகளும் இருந்தது. செங்காய் மட்டை வண்ணத்தைதான் அதிகம் பார்த்தவள் பல வண்ணக் குப்பிகளை பார்த்ததும் அந்த வண்ணங்களில் மனதை லயிக்கவிட்டாள். அந்த வண்ணங்களைக்கொண்டு துணிகளில் நிறைய உருவங்கள். அவளை பார்த்தவர்கள் பேச மறந்தவர்கள் போல் இருந்தனர், முதலில் அவளுக்கு கூச்சமும் வெட்கமும் ஏற்பட்டாலும் அவர்கள் முன் மரத்துப்போய்விட்டதாகவே உணர்ந்தாள். அவளின் செழுமை பொதிந்து வீங்கியிருந்த அங்கங்கள் அவர்களின் கண்களை நிறைத்தது. ஆடை அவிழ்ந்த நிலையில் இருந்த அவளின் மௌனம் சார்ந்த இறுக்கமான பார்வை அவர்களை அயர்ச்சிக்குள்ளாக்கியது. தன் உடல் பற்றி எந்த உணர்வும் இல்லாத ஒரு தளர்ந்த நிலைக்கு வந்து விட்டிருந்தாள். அந்த நேரத்தில் முகத்தை வரையாமல் விட்டு அவளின் அங்கங்களை தீட்டினார்கள். அவள் திரும்பும் பொழுது அவள் உள்ளங்கையில் கொஞ்சம் சில்லறை இருந்தது. தானியங்கள் கொடுத்து பொருட்களை வாங்கிப் பழக்கப்பட்ட அவளுக்கு சில்லறையின் தன்மை தெரியவில்லை.

தனக்கு இங்கும் ஒருவன் மட்டுமே நெருக்கம். அவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவளிடம் திரண்டிருந்தது. பூவின் உதிர் இதழ்கள் சிந்திக்கிடக்கும் தாழ்வாரத்தில் பசலைகொடி படர்ந்திருந்த வீட்டில் அவனுடன் இருந்தாள். அவளின் மனம் தன் பக்கம் சாய்வதை உணர்ந்த அவன் தீர்க்கமாக

"முறைப்பெண் இருக்கு என்றான்" இதை தான் அவளை கையகப்படுத்தி விடுவாளோ என்ற அவசரத்தில் சொன்னது இவள் நினைவில் சுருண்டு கிடக்கிறது. அப்படி சொன்னானே தவிர, அவளின் பொழுதுகளின் தனிமையை உலரவைத்தாள். முறைப்பெண் அவனை அவனுடன் மனரீதியாக இடைவெளியே இல்லாமல் இறுக்கி வைத்திருந்தாள். இவளிடம் இருந்து ஏதாவது ஒருநாள் அவன் முறைப்பெண்ணின் கிராமத்திற்கு செல்வான், அது சூரியன் விழுந்துவிட்ட அடுத்த கணத்தின் தொடக்கமாக இருக்கும். முறைப்பெண்ணோ அவனை வாழைத்தோட்டத்தின் வழியே மூங்கில் குத்தின் நிழலுக்கு அழைத்துச் செல்வாள். மூங்கில் குத்தின் நிழலில் அவனை முத்திமிட்டதை இவளிடம் சொல்லியும் இருக்கிறான். இவளுக்கு அந்த முத்தத்தின் சுவை எப்படி இருக்கும் என்ற தவிப்பு பொங்கியது. அது நன்றாக இளசான நுங்கின் சுவைநீர் போல் இருந்திருக்கும் என்று பெருமூச்செறிந்தாள். இதன் வழியாகவே அவளை நினைக்கும்பொழுது எதிர்ப்புணர்ச்சியும் இயலாமையும் முளைவிட முறைப்பெண்ணை 'சக்களத்தியா' என்று மனதுக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

முறைப்பெண் அவன் திரும்பும் பொழுது கொசத்தெருவில் வாங்கிய புதுக்கலயத்தில் கொஞ்சம் தயிரும் வெல்லமும் கொடுப்பாள். வாழை மீது பிடிப்பு கொண்டிருப்பவளாகிய அவள் பூவன் பழங்களை எப்பொழுதும் அடுக்களையில் வைத்திருந்தாள்.

வாழைப்பழங்களை கொடுக்கும்பொழுது "புகைபோட்டுதான் பழுக்க வைச்சது" என்று அவன் கேட்காத கேள்விக்கு பதில் சொல்வாள். இப்படி அவனை திங்கடிப்பதில் அவளுக்கு பெரும் மகிழ்ச்சி. எல்லா வகையிலும் அவளைவிட தான் தாழ்வானவள் என்ற எண்ணமே இவளுக்கு ஏற்பட்டது. முறைப்பெண் தன் அம்மாவிற்கு தெரியாமலேயே ஒரு படி மேலேயே நில கூலிகளுக்கு படியளப்பவள் என்ற தாராளம் அவளிடம் இருந்தது என்று அவன் சொல்லவே அவள் மீது இருந்த வெறுப்பு தளர்ந்தது. அவனுக்கு கொடுத்த அச்சு வெல்லத்தில் கொஞ்சம் எடுத்துவந்து இவளிடம் கொடுக்க

"அத்தான் வூட்டு சர்க்கரை

நானும் கொஞ்சம் நக்குறன்" என்றாள்.

முறைப்பெண் பாதுகாப்பாக இருப்பவள். தன்னைப்போல் வரையப்படும் நிலைமை அவளுக்கு உண்டாகாது என்று நினைத்தாள். நேர் எதிராய் வரையப்படும்பொழுது

"முடியை எல்லாம் எடுத்துடு" என்று சொல்வதைத் தாங்கிக்கொள்ளும் வலு முறைப்பெண் போன்றவர்களிடத்தில் இருக்காது. தன்னைப்போல என்ற இறுமாப்பு அவளுக்கு உண்டாகியது. பூக்கள் இங்கு இனி கிடைக்காது என்ற காரணம் காட்டி இவளைவிட்டு பிரிந்து சென்று கொண்டிருக்கும் அவன் எல்லாவற்றையும் தன்னிடம் இருந்து பிடுங்கிக் கொண்டு சென்றுவிட்டதுபோல் ஆகிவிட்டது.

இன்று வரையப்படும் அந்தத் துணியில் தான் பதிவாகி இருந்ததை ஊன்றிப்பார்த்தாள். இரண்டு உடைந்திராத கொட்டாங்குச்சியை கவிழ்த்து வைத்த மாதிரி இருந்த அவளது மார்பகங்களை அதில் வரைந்திருந்தான். உலர்ந்த திராட்சையின் நிறம்போல் இருந்த காம்பினையும், ஒரு வில்லை வடிவத்திற்கு படர்ந்திருந்த கருந்திட்டையும் வரைந்திருந்தார்கள். அந்த தூரிகைகள் அவைகளை வரைந்தபொழுது அவளின் தொடை நடுவில் ஊர்ந்து நுழைவது போல இருந்தது. அந்த ஊர்தலில் தான் கன்னி கழிந்துவிட்டதாக நினைத்தாள். தொடைகளின் ஓரம்கருப்பு அடித்ததையும் தீட்டி இருந்தார்கள். வேலிக்காகத்தான் நடு மரத்தின் நாரை உரித்துவிட்டது போல் தன் உடலைக் காட்டி கொண்டிருந்த அவளுக்கு தன் உடலில் எந்த அங்கங்களும் இல்லாமல் தட்டையாய் போய்விட வேண்டும் என்று அப்பொழுது நினைத்தாள். அவளை வரைபவர்களின் கண் கூர்மை அவளிடம் பதியும்பொழுது கழுகைப் போல் இருந்தது. சிறகு இல்லாத கழுகு திடீரென்று தனக்கு நரையின் சாயலும் முதுமையும் இந்த நிமிடம் தொட்டு வந்துவிட்டால் தான் வரையப்படுவது நின்று விடுமா என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அவர்கள் சொன்ன கோணத்தில் நின்று கொண்டிருந்தவளுக்கு வரையப்பட்ட அந்தத் துணி மெல்ல எழும்பி வெளியில் பறப்பது போல் இருந்தது. அது பறந்து கொண்டிருப்பதை நகரத்தில் யாரும் கவனிக்கமாட்டார்கள். காற்றின் வேகத்திற்கு அடித்துச் செல்லும் அது கிராமங்களின் மேல் பறக்கும் பொழுது கவனத்தைக் கவரும். வயலுக்கு விதைநார் பெட்டியுடன் செல்லும் உழவத்தியின் கண்ணில்பட்டு வித்தைப்போடுவது தவறவிடுவாள். கடலோர கிராமம் ஒன்றில் இல்லாமல் வெறும் வலையுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த செம்படவனும் அதைப் பார்ப்பான். அது பறப்பதை பார்க்கும் இளவட்டம் ஒருவன் பெயர் தெரியாத அந்த கிராமத்து வாத்தியக் கருவியை ஏறவாணத்தில் இருந்து எடுத்து ஊதிவிடுவான். அந்த ஓசை பிரபஞ்சத்தின் ஒட்டுமொத்த துயரத்தை காற்றில் ஊதிவிட்டுபோல் இருக்கும். நெசவு தறிபோட்டுக்கொண்டிருந்த நெசவாளன் பறந்து கொண்டிருக்கும் அந்த துணியையும் அந்த உருவத்தையும் பார்த்து பாதி நெய்துகொண்டிருந்த துணியை எடுத்து அதன் மேல் போர்த்த எம்பினான். அதுவோ வானத்தின் தொடு கோளையும், நீளத்தையும் அகலத்தையும் தொட்டு விடவேண்டும் என்று மேலே பறந்துகொண்டிருந்தது. குறைந்த பார்வையாளர்கள் சூழ்ந்திருக்க பொம்மலாட்டம் நடத்திக்கொண்டிருந்த ஒருவன் அதைப் பார்க்கையில் அந்தத் துணியில் இருந்து காறி உமிழ்தல் நீர் திவலைகளாக ஒவ்வொரு முகத்திலும் படிந்து விடுவதுபோல் கண்டு பொம்மலாட்டத்தை நிறுத்தினான்.

உளுந்து பயிரு விளைந்து இருக்கும் வரப்புகளில் அமர்ந்து பச்சை கேழ்வரகு கதிர்களை வைத்துக் கொண்டு காத்திருக்கிறாள் முறைப்பெண். இவளிடம் இருந்து பிரிந்து சென்றுவிட்ட அவனை புல்லின் மீது படிந்து இருக்கும் பனித்துளியை சுட்டிக் காண்பித்து பரவசம் கொள்வாள். அவள் கண்களில் பறந்து கொண்டிருக்கும் அந்தத் துணி தென்படாது.

பாதி மயங்கிய நிலையில் நின்று கொண்டிருந்தவர்களுக்கு உண்மையில் அந்தத் துணி பறந்து செல்லாமல் பொருத்தி வைக்கப்பட்ட சட்டத்திலே திருத்தம் செய்து கொண்டிருந்ததைப் பார்த்து வெறுப்பு கலந்த ஆயாசம் ஏற்பட்டது. அவர்களின் வரை கோணத்தில் இருந்து தடுமாறி நின்று கொண்டிருந்தவளை அதிகாரத்துடன் பார்த்த அவர்கள் ஏதோ சொல்ல வாயெடுக்கும் முன்பே பின்புறம் இருக்கும் சுவரில் சாய்ந்து கொள்ளலாம் என்று நினைத்தாள். தற்காலிகமாக அவளைத் தாங்கிக் கொள்ளக் கூடியதாய் இருந்த அந்த கல்சுவருக்கும் இவளின் உடலுக்கும் மத்தியில் இருந்த தூரம் அந்த நேரத்தில் எல்லையற்று நீண்டு கொண்டே இருந்தது.

●

# பொஸ்னிய எருது



கசாப்புக்காரர்கள் தன்னை அணிமித்ததை அது கவனிக்கவில்லை. அதன் தூங்கி வழியும் கண்களில் உலகம் மங்கலான பிம்பங்களாக தோன்றியது. இந்தக் காட்சிகள் அதன்மீது விழுந்த அடியை மற்றெல்லாவற்றை விட பயங்கரமாகத் தாக்கியது. தன் தலை தன் உயிரிலிருந்து திடீரென சீவி வீசப்பட்டுவிட்டதாக அது உணர்ந்தது. தன் கண் முன்னே துர்ச்சகுணங்கள் தோன்றுவதாக தனது உடம்பில் மொய்த்திருக்கின்ற, மொய்க்கப் போகிற பூச்சிகளை விரட்ட முடியாமல் தனது வால் சக்தியற்றுப் போய்விட்டதாக அது உணர்ந்தது.

இத்தகைய ஒரு அதிகரிக்கின்ற பெரும் வேதனையை அந்தச் சின்ன எருது முன்பொருபோதும் அனுபவித்திருக்கவில்லை.

அது சாகவில்லை. உருக்கிலான பற்கள் அதனைக் கடித்து, கிழித்துச் சப்பத் தொடங்கிய போது அதனிடம் அந்தகாரம் நிறைந்த இருண்ட உணர்வுகள் எழுந்தன. அதன் தசைகளும் வாழ்வும் திருப்தியுறாத இந்த இரும்புப் பற்களால் உண்ணப்பட்டுக்கொண்டிருக்கையில் அதன் மனதில் இந்த உணர்வுகள் கிளர்ந்தன. தான் உண்ணப்படுவதை தானே பார்க்கின்ற ஒரு உணவாக அது.... தன் சதைகள் இழுத்துச் செல்லப்படும் நகரத்தின் வீதிகளை அது கண்டது. கெடுக்கப்பட்ட தன் வழிகாட்டியின் கண்களில் அது கிராமங்களைக் கண்டது. அழிக்கப்பட்ட வீடுகளை இரவு நேரங்களில் வெட்டப்பட்ட மர அடிகளின் பொசுங்கும் ஒளியில் அதைச் சுற்றி வயோதிபர்கள் கூடியிருப்பதையெல்லாம் அது கண்டது. தனது உடலிலிருந்து வழிந்தோடும் இரத்தத்தைப் போல பாதுகாப்புத்தேடி ஓடும் மக்கள் கூட்டத்தை அது கண்டது.....

அது கண்டது. அத்துடன் எழுந்து நிற்க முயன்றது.

விளையாட்டு அப்போதுதான் தொடங்கியிருந்தது.

ஒரு ஸ்பானிய தியாகரசம் சொட்டும் நாடகத்தைப் போல, அதன் சின்னஞ்சிறிய புல்வெளி பார்வையாளர்களாலும், ஆதரவாளர்களாலும், ஆலோசகர்களாலும் நிரம்பியிருந்தது. அங்கு எழுந்த ஒரு புலத்த அழுகை ஒலி ஒரு திடீர் நிசப்தத்தை ஏற்படுத்தியது. தற்செயலாக அது கடித்த ஒரு மருந்துவ மூலிகையின் சாறு அதன் இரத்தத்துடன் கலந்து அதன் கவனத்தை திசைதிருப்பிவிட்டது. முறுக்கேறிய தசைநார்கள் புடைத்த உடலுடன் ஈட்டி வீசுவோர்கள் தன் நாடித்துடிப்பையும், இரத்தக் குழாய்களையும், இதயத்தையும் நோக்கி வீசுவதை அது கவனிக்கவில்லை. அந்த இரும்புக் காண்டாமிருகங்கள் அதன் வயிற்றுக்காகவும், தோள்ப்பட்டைகட்காகவும் உருவாக்கப்பட்டவை. அவற்றை ஓட்டிவந்தவர்கள் பெரிய கசாப்புக் கடையில் கொடுக்கப்பட்ட அந்த எருதின் தசைகள் பற்றிய பட்டியலை வைத்திருந்தார்கள். அவர்களுக்கு, தங்களில் யாருக்கு விலா எலும்பு, யாருக்குக் கண்கள்... மூளை, நாக்கு என்று தெரிந்திருந்தது. இவையெல்லாம் அவர்களுக்கு தெரிந்ததுடன் அதற்காக அவர்கள் தம்முன் சண்டையிட்டுக் கொண்டார்கள்.

தாறுமாறாகக் கிடந்த தன் நினைவுகளிலிருந்து தன் சக்தியை இழுத்தெடுத்தபடி அது தன் கால்களில் எழுந்து நின்றது. ஒருகணம்தான். மறுகணமே அந்த பற்கள் நிறைந்த உருக்குக் கொம்பு அதை இடித்து வீழ்த்தியது. அதை நிலத்துடன் சேர்த்து அழுத்தித் துவைத்து புல்லோடுபுல்லாக்கியது. மேலே பறந்து கொண்டிருக்கும் உருக்கினாலான பறவைகள் தமது தீயை உமிழ்வதற்கான இலக்கான ஒரு வாழும் நினைவுச்சின்னமாக அது இப்போது மாறிவிட்டிருந்தது. அதன்பிறகு அதற்கு எதுவும் கேட்கவில்லை. சந்தோசமான, கலவையூட்டுகின்ற எந்தச் சத்தங்களும் கேட்கவில்லை. உருக்கினால் ஆன பறவைகள் தமது நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கையில் அவற்றின் பார்வைக்கு தடையாக இருக்கக் கூடாது என்பதற்காக அந்த உருக்குக் காண்டா மிருகங்கள் அப்புறப்படுத்தப்பட்டிருந்ததையும் அது கவனிக்கவில்லை. அதை நிலத்தில் அறைந்த ஒன்று நட்டும் அப்படியே இருக்க மற்றெல்லாம் தமது சந்தர்ப்பம் வருவதற்காக வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

இறுதியாக அதன் தலை வீழ்த்தப்பட்டது. பிறகு அதன் மார்பு, கால்கள்....

கசாப்புக்காரர்கள் அதன் வெவ்வேறு உறுப்புகட்காக சண்டையிட்டார்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் தமது பல் முளைத்த கொம்புகளையும் பற்களையும் காட்டி மிரட்டினார்கள். பெரிய கசாப்புக் கடைக்காரர்கள் கடையில் தாங்கள் செய்து கொண்ட இரகசிய உடன்பாடுகளை மேற்கோள்காட்டி அவர்கள் சண்டையிட்டார்கள். பார்வையாளர்கள் சண்டையில் கலந்து கொண்டனர். ஆதரவாளர்களோ எருதின் வெட்டப்பட்ட தலை, அதன் கிழிக்கப்பட்ட தொண்டை என்பவற்றிலிருந்து எழுந்த அவலச் சத்தத்தை முழுதாக மறைக்கக் கூடிய சகிக்க முடியாத ஒரு பேரிரைச்சலை உருவாக்கினார்கள். அது இறப்பின் ஒலி. அதில் ஒருவர் நினைவுகளை, சமாந்தர உலகத்தின் போராளியை, பிறப்பை உணர்ந்து கொள்ள முடியும்.

துண்டு துண்டாக்கப்பட்ட எருது தன் கால்களில் எழுந்து நின்றது.

விகாரமான தோற்றத்துடன், திக்கற்ற ஒன்றாக, நடப்பவைகளை புரிந்து கொள்ள முயல்வதாக அது எழுந்து நின்றது.

ஒரு ஆரம்ப வியப்புக்குப் பிறகு கசாப்புக்காரர்கள் உருக்குக் காண்டா மிருகத்தினை ஓட்டுபவர்கள், உருக்குப் பறவைகளை இயக்குபவர்கள் எல்லோரும் ஓடிவந்தார்கள். அதன் உடலில் இன்னமும் தொங்கிக் கொண்டிருந்த சதைத் துண்டங்களை, கசாப்புக்காரர்கள் கொன்று போட்டார்கள் - அவை துர்ச்சகுனம் தருவதாக இருக்கும் என்பதற்காக. அவர்கள் எலும்புகளை, நரம்புகளை மற்றும் எல்லாத் துர்ச்சகுனங்களையும் தமது கத்திகட்கு இரையாக்கினார்கள்.

எருது அப்படியே அனுங்கியபடி நின்றது.

பார்வையாளர்கள், ஆதரவாளர்கள், ஆலோசகர்கள் எல்லோரும் வேலிக்குப் பின்னாலுள்ள தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிச் சென்றார்கள். அங்கிருந்தபடி வேலிக்கப்பால் நடக்கும் எந்தச் சட்டத்துக்கும் பொருந்தாத எல்லாக் காட்சிகளையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கொலைகளில் இருந்து எழும் கொலைகளை அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒரு கொலையிலிருந்து இன்னொரு கொலையாக மாறும் கொலைகளை அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். கொன்று துண்டாடுவதை, துண்டாடிக் கொல்வதை எல்லாம் அவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பார்த்துக் கொண்டே காத்திருந்தார்கள். காலம் நின்றது. வேலிக்கு அப்பால் காலம் நின்றுவிட்டது. துன்பத்தின் துடிப்பு.

தாவரபட்சணியான அந்த எருதின் பெரிய கொம்புகளின் கீழிருந்த அதன் துண்டாடப்பட்ட முஷ்டி வானத்தை நோக்கி உயர்வதைக் காண்பதற்காக ஒவ்வொருவரும் காத்திருந்தார்கள்.

மூலம்: ஈர்பான் ஹொரோஷோவீக்
ஆங்கிலத்தில்: Christiac Pribichevich - Zoric
தமிழில்: எஸ்.கே.விக்னேஸ்வரன்

நன்றி - நூலகத்திட்டம்




# அவரை ஒரு அகல்விளக்காக்கிவிட்ட அவரது தத்துவம்!

எஸ்.கே.விக்னேஸ்வரன்

**கொழும்பு இராமகிருஷ்ண சிறிய மண்டபத்தில் நடைபெற்ற 'காலி லீலை' நூல் அறிமுக விழாவில் படிக்கப்பட்ட கட்டுரை.**

நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கும்இந்நூலின் முதற்பகுதி "அது". 1960முதல் 1970வரையான பத்தாண்டு காலப் படைப்புகள் இப்பகுதியில் அடக்கப்பட்டுள்ளன.நூலின் தலைப்புக்குரிய கவிதையான"காலி லீலை" மற்றும் தன்னைப் பற்றிய சுயமதிப்பீடாக வரும் "மதிப்பீடு" ஆகிய கவிதைகளை உள்ளடக்கிய 29ஆக்கங்களைக் கொண்டுள்ளது இந்தப் பகுதி. இவை மு.பொவின் இளமைக் காலப் படைப்புகள். ஆயினும் இவற்றிலேயே நூல் முழுவதும் இழையோடி நிற்கும் அல்லது சரியாகச் சொல்வதானால்ஆதார சுருதியாக நிற்கும் அவரது 'விடுதலைக் கோட்பாட்டின்' அடிப்படைகள் தெளிவாக வெளிப்பட்டுவிட்டன என்று சொல்லலாம் "யாதுமாகி நின்றாய் காளி" என்று சர்வத்தையும் காளியின், சக்தியின்வடிவங்களாகக்கண்ட பாரதியின்வழியாக வந்தது இவரது பார்வை. காளியை- காலத்தின் தெய்வம் அவள் என்பதால் அவளைக் காலி என்று சொல்கிறார் மு.பொ. இயற்கையாய், சமூகமாய், காலத்தை வென்ற "அதுவாய்" நிற்பவளாக அவளைக் காண்கிறார் மு.பொ. ஆனால் இந்தப் பார்வை ஒரு பக்தி நிலைப்பட்ட விடயமாக வெளிப்படவில்லை.பதிலாகச் "சிந்தனைத் தளத்தின்" விரிவாகவே அவர் அதனைக் காண்கிறார். அவர் தான் கூறும்"அது" வை நாற்பெரும் சமயங்களும் ஒன்றாகிய முழுமையின் எழுச்சியாக,குணங்கள் கரைந்து மனம் வேறு தளங்களில் இயங்கும். நான- நாம் ஆகிற -(பேர் நான் என்றும் இதைச்சொல்லவார்) ஒன்றாகக் காண்கிறார்.




நட்ட கல்லைப் தெய்வமென்று நாலு புஸ்பம் சாத்தியே சுற்றி வந்துமுணு-முணென்று சொல்லும்மந்திரம் ஏதடா? நட்ட கல்லுப்பேசுமோ நாதன் உள்ளிருக்-கையில்? என்ற சித்தர்களின் பாடல்களை ஞாபகப்படுத்துகின்ற"எங்கே உண்மை இருக்கலாம்" என்ற கேள்விக்கு"உன்னுள் இருக்கே" என்று பதிலாக வரும் குருவின் மொழியே அவரது தத்துவநிலை.

இந்திய தத்துவஞான மரபில் ஏற்பட்டுவந்த மாற்றங்களின் வரிசையில் சங்கரரால் வளர்த்தெடுக்கப்பட்ட அத்வைத சிந்தனையை அடியொற்றி வளர்ந்து வந்த சிந்தனைப்போக்கின் தொடர்ச்சியாக வெளிப்படும் மு.பொ வின் தத்துவ அடிப்படை, நவீன சமூக இயக்க ஓட்டங்களை விளங்கிக் கொள்வதிலும், அதையொட்டி உலகை விளக்கவும் அவருக்கு உதவுகிறது. பாரதியின் சிந்தனையில்,அவனது ஆன்மீகப் பார்வைக்கும் அடிநாதமாக இருந்தது இந்தப் பார்வையே தான்.இந்தத் தத்துவ மரபை இவர் கொண்டிருப்பதில் என்ன புதுமை இருக்கிறது என்று ஒருவர் வினவக் கூடும். ஆம் அதிலே புதுமை இல்லைத் தான். அந்த தத்துவ அடித்தளத்தைக் கொண்டிருப்பதில் அல்லஅவரது புதுமை இருக்கிறது. அம்மரபுத் தளத்தை அவர் எப்படி தனது வாழ்வியலை விளங்கிக் கொள்வதற்கான ஒன்றாக உள்வாங்கியுள்ளார் என்பதிலும், சூழவுள்ள சமூகப் போக்குகளை விளங்கிக் கொள்ள எப்படி இந்த சிந்தனையை பயன்படுத்துகிறார் என்பதிலும்தான் அவரது புதுமை தங்கியிருக்கிறது.

தன்னைப் பற்றிய ஒரு இருபத்தைந்தாண்டு கால வரலாறாகவும், மதிப்பீடாகவும் வரும் அவரது மதிப்பீடு என்ற கவிதையின் இறுதி வரிகள் இப்படி முடிகின்றன.

**'ஏதேனும் நாவாய் இனியும் வரும் சிலமன்?**

**தூரத்தே அந்தச் சுழிப்பின் ஒளியாட்டம்'?**

அத்வைத சித்தாந்தத்தின் இறுகிய நிலை அவரிடம் இல்லை.மாறாக அது தேடலை, இன்றும் விரிவுபடுத்திய ஒரு தேடலை அவருள் ஏற்படுத்தும் ஒன்றாகவே தொழிற்படுகிறது.

இதனால்தான் சங்கரரின் அத்வைதம் சாதிய தீண்டாமைகளை நியாயப்படுத்த உபயோகித்தவர்களை மீறி, அதை உலக மாற்றங்களை விருப்புடன் ஏற்கும் ஒன்றாகப் பண்படுத்திப் பயன்படுத்தும் சாத்தியம் மு.பொ வுக்கு ஏற்படுகிறது. ஏற்கனவே இப்பண்பை நாம் பாரதியிடமும், விவேகானந்தரிடமும், இராமானு-ஜரிடமும் கண்டிருக்கிறோம். மு.பொவுக்கு நடைபெறும் சமூக மாற்றங்கள் ஒவ்வொன்றும் அவரைப் பொறுத்த-வரை காலத்தின் அவசியங்களாக, காலியின் லீலைக-ளாகத் தென்படுகின்றன. காலம் காலமாக நாம் வாழ்ந்த வாழ்வும் அதன் சமூகப் பெறுமதிகளும் தகர்க்கப்படும் வேளையில், அவர் அதற்காக அஞ்சவில்லை: துவண்டு போகவில்லை. ஒரு இறுகிய தத்துவவாதி போல அதை எதிர்த்து நிற்கவில்லை. மாறாக, அவற்றை அவர் சந்தோசத்துடன் ஏற்றுக்கொள்கிறார். "நெஞ்சு அடியில் ஊறியோர் அமைதிமெல்லெழுகிறது: அது முழுப் பரப்பையும் கௌவிமுழு ஆனந்தம் முகிழ்க்கிறது. கிழக்கெழுந்ததோர் ஞாயிற்றின் ஒளியாக இந்த மாற்றங்களை அவருக்கு தரிசிக்க முடிகிறது. சாதிய முறைமையின் போலி ஆசாரத்தையும் பொய்மை-யையும் எதிர்க்கும் அவர் சமய ஞானம் சாதியத்தை ஏற்பதில்லை என்கிறார். சமய ஞானம் என்பது வேறு சமயவாதம் என்பது வேறு என்று கருதும் மு.பொ, சமயவாதிக்கு உதாரணமாக நாவலரையும் சமய ஞானிக்கு உதாரணமாக வள்ளலாரையும் இனங்-காண்பதுடன் அவர் தனது சார்பு நிலையை வள்ளலா-ருடன் காண்கிறார். சமய ஞானமென்பது வெறும் சமயவாதமல்ல. அது அறிவின் விடுதலைக்கான வழி என்று கருதுகிறார் மு.பொ. அவரது இந்த சமயஞான மரபு துறவறத்தை உயர்த்திப் பிடிக்கிறது. இல்வாழ்-விலும் துறவறத்தை சாத்தியமானதாகக் கூறுகிறது. துறவறம் கோழைகளின் புகலிடமல்ல. மாறாக அது வீரத்தின்- ஆத்ம வீரத்தின் ஒரு வழிமுறை என்கிறார் மு.பொ.

மு.பொவின் இந்தப் பகுதி சமூக வாழ்வின் எல்லா இருப்புகள் குறித்தும்கேள்வி எழுப்பி நிற்கிறது. அவற்றிலிருந்து விடுபட்டு வெளியேற வேண்டும் என்ற தேடலினை அது வலியுறுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட இருப்பில் அமைதி காணும் போக்கினை மறுதலிக்கும் அது" மாற்றத்திற்கான தேடலில் அமைதி காணலை சுட்டுகிறது.

வலையினை உருவாக்கி அதிலே வாழ்கின்ற சிலந்திக்கு வலை சிறையா, வலைக்கு வெளியே வரக் கூடாதா என்று தர்க்கிக்கும் அவரது சிலந்தி வலையில் வீழ்ந்ததா" என்ற கவிதையின் இறுதி வரிகள் இப்படி முடிகின்றன.

**சிலந்தி என்றும் சிலந்தியாய்**
**இருக்க ணேண்டும் என்பீரோ**
**வலையை விட்டு வந்தது**
**வளர விட மாட்டீரோ?**

தர்க்கத்தில், வலையை விட்டு வெளியே வருவது சிலந்திக்கு நல்லதா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. ஆனால் அதுஅதுவாக இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டில் இருந்து சிந்தித்தால் தான், வெளியேறுவது சிலந்திக்கு ஆபத்து என்ற சிக்கல் எழுகிறது. அது அதுவாக இருத்தலில் இருந்து மாறுதல் அவசியம் என்றும், அப்படி மாறுதற்கான சிந்தனையே விடுதலை இன்பத்தை தரும் என்றுமாகிற போது சாவு இரண்டாம் பட்சமான ஒன்றாகி விடுகிறது. இறுகிப் போன இருப்புகளும் அவற்றிற்கு நியாயம் கூட்டும் விதிகளும் சதா தகர்க்கப்பட்டு மாற்றத்தைக் கோருகின்ற "விடுதலை" உணர்வு, தேடலில், மாற்றத்தில் அமைதி காணும் ஒரு தத்துவப் போக்காக சுட்டி நிற்கிறது. இது மு.பொ காணும் அவரை வழிநடாத்தும் தத்துவப் போக்கு. இதனை அவரது இத்தொகுப்பின் ஏறக்குறைய எல்லா ஆக்கங்களிலும் நாம் காணலாம். விரிவஞ்சி விளக்கத்திலிறங்காது மேலே போகிறேன்.

இப்பத்தாண்டு காலப் படைப்புகளின் அடியாதா-ரமாக நின்ற இதே சிந்தனையின் தொடர்ச்சியை அடுத்த பத்தாண்டுகளான 70-80 காலகட்டப் படைப்புகளிலும் காணலாம்.இவற்றை அகவெளிச் சமிக்ஞைகளாக விரித்துச் சொல்கிறார் அவர்.

தத்துவம் சாதாரண நடைமுறை அர்த்தங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்று என்றும், இவ்வாறான நடைமுறை அர்த்தங்களைக் கொண்ட தத்துவத்தை உடைப்பதே உண்மையான தத்துவம் என்றும் கூறுகிறார் மு.பொ. இந்தப் பகுதி, இந்தத் தத்துவார்த்த "தடைகளை" உடைக்கும் அவரது தத்துவார்த்த முயற்சிக்ளாக வெளிப்படுகின்றது.

கலை தொடர்பாயினும் சரி, மலைநாட்டு மக்களின் விடுதலை பற்றியதாயினும் சரி அவை பற்றிய அவரின் சிந்தனைகளை அதாவது ஏற்கனவே இவை தொடர்பா-கவுள்ள கருத்துக்களை உடைத்து மேற்செல்லும் புதிய சிந்தனைகள் என்று தான் கருதுபவற்றை, தத்துவச் சிந்தனைகளை-வெளிப்படுத்துகிறதாய் இப்பகுதி அமைந்துள்ளது. தமது சிந்தனையிலிருந்து, பழைய அல்லது நிலவும் போக்குகளுக்கு எதிராக எழும் சிந்தனைகளை இப்பகுதி தருவதால் தான் இப்பகுதிக்கு அவர் "அகவெளிச் சமிக்ஞைகள்" என்று பெயரிட்-டாரோ என்னவோ? அவர் வெளிப்படுத்தும் அகவெ-ளிச் சமிக்ஞைகள் சித்தத்தின் உள்ளிருந்து, தியானத்-திலிருந்து வெளிப்படுகின்றன. தர்க்கங்களும், தரவுக-ளைத் தேடும் முயற்சிகளும் அவரைப் பொறுத்தவரை பழைய யுகத்தவை ஆகிவிடுகின்றன. காரண காரிய தொடர்புகளை ஆராய்ந்து உண்மைகளைத் தேடும் லௌகீக நடைமுறைகளை அவர் ஒதுக்குகிறார். பதிலாக உள்நோக்கும், உள்ளொளியும் அவ்விடத்தில் வந்தமர்ந்து, அவை X கதிர்களைப் போல் ஊடுருவிப் பார்ப்பவையாக அமைய வேண்டும் என்று கூறுகிறார்.

பாரதியார் பற்றிய அவரது பார்வை, மு.பொவின் உலக நோக்கை தெளிவாக வெளிப்படுத்துகிறது என்பேன். மெய்மையே பாரதியின் கவிதைகளின் அடிப்படை: அதுவே அவனது சிந்தனை-யின் ஊற்று மூலம் என்கிறார் மு.பொ. பாரதிக்குப்பிந்திய அவன் வழி தொடர்-வதாகக் கூறுபவர்களை எல்லாம் எள்ளி ஒதுக்கும் மு.பொ, பாரதியின் உண்மை-யான சந்ததி ஒன்று உருவாகி வருவதாகவும் அதன் திக்விஜயப் பேரொலி ஒலிக்கத் தொடங்கி விட்டது என்றும் கூறுகிறார். மு.பொ. அவர்களைப் பூரணர்கள் என்கிறார்: அந்தப்பூரணர்களில் ஒருவராகத் தன்னையும் அடையாளம் காண்கிறார். பாரதியின் கவிதை ஊடாக அவர் தன்னை அடையாளப் படுத்துவதைப் பாருங்கள்.

**"எனது காளியும் கண்ணனும் யாரெனத் தெரியுமா?**

**நான்ஸ்ரீராம கிருஸ்ண பரம்பரையிடம் தீட்சை பெற்றேனே அது தெரியுமா?**

**அந்தப் புத்தரும் யேசுவும் அல்லாவும் ஆதி கிருஸ்ணனும்**

**எனது ஆத்மாவின் முழுமையென என் கவிதைகளில்**

**நிற்பதை நீங்கள் அறிவீரா?**

**அதனால் எனக்கு அந்த நான்கு மதங்களும் வேறானவையல்ல. ஒன்றென்ற ஞானம் இருப்பதை நீர் அறிவீரா?**

**அதனால் தான் நான் சித்தனாக. சேவகனாக. சுதந்திர காமியாய். புரட்சிக் காரனாய். கலைஞனாய். கவிஞனாய் யாவுமாய் இருக்கிறேன் தெரியுமா?**

இது மு.பொவின் மெய்யியல்- மெய்மை இயல். அவருக்கு நவீன விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகளை, சமூகப் போராட்டங்களை, அவற்றின் இயல்புகளை-யெல்லாம் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ள இது காரணமாகிறது. எத்தகைய மாற்றங்களும் அவருக்கு அதிர்ச்சியைத் தரவில்லை. புரட்சிகள்,அது அமெரிக்கப் புரட்சியாயினும் சரி, பிரஞ்சுப் புரட்சியாயினும் சரி,இந்தியாவில் காந்தி தலைமையில் நடந்த "இந்தியப் புரட்சி"யும் சரி எல்லாமே அவருக்கு வரவேற்புக்-குரியவைதான். ஆனாலும் அவரது சார்பு நிலை இந்தியப் புரட்சியையே சார்ந்து நிற்கிறது. அதை குண நிலை மாற்றிய ஆத்மப் புரட்சியாக காண்கிறார் மு.பொ. அஹிம்சை மார்க்கத்தின் வெற்றி அது என்கிறார். ஆயினும் அகிம்சையைப் பற்றிய அவரதுபார்வை ஆயுதப் போராட்டத்தை நிராகரிக்கும் ஒன்றல்ல. அஹிம்சை கோழைத்தனத்தின் அல்ல மாறாக வீரத்தின் படைக்கலன் என்று கருதுகிறார் அவர்.

ஈழத்தில் வளர்ந்து வந்த ஆயுதப் போராட்டத்தை அவர் பார்க்கும் கோணம் மாறுபடுகிறது. 1980 முதல் 1990 வரை யான தமது படைப்புகளை அவர் விடுத-லையும் புதிய எல்லைகளும் என்றபெயரில் தொகுத்துள்ளார். இலங்கையில் இன்று நடக்கும் விடுதலைப் போராட்டத்திற்கு அடிப்படையாக இந்தியப் புரட்சியினை அடியாகக் கொண்ட அஹிம்சை என்ற குணநல வேறுபாட்டை அவர் வலியுறுத்தவில்லை. அங்கு நடக்கும் போராட்டத்தை அவர் ஒரு புதிய நோக்குடன் தியாகம் என்ற புதிய யோகத்துடன் அது நடப்பதாகக் காண்கிறார். இந்தப் புதிய யோகம் வேண்டி நிற்கும் விடுதலையை வரவேற்கிறார். இவ்விடுதலையை அவர் "சகலதன் விரிதளமாக, ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட பேர் புலன் ஊடான ஒரு அனுபவமாக உணர்வதாக கூறுகிறார்.

அவர் கூறும் புதிய எல்லை விடுதலையுணர்வால் வழங்கப்படுகின்ற எல்லையின்மையாகிறது. "எல்லையற்ற பிரக்ஞையில் ஏறிக்குந்தி எங்கும் எல்லாம் தழுவி வா" என அழைக்கும் பேரெல்லைச் சிந்த-னையை இங்கு நடக்கும் விடுதலைப்போராட்டம் அவரில் தட்டி விடுகிறது. இப் பார்வையே அவருக்கு வீடுகள் என்றும்,கூடுகளுக்குள் அடைபட்டுக் கிடந்து"திருதிரு" என முழிக்கும் மனிதர்களை குருவிகளின் கூடுகளைச் சுட்டிக் காட்டி விடுதலையின் ஊஞ்சலாட்டத்தை நோக்கி அழைக்க வைக்கிறது.

மனதை அடக்குதல், அதை வெவ்வேறு தளங்களில் உலாவரச் செய்தல், விடுதலையை மனவிரிவின் ஒரு அம்சமாகக் காணல், முதுமை, இயலாமை, அகதி வாழ்வு என்று எல்லாவற்றையுமே இயல்பாக ஏற்றுக்கொள்ளல். துறவு, பெண் புணராமை எனும் தபஸ், போன்றவற்றின் மூலமாக விடுதலையை நோக்கிய நாளின் வளர்ச்சியை உந்திச் செல்லல் என்று அவரது சிந்தனைத் தளம் அமைகிறது. சராசரி இறை நம்பிக்கை மதச்சடங்குகளுக்கு அப்பாலான சூக்கும-வடிவிலான தரிசனத்தை நோக்கிய உள்மனத் தேடல் என்று வளர்ந்து செல்லும் அவரது வாழ்வுத்தளம் அது அவருக்கு அளிக்கும் தத்துவார்த்த பலம் என்பன அவரை நிமிர்ந்து நிற்க வைக்கின்றன. அவரை நோக்கி எழும் கேள்விகளுக்கு அவரது தத்துவார்த்த தளத்தின் விரிவுகள் ஒன்றிற்குள் அவரால் அர்த்தம் காண முடிகிறது. இது அவருக்கு வாழ்வு குறித்த அச்சத்தை விரட்டுகிறது: நம்பிக்கையை உருவாக்குகிறது: பௌதிக நெருக்கடிகளிலிருந்து அவரைப் பாதுகாத்து வைத்திருக்கிறது.

சாதாரண மனித அனுபவ உணர்வு நிலைகளையும் சரி, பெரும் சம்பவங்களையும் சரி காலியின் லீலைக-ளாகக் காணும் நிலைக்கு அவரை இந்த தத்துவார்த்த தளம் ட்டுச்செல்கிறது. எல்லாவற்றையும் பேரியல்பின் சிற் பிகளாக காணும் நிலைக்கு வந்துவிட்ட ஒரு பட பாளிக்கு உலக நிகழ்வுகள் அவரது தத்துவ விசாரத்திற்கான சம்பவங்களாகி விடுகின்றன . அவை புதிய புதிய தத்துவத் தளத்திலான மன விரிவுகளுக்கு இட்டுச்செல்கின்றன. அவை ஆனந்தமான உணர்வை மனிதருக்கு வழங்குகின்றன.

இறுதிப்பகுதியில் வரும் 'என்னகத்தே ஓர் விளக்கு' என்ற கவிதையின் முடிவு இப்படி முடிகிறது. இந்த வரிகள் கவிஞரின் இந்நிலையை உணர்த்தப் போதுமானவை.

**என் வாழ்க்கை பேரொளியின்**

**குடைவிரிப்பில் அரசோச்சும்....**

*(2)*

இவையெல்லாம் மு.பொ என்ற படைப்பாளி தான் தனக்கென உருவாக்கியுள்ள தனது கருத்துத் தளத்தில் எவ்வாறு முரணற்ற விதத்தில்கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இயங்கி வந்துள்ளார் என்பதைக் காட்டுகின்றன. ஆனால் இங்கே இன்னும்சில கேள்விகள் எழுகின்றன. இந்தக் கருத்துத் தளம் மு.பொ என்ற ஒரு படைப்பாளியின் பண்பை அல்லது அவர் போன்ற ஒருசிலரின் பண்பை வழி நடத்தும் ஒன்றாக இருந்து விட்டுப் போகலாம். ஆனால் இந்தக் கருத்துத் தளம் எவற்றின் மீது கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது? இது புற உலக வாழ்வின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்வதில் எதிர் நோக்கக்கூடிய சிக்கல்கள் என்ன? வரலாற்றையும் சமூக இயக்கத்தையும் தனிமனிதரின் அகவய சிந்தனைகளின் வெளிப்பாடாக அல்லது அவற்றின் அறிவுத்தள விரிவுகளாகக் கருதுவதன் ஆபத்து என்ன? உலகின் எல்லா நிகழ்ச்சிகளும் காலி-யின் லீலைகளாக அமைவன என்றால், தனிமனிதனின் பாத்திரம் அவற்றினை விளங்குவதும், வியாக்கி-யானிப்பதும், தனது சொந்த உள்மனத் தளங்களின் அசைவுகளுக்குத்தானென்றால், இத்தத்துவப்போக்கின் சமூகத்தேவை என்ன? இது ஒரு சமூகப் பொதுக் கருத்து நிலையாதல் சாத்தியமா? அதற்கு தடையாக இதனுள் உள்ளமைவாக நிற்கும் விடயங்கள் என்ன? போன்ற கேள்விகள் எழவே செய்கின்றன. இக் கேள்விகட்குப் பதிலிறுக்க முனைவது இன்றைய கூட்டத்தின் நோக்கத்திற்கு அப்பாற்பட்ட ஒன்றாகும். ஆயினும் ஒரு சில விடயங்களை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது அவசியம் என்று கருதுகின்றேன்.

சமூகத்தின் அமைவு, அதில் நடைபெறும் நிகழ்வு-கள் என்பவற்றை எல்லா தத்துவங்களும் ஏதோ ஒரு வகையில் விளக்கவே முயல்கின்றன. மனித உறவுகளையும் அவர்களது வாழ்வியல் நடப்புகளை-யும் விளக்க பல தத்துவார்த்தப் போக்குகள் இருந்து வந்துள்ளன, வருகின்றன. ஆனால் இயற்கையை வெற்றி கொண்ட மனிதன் 'மார்க்ஸ் சொன்னது போல் உலகத்தை மாற்றியமைக்கும் பணியைத் தத்துவங்களிடம் கோருகின்ற போது மு.பொவின் தத்துவப்போக்குக்கு இது எவ்வளவு தூரம் சாத்தியமாக முடியும் என்ற கேள்வி எழுகின்றது. மனிதர்களை சமூக மனிதர்களாக அல்லாமல் அவர்கள் வாழும் பௌதிக உலகியல் வாழ்வின் அம்சங்களே அவர்களது இயல்புக்கும், இயக்கத்திற்கும், சிந்தனைக்கும் காரணம் எனக் காணாமல் மனிதரது அறிவுத்தளத்திலும், சிந்தனைத் தளத்திலும் விடுதலைக்கான சமிக்ஞைகளை எழுப்புவது மூலமாகவே உலகியல் யதார்த்தம் நிலவுவதாகக் காணும் இப்போக்கின் சமூக ரீதியான

நன்றி - நூலகத்திட்டம்



தோல்வி ஏற்கனவே கண்டறியப்பட்டுவிட்ட உண்மை.

உண்மையில் இந்தப் போக்கினால் சமூகத்தில் எங்கெங்கே புரட்சி நடக்கின்றதோ அங்கெல்லாம் புரட்சியை வரவேற்கும் அளவில் மட்டுமே செயற்பட முடியும். எமது கேள்வி இதற்கப்பாலும் போய் சமூக இயக்கத்திற்கு இதனால் வழிகாட்ட முடியுமா என்பதே இன்றைய சமூக வாழ்வின் மீது அதிருப்தியையும், அதிலிருந்து விடுபடுதலுக்கான தேடலையும் தொட்டு நிற்கும் இத்தத்துவ மரபு அதிருப்தி ஏற்படுவதற்கான காரணிகளை புறத்தே தேடுவதில்லை. பதிலாக அதை அகத்துள்ளே தேடுகிறது. இதன் பயனான அதன் விடுதலை புறவயமானதாக அல்லாமல் அகவயமானதாக அமைகிறது. இந்த விடுதலை நிலை உலகம் முழுவதும் இடிந்து விழுகின்ற போதும், ஆனந்த நிஷ்டையில் அற்புதமான சந்தோசத்தில் நிலைத்திருக்கும் சாத்தியத்தை, தனது மரணத்தைக் கூட அதே சந்தோசத்துடன் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு நிலையை ஒரு மனிதருக்கு வழங்குதல் சாத்தியமே. இது, சமூகநிகழ்வுகளை மனிதனே உருவாக்குகிறான் என்பதை மறுத்து நிற்பதால், அவற்றை காளியின் அல்லது காலியின் லீலைகளாக காண்கிறது. இந்த நிலையில் சமுகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துதல் மனிதனுக்கு அவசியமற்ற ஒன்றாகிப் போய் விடுகிறது. 'சமுகத்தை மாற்றவும் வளர்க்கவும் முனையும் மெய்யாளன், தன்னிலிருந்து நீளும் காலியின் வரலாற்று நிழலில் சூரியன் எங்கே நிற்கிறான் என்பதை உணர்வான்' என்று மு.பொ சொல்கின்ற போதும், அது ஒரு முரணான நிலைப்பாடாகவே தெரிகிறது. சமுகத்தை மாற்றுவது பற்றி மு.பொ சொல்கின்ற போதும், அது ஒரு பூரண நிலைப்பாடாகவே தெரிகிறது. சமூகத்தை மாற்றுவது பற்றி மு.பொ பேசினாலும், அது சொல்லப்படுவதன் அர்த்தம் புறவுலகு சார்ந்த ஒன்றாகக் கொள்ளப்பட முடியாது. 'பாய்ச்சல் எங்கு நுரைத்து, எங்கு மிகைத்து, எங்கு திமிறுகிறதோ அங்கு வாய்க்கால்களை வெட்டியும் அணை கட்டியும் விடுகிற பணியை' மட்டுமே அது தத்துவவியலாளனின் பணியாகக் கொள்கிறது. இங்கேதான் மு.பொவின் மெய்யுளின் மெய்முதல் வாதத்தின் பலவீனம் ஆரம்பமாகிறது. ஒரு படைப்பாளியின் படைப்புலகச் செயற்பாடுகளுக்கு அது வீச்சைக் கொடுக்கும் ஆற்றலைக் கொண்டிருக்கக் கூடுமாயினும் சமூக பௌதீக அசைவியக்கத்தைப் பொறுத்தவரையில் அது அவனை ஒரு பார்வையாளனின் அல்லது சாட்சியின் தரத்திற்குத் தவிர்க்க முடியாமல் தள்ளி விடுகிறது.

உலகம் வர்க்கங்களாக, தேசங்களாக, ஒடுக்குபவர்களும் ஒடுக்கப்படுவோர்களுமாகப் பிளவுண்டிருப்பது உற்பத்திகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் அதனால் உற்பத்தி உறவுகளிடையே நடைபெறும் மாற்றங்கள். இன, மத, வர்க்க மற்றும் பால் ரீதியான ஒடுக்கு முறைகள் என்பவற்றை இனங்காணும் தரிசன வீச்சை இழந்திருந்த காந்திஜியின் சத்திய வழி அல்லது அஹிம்சை மூலம் இந்தியாவில் நடந்தது என்ன? மு.பொ பெரிதும் விரும்பும் இந்தியப் புரட்சி அங்கே ஒரு சத்திய விடுதலையோ, ஆன்மீகப் புரட்சியையோ ஏற்படுத்தி விடவில்லை. மாறாக வெற்று ஆட்சி மாற்றத்தையே சந்தித்தது. குணங்களைக்கடந்த மனங்களின் விரிவை அது காட்டவில்லை. பதிலாகத் தீண்டத்தகாதவர்களுக்கு ஹரிஜனங்கள் என்ற நந்தனார் தீட்சை வழங்கியதே ஒழிய அந்த குணங்களிலான விடுதலையை ஏற்படுத்தவில்லை. இன்றும் அதே மக்கள் தலித்துக்கள் என்று அணி திரண்டு போராட வேண்டியே உள்ளது. இவ்வாறே அந்த இந்தியப் புரட்சி, மதவெறியையும், பயங்கரவாதத்தையும், மேலாதிக்கத்தையும் நிறுவனப்படுத்துவதற்கே துணை போயிற்று. வேண்டுமானால், மு.பொ வின் மெய்ஞானம் இன்றும் இந்த ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் நின்று அவர்களின் விடுதலையை உயர்த்திப் பிடித்து அவற்றிலே புதிய யோகங்களையும் குணங்களையும் காணமுடியும். ஆனால் சமூக இயக்கப் போக்கில் இத்தகைய மெய் ஞானங்களின் பாத்திரம் அவ்வளவுடனே அமைந்துவிடுகிறது.

இந்திய தத்துவமரபின் 'மெய்முதல்வாத' சிந்தனைப் போக்கு எப்போதும் சமூகவாழ்வொழுக்கங்களைப் பற்றி, இருக்கும் சமூகஅமைப்புள் அமைதியாகவே வழிகாட்டி வந்துள்ளது. அது சமூகப் புரட்சியில் அல்லது மாற்றத்தில் அக்கறை காட்டியதாகக் கொள்ள முடியாது. சங்கரரின் அத்வைதத்துடன் பலம் பெறும் இந்த இந்துத்துவக கோட்பாடு பின்னாளில் சர்வமதத் தன்மையதாக மறுவாக்கம் செய்யப்பட்டாலும் கூட, அதன் அடிப்படைகள் அப்படியே இன்னமும் இருக்கின்றன.

இவ்வுலகம் மாயை இவ்வாழ்வும் மாயை: கானல் நீர்: உண்மையல்ல. மாறாக, மாறாததும் அழியாததும் பிரம்மமே. இப்பிரம்ம நிலையை அடைதலே வாழ்வின் உய்வு. இதுவே பேரின்பம் - விடுபட்ட பேரின்பம் என்ற இந்தக் கோட்பாடுதான் தியான நிலைக்கும் துறவறத்திற்கும் , விட்டு விடுதலையான நிலைக்கும் அடிப்படையாக அமைகிறது. இதன் மாயைக் கோட்பாடு பாரதியால் நிராகரிக்கப்பட்டது. மு.பொவும் பாரதி அடியொற்றியே அதை நிராகரித்து நிற்கின்றார். ஆயினும், அந்த தத்துவத்தின் ஆழமான நீண்ட கால தாக்கமும், சைவமதத்தில் அது ஊடுருவி நிற்கும் விதமும் அதிலிருந்து முற்றாகத் துண்டித்துக் கொள்ளலைச் சாத்தியப்படுத்த தடையாக உள்ளன. ஆனானப்பட்ட பாரதியையே அது விட்டு வைக்கவில்லை. பாரதி கூறுகிறான்:

**'மையிறு வாள்விழியாரையும் பொன்னையும்**
**மண்ணெனக் கொண்டு மயக்கற்றிருந்தோரே**
**செய்யுறு காரியம் தாமன்றிச் செய்வார்**
**சித்தர்களா மென்றிங் கூதடா சங்கம்.**

என்றும்

**ஒன்றுமே வேண்டா துலகனைத்தும் ஆளுவார் காண்**

**என்றுமேயில் பொருளோ டேகாந்தத் துள்ளவரே**

என்றும் அவன் கூறுவது அவன் அத்வைதப் பிடியிலிருந்து முற்றாக விடுபடவில்லை என்பதைக் காட்டுகின்றன. இவ்வாறே மு.பொவும், 'பெண்புணர்வொறுப் பொரு பெருந்த பஸ்' என்று கூறுகின்றார்.

ஒரு ஆற்றல் மிக்க படைப்பாளியை, கவித்துவ வீச்சும் மனிதக்குணங்களும் நிறைந்த ஒரு கலைஞனை அவனது 'விடுதலையின்' எல்லைகளை மட்டுப்படுத்தும் தத்துவமாக, அவர் விடுதலைக்காக வரித்துக்கொண்ட தத்துவமே அமைந்து விடுகிறது என்பது எனது கணிப்பு. அவரது இயல்பான கேள்விகளும் சமூக அக்கறை மிக்க சிந்தனைகளும் இதனால் அமைதி காணப்பட்டுவிடுகின்றன. மு.பொ ஒரு அகல் விளக்காகப் புனிதமாகி விடுகிறார். அகல் விளக்குக்கு ஒளி இருக்கிறது. அதற்கு ஒரு புனிதத் தன்மையும் இருக்கிறது. ஆனால் அதன் வெளிச்சத்தையும் புனிதத் தன்மையையும் அருகில் இருப்பவர் மட்டுமே அனுபவிக்க முடியும். அவர் ஒரு சூரிய விளக்காகப் பிரகாசிக்கவும் முழு உலகுக்கும் வழிகாட்டும் 'பேரொளியை ' தரவும் முடியாமல் தடுப்பது அவர் வரித்துக் கொண்ட அவர் விரும்புகின்ற, இதுவரை நாம் பேசிய அவரது தத்துவம். பாரதி இதைத் திட்டமிட்டு உடைக்க முயன்றான். மு.பொ அதனை விருப்புடன் ஏற்றுக் கொள்கிறார். நமக்கு ஒரு நல்ல படைப்பாளி இருக்கிறார். அவற்றில் நாம் அவரைத் தரிசிக்கின்றோம்: அவர் காணும் உலகைக் காண்கிறோம். ஆனால் நாம் அவர் படைப்புக்களில் எம்மைக் காண்பது ஒரு சில இடங்களில் மட்டுமே.

மு.பொ வெற்றி பெற்று விடுகிறார் ஒரு படைப்பாளியாக. நாம் பூரண வெற்றியை அனுபவிக்க முடியாமல் நிற்கிறோம். ஒரு வேளை இதையும் மு.பொ அந்தக் காலியின் லீலைகளுள் ஒன்றாகக் கருதுவாரோ என்னவோ?

(3)

இறுதியாக அவரை ஆற்றலும் வீச்சுமுள்ள ஒரு படைப்பாளி என்று சொன்னது பற்றி சற்று விளக்க வேண்டும். அவரது தத்துவத்தில் அவர் முரணற்று நிற்பது பற்றிச் சொன்னேன். அதே வேளை அவரதே தத்துவம் பலவீனமானதென்றும், போதாததென்றும் சொன்னேன். அதே வேளை அவர் சிறந்த படைப்பாளி என்றும் சொன்னால் அது வெறும் பொய்யுரையாகத் தோன்றலாமல்லவா? எனவே அது பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டும். மு.பொ மகாகவி முருகையன் நீலாவாணன் காலத்திற்கு. அடுத்த பரம்பரையைச் சேர்ந்தவர் அவரது பரம்பரையைச் சேர்ந்தவர்களில் தனக்கெனத் தனியானதொரு இடத்தை வைத்துக் கொண்டவர். சமூகப்பார்வை கலைக் கொள்கை என்பன தொடர்பாக இவரது சமகாலத்தவர்களான நுஃமான், சண்முகம் சிவலிங்கம், சிவசேகரம் ஆகிய கவிஞர்களிடமிருந்து வேறுபட்டு நிற்பவர்.

ஆனால், இவர்களில் யாருக்கும் குறைவில்லாத விதத்தில் இவரிடம மனித நேயமும், புதுமை விருப்பும், வாழ்வு குறித்த நம்பிக்கை கொண்ட போக்கும் இருந்தது. உண்மைகளை நேரே பார்த்துப் பேசத் தயங்காத நெஞ்சுரம் இருந்தது. நேர்மை இருந்தது.

-19

# மோனா லீஸாவுக்கு...



LEONARDO DA VINCI (1452-1519)
MONA LISA
Wood, 30 1/4 x 21 in ( 76,8x53.3 cm)

நான் நினைக்கிறேன் நீ அசிங்கமானவள், சுயநலம் பிடித்து
அதிகம் கொழுப்பேறி விட்டவள் என்று.
நீ ஏன் பகட்டான ஒளி வீசுகிறாய்?
எனக்குப் புரியவேயில்லை.
எஞ்சியிருக்கும் உலகம்
நிச்சயம் பைத்தியம் பிடித்ததாய்த்தான் இருக்க வேண்டும்.

எப்போதேனும் உனது கணவனுக்கு
உன்னையே முழுமையாகத் தந்ததுண்டா மோனா லீஸா
உன்னையே இழந்து அவனைக் காதலித்ததாவது உண்டா?
உன்னால் முடிந்திருக்காது...

உலகம் முழுவதுமே உன்னைக் காதலிக்க வேண்டுமென்று
நீ அவாவினாய்.
அல்லாவிடின் -
முழு மனித குலத்திற்குமான விலை மகளாய் உன்னை ஆக்கிவிட
டே வின்சியை நீ அனுமதித்திருக்க முடியாது.

நான் உன்னில் எந்த அழகையும் காணவில்லை.
ஆட்டிப் படைக்கும் ஒரு ஆவேசம் மட்டும்தான் நீ
நீ அளவுக்கு மீறிய நேர்த்தன்மை கொண்ட வெறும் செயற்கை.
உனக்குள் எடைபோட்டபடி
ஒவ்வொருவரை நோக்கியும் நீ உனது கைகளை வைத்திருக்கும் பாங்கு ...
உனது மூக்கு கொடிய தண்டனை...
உனக்கு இதயம் இல்லை.
உள்ளிருக்கும் வெறுமையை மூடி மறைக்க
ஒரு தொகை கெட்டியான மார்பகங்கள் மட்டுமே உனக்கு உண்டு.
இவை எல்லாவற்றையும் மூடி மறைக்கவே நீ ஆடை அணிகிறாய்.
கென்வஸில் அளவுக்கு மீறிய இடத்தை நீ ஆக்கிரமித்துள்ளாய்.

எப்போது உண்மையான உன்னை
நானாகவே கண்டேனோ அதுவரை,
வருடக் கணக்காய், எனது வாலிபம் முழுவதும்
உன்னையே காதலிக்கும்படி செய்தார்களே
அந்த விமர்சகர்களும் ஏனையோரும் குருடர்களேயன்றி வேறென்ன?

**— ஆங்கில மூலம் — றென்ரன் டி அல்விஸ், தமிழில் சிராஜ் மஷ்ஹூர்**

# கலை எந்நேரமும்...

***இயக்குனரின் தலையீட்டில் நடிகர்களின் நடிப்பை வெளிப்படுத்துவதன் மூலம் திறமையான நடிப்பை மேற்கொள்ள முடியுமா?***

இங்கு இவ்வாறான செயற்பாடே நிகழ்கின்றது. ஸ்டெனிஸ்லவிஸ்கி, "எமது வெளிப்புற நடவடிக்கைகள் அனைத்தும் உள்மன செயற்பாடுகளின் விளைவு" என்கிறார். அதேவேளை அவர் "எமது வெளிப்புற நடவடிக்கைகளின் மூலம் உள்ளுணர்வுகளை வெளிக்காட்ட முடியும்" என்கிறார். இதனால் இயக்குனர் தேவையான விதத்தில் நடிகரின் உணர்வுகளை வெளிப்படுத்த பாணி ஒன்றை கையாள வேண்டும். நடிகருக்கோ, நடிகைக்கோ தெரியாமல் திரைப்பட தொகுப்பு மூலம் இதனை ஏற்படுத்த முடியும். தொகுப்பு மூலம் நடிப்பு மீளுருவாக்கம் பெறுகின்றது.

***உங்களது சிசில கினிகனி மற்றும் பவுறு வளலு இரண்டும் கத்தோலிக்க மதப் பின்னணியைக் கொண்டவை. குறிப்பாக, பவுறு வளலு திரைப்படத்தில் வயலட்டின் கருச்சிதைவு அதனுடன் தொடர்புடைய நிகழ்வுகள் கத்தோலிக்க மதத்தின் அழுத்தத்தினால் நிகழ்கின்றன. உங்களது திரைப்படங்களுக்கும் கத்தோலிக்க மத்திற்கும் இடையில் இவ்வாறான தொடர்பு ஏன்?***

புரஹந்த களுவர மற்றும் அனந்த ராத்திரிய ஆகிய படங்களில் கத்தோலிக்க பின்னணியை பயன்படுத்தவில்லை. ஆனால், சிசில கினிகனி, பவுறு வளலு ஆகிய திரைப்படங்களில் கத்தோலிக்க மதப் பின்னணியை, பாத்திர வார்ப்பின்போது, பாத்திரங்கள் அவர்களது சூழலை விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக தேர்ந்தெடுத்தோம்.

இத்திரைப்படங்கள் இரண்டிலும் அனுபவங்கள் உச்சமடைவது கத்தோலிக்க மதப் பின்னணியில் தான் என நம்பினோம். அதனால் அச் சூழலை நான் பயன்படுத்த விரும்பினேன்.

நான் பிறப்பில் பௌத்த மத்தினன். ஆனால் எம் வீட்டுக்கு அண்மையில் கத்தோலிக்க தேவாலயம் உண்டு. ஸ்தாபனம் மற்றும் உருவம் என்ற ரீதியில் எடுத்துக் கொண்டாலும் கத்தோலிக்க மதம் சமூகத்தில் ஒரு அமைப்பாகவே காணப்படுகின்றது. கத்தோலிக்க தேவாலயத்துக்கு அருகில் சென்று கெமராவை பிடித்தால் தேவாலயம் ஒரு ஸ்தாபனம், அங்கிருக்கும் கோபுரங்கள் ஸ்தாபனம் என்பது விளங்கும். தேவாலயத்துக்கு மக்கள் சென்றதும், மக்கள் என்றும் ஒப்பீட்டளவில் சிறியதாகவே தோன்றுவர். இதனால் மக்களும் சமூக சக்திகளும் மோதும் போது மக்களை பிரச்சினைக்குள்ளாக்கும் அமைப்பாக கத்தோலிக்க மதம் உள்ளது.

இதனால் நான் அவ் அர்த்தத்தை நேரடியாக வெளிக்காட்டாமல் அச் சூழலின் அடிப்படையில் அழுத்தத்திற்குள்ளாகும் பாத்திரமொன்றை விளக்க முயற்சித்தேன். நான் இவ்விளக்கத்தை பௌத்த மதத்தினனாய் வெளியில் இருந்து கூறின், அது வெற்றுக் கருத்தாகியிருக்கும். ஆனால் அக் கருத்தை சூழலுடன் இணைத்து விளங்கிக் கொள்தலே இங்கு முக்கியம். பவுறு வளுவில் வயலட்டுக்கு ஏன் தன் விருப்பப்படி வாழ முடியவில்லை? அவளை பிரச்சினைக்குள்ளாக்கும் பிரதான விடயமாக மதம் உள்ளது. வயலட் தனது கருவை சிதைக்க காரணமாயிருப்பதும் மதமே. இதனால் இத் திரைப்படத்தில் கத்தோலிக்க மதத்தை பிரபல உருவமாக காட்ட முயற்சித்தேன்.

***உங்களது பவுறு வளலு திரைப்படத்தில் நாம் கண்ட விசேட விடயமாக( இலங்கை திரைப்படைப்புகளில் காணக் கிடைக்காத) நிறமொன்றை பாவித்தமை குறிப்பிட வேண்டும். ஏன் நிறத்தை இத் திரைப்படத்தில் குறிப்பாக பாவிக்கத் துணிந்தீர்கள்?***

சிங்கள திரைப்படங்களில் இவ்வாறான இயல்பு இல்லை என நீங்களே குறிப்பிட்டிருந்தீர்கள். நாம் ஆங்கிலத் திரைப்படத்தையோ, சிங்கள திரைப்படத்தையோ பார்க்கும் போது ரசிப்புத் தன்மை மாறுபடுவது இல்லை அல்லவா? படைப்பில் மொழி இல்லாவிட்டால் எல்லோராலும் சமமாக ரசிக்க முடிகின்றதல்லவா? நிறங்களைப் பற்றி கதைக்கும்போது திரைப்படத்துறையின் ஆரம்பம் தொடக்கம் நிறங்களைப் பயன்படுத்த திரைப்படவியலாளர்கள் முனைந்தனர் என்றே கூற வேண்டும். கலை எந்நேரமும் எதையாவது தேர்ந்தெடுத்துக் கொள்ளும். கெமராவில் தெரிவது, எமது கண்களுக்குத் தெரிவது தான். வெவ்வேறு கோணத்தில் உலகத்தை சித்திரிக்க திரைப்படங்களினால் முடியும்.

திரைப்படங்களில் முன்னர், பெண், ஆணுடன் பாலியல் உறவுக் கொள்ள வரும் சந்தர்ப்பத்தில் சிவப்பு கைக்குட்டையை அசைத்த வண்ணம் வருவாள். இச் சிவப்பு நிறம் பார்வையாளர்கள் மனதில் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்துகின்றது. இவ்வாறான விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய திரைப்படம் தான் Citizen Cane திரைப்படம். இங்கு கறுப்பு வெள்ளை நிறம் ஒரு பாத்திரமாக திறமையாக பாவிக்கப்பட்டுள்ளது. பவுறு வளுவிலும் காலி கோட்டையை காட்டியவுடன் பார்வையாளர்களை 60களுக்கு அழைத்துச் செல்ல முடியாது. பார்வையாளர்களை அச் சூழலுக்கு அழைத்துச் சென்றால் தான் அவ்வனுபவங்களை அவர்கள் நேரடியாக கண்டு கழிப்பார்கள் அதற்காக நிறத்தை பயன்படுத்த வேண்டும் திரைப்படத்தில் இந்த எண்ணக்கருவை அறிமுகப்படுத்தியவர்களுள் தலை யாயவர் விக்டோரியா ஸ்டொராரோ எனும புகைப்பட கலைஞராவர். குறிப்பாக Apocalypse Now எனும் திரைப்படத்தில் அதற்கான மதிப்பை அவர் பெற்றுக் கொடுத்தார். ஸ்டொராரொ பிற்காலத்தில் Last Emperor திரைப்படத்தில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அப்பாத்திரங்களின் உளவியல் உள்ளக யதார்த்தத்தை பிரதிபலிக்க நிறங்களை பயன்படுத்தினார். இத் திறமைகளையும் நாம் பெற வேண்டும். பவுறு வளுவில் நாம் அங்கு குறிப்பிடும் அனுபவங்களை இந்தச் சூழலில் பயன்படுத்த நிறங்களை பாவித்தோம். அத்திரைப்படம் முழுவதும் இருள் தன்மை உண்டு. பகல் வேளையில் கடும் இருளை ஏற்படுத்தி ஏமாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஆனால், அதற்குப் பதிலாக இருண்ட வீட்டை பயன்படுத்த முடியும் எந்தவொரு நிறத்தை பாவிக்கும் போதும் கலை இயக்கத்திற்கும் முக்கியத்துவம் கிடைக்கும். வயலட்டின் பாத்திரம் ஒரே நிறத்திலானது என்பதன் அர்த்தம், வயலட் பாத்திரம் நேரடியாக தெரிவிக்கப்படாத பார்வையாளர்கள் தாமே உணர்ந்துக் கொள்ள வேண்டும் என்பதே. இத்திரைப்படத்தின் சித்திரிப்புகள் உச்சமடையும் போது திரைப்படத்தின் முடிவுடன் நிறத்தையும் உச்சமடையச் செய்தோம். ஒரு காலத்தில் இவையெலாம் மர்மமாக மறைக்கப்பட்டிருந்தது. ஆனால் இவற்றில் மர்மம் எதுவுமே இல்லை.

**நன்றி: ராவய**

நன்றி - நூலகத்திட்டம்



# ஈழத்து மெல்லிசை...

இப்போ அவை எப்படி இருக்கின்றனவோ, இனி அவை எப்படி இருக்குமோ எனக்கூறிக் கவலைப்படுவார்!

வானொலியில் தாம் பெற்ற பதவிகளை வைத்துத் தம்மை வளர்த்தவராய் அல்லாமல் வானொலியின் தமிழ் ஒலிபரப்பை வளர்த்துத் தம்மை வளர்க்காது தாம் நேசித்த கலையைப் பேரம் பேசி விற்பனை செய்யாதவர் பரா!

ஈழத்து மெல்லிசைத் தோற்றப்பணியில் அவருடன் இணைந்திருந்த காவலூர் இராசதுரை அவரைப் பற்றி இப்படித்தான் சொல்வார்.

டாக்டர் மு.வரதராசனாரின் கண்ணோ காவியமோ என்ற நாவலில் எங்கள் அப்பா நல்லவர் ஆனால் வல்லவராகத் தெரியா-தவர் என்றும் பொருள்படும் வாசகம் பராவை எண்ணும் போதெல்லாம் என் நினைவுக்கு வரும் - அது உண்மையே!

வர்த்தக ஒலிபரப்பிலும் இலக்கிய நயம் இசைநயம் பொதிந்த நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தியதோடு உலகிலேயே வர்த்தக ஒலிபரப்பின் மூலம் நேயர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்திய பெருமையை இலங்கை வானொலிக்கு ஏற்படுத்தியவர் அண்ணன் பராதான் என்பார் பி.எச்.அப்துல் ஹமீத். வீணை இசை மேதை சிட்டிபாபுவின் இசையுடன் தனது குரலையும் சேர்த்து மணிக்குரலாய் ஒலித்தமை அவர் செய்த பரிசோதனை முயற்சிகளுள் ஒன்றாகும்.

இன்று நாம் போற்றிய புகழும் சப்தஸ்-வரங்கள் நிகழ்ச்சிக்கு முன்னரேயே இலங்கை வானொலியில் திரை இசையுடன் கர்நாடக இசையை இணைத்து நிகழ்ச்சிக-ளுக்குத் தளமிட்ட பெருமை பராவுக்கு-ரியது!

இவருடைய தகவற் குறிப்புகளின் அடிப்படையில் பி.எச்.அப்துல் ஹமீத் தயாரித்த வீணை பாலசந்தர் அஞ்சலி , மகாராஜபுரம் சந்தானம் அஞ்சலி ஆகிய நிகழ்ச்சிகள் அகில இந்திய வானொலி தயா-ரித்த நிகழ்ச்சிகளை விடப் பலவகையிலும் சிறந்தவை என தமிழகத்தவர்களாலும், அவர்களது உறவினர்களாலும் பாராட்டும் வகையில் அமைந்தன.

ரூபவாஹினியில் சங்கராபரணம், வீணை போன்ற விபரண நிகழ்ச்சிகளை சுவைப்பட வழங்கினார்.

இறுதியாக சுயாதீன தொலைக்காட்சி-யில் கர்நாடக இசையில் திரை இசையின் தாக்கம் என்ற ஒருமணிநேர நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் பல பாடல்களுடன் பல தகவல்களைச் சொன்னார். அப்துல் ஹமீத் ஏற்பாட்டில் ஏ.ஆர்.ரகுமானுடன் இணைந்து மற்றுமொரு இசை நிகழ்ச்சியைச் செய்ய அவர் விரும்பியிருந்த போதிலும் அவரது உடல் நிலை விரும்பவில்லை!

அவர் பற்றிய ஒரு விவரணத்தைத் தயாரிக்க சிலர் முயன்றவேளை அவரது உடல்நிலை மோசமாகி விட்டது!

உண்டா விருது நேர்மையுடன் புகுந்த காலத்தில் அவருடன் இணைந்து பெருமையடைந்தது! நம்மவர் சிலருக்குக் கிடைக்கும் பெரிய பெரிய பட்டங்கள் எல்லாம் பரா அண்ணரை நெருங்குவதற்கு வெட்கி நின்றன! எதிர்வரும் நூற்றாண்டை அவர் தம் வாழ்வில் காணமுடியாத போதிலும், அடுத்த நூற்றாண்டில்

அவர் காண விரும்பியவை இரண்டு

1.உலகெங்கும் இணைந்த தமிழ் ஒலி.

2. உலகெங்கும் பரவும் தமிழிசை இயக்கம் அமரர் பரராஜசிங்கம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய அடுத்த நூற்றாண்டு வழிவகுக்க வேண்டும்!

**-வரா**

# ஒரு வெகுஜன...

**ஆக. 94ல் வழங்கிய ஆதரவை நீங்கள் இபோது வாபஸ் பெற்றுள்ளீர்கள். ஒரு கட்சி என்ற வகையில் அதை மக்களுக்குப் பகிரங்கமாக அறிவித்துள்ளீர்களா?**

இல்லை. நாங்கள் வழங்கிய ஆதரவு ஒரு பகிரங்க ஆதரவு என்பதைக் காட்டிலும் அது ஒரு குறிப்பிட்ட ஜனாதிபதித் தேர்தல், குறிப்பிட்ட பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான விடயம் மட்டும் தான். தற்போது தொடர்ந்து எமது கட்சி ஒவ்வொரு நடவடிக்கைகள் தொடர்பாகவும் அதன் மீது எதிர்ப்பையும் வெறுப்பையும் வெளிப்படுத்தக் கூடிய விதமாக

அவ்வப்போது தெளிவாக பத்திரிகை அறிக்கைகள் வாயிலாக வெளியிட்டு வரு-கிறது. அது மட்டுமல்ல எங்களுடைய புதிய பூமி பத்திரிகையில் கூட எங்களுடைய பேச்சுக்கள் எழுத்துக்கள் அவ்வடிப்ப-டையில் தாராளாமாக வெளிவருகின்றன.

**இந்த இடத்தில் நான் திரும்பவும் கேட்கிறேன். தமிழ்க் கட்சிகளும் அரசாங்கத்துக்குப் போதியளவான ஆதரவை வழங்கும் அதே நேரம் அவ்வப்போது சில விடயங்களில் அரசை எதிர்த்து அறிக்கையும் விடுகின்றன. போதாததற்கு தாம் வெளியிடும் பத்திரிகைகளில் அரசைக் காரசாரமாக விமர்சிக்கவும் செய்கின்றன.அதிலிருந்து எவ்வாறு உங்களடைய கட்சி வேறுபடுகிறது?**

தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றத்தில் உள்ளன. ஒன்று பாராளுமன்றத்தில் அங்கத்துவம் பெற்றவர்கள் இரண்டாவது இராணுவ ரீதியாக ஆயுதம் பெற்று அந்த இராணுவத்துடன் நின்று செயற்படும் கட்சிகள். அவற்றிலிருந்து சில இயக்கங்கள் விடுபட்டு நிற்கலாம் அவற்றை நாம் கவனத்தில் எடுக்க வேண்டும். இராணு-வத்திலும் சேராமல் பாராளுமன்றத்திலும் சேராமல் இருக்கின்ற இயக்கங்களையும் நாம் அவதானத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் அந்த நிலைமையில் தான் உள்ளார்கள் . எங்களுக்கு அவ்வாறு இரண்டு நிலைமையும் இல்லை. இதனால் அரசுக்கு ஆதரவு கொடுப்பது வாபஸ் பெறுவது என்ற அந்த தேவைகள் எங்களுக்கு எழவில்லை.

**இடதுசாரிக்கட்சி ஒள்றின் பிரதான பணி உழைக்கும் மக்களுடைய தலைமையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவது. ஆனால் இலங்கையில் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதற்கு மாறாக ஆட்சிக்கு வரக்கூடிய கட்சிக்கு ஆதரவை வழங்குவது என்று இக்கட்சிகளின் பணி சுருங்கிப் போயுள்ளது. அதாவது வெறும் அமுக்கக் குழுக்களாகத் தான் அவை இருக்கின்றன. புதிய ஜனநாயகக் கட்சி இதிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது? இதனை இலங்கை இடது சாரிக்கட்சிகளின் ஒரு தொடர்ச்சியாகக் காணலாமா?**

உண்மையாக அதைப்பற்றி யோசி-க்க வேண்டும். நாங்கள் மக்களிடம் ஆதரவும் செல்வாக்கும் பெற்ற உரு வலிமையான ஒரு இயக்கமாக இருந்-தாலும் நாங்கள் அதைப்பற்றி யோசித்-திருக்கலாம். உதாரணமாக குமார் பொன்னம்பலம் ஜனாதிபதித் தேர்த-லிலை போட்டியிட்டதன் மூலம் அவர் அந்த ஜனாதஜிபதி தேர்தலிலை வெற்றியிட்டக் கூடியத ஒரு சூழல் இரு-க்கு மாக இருந்தால் நாங்கள் அதை வரவேற்றிருக்க முடியும். அல்லது வாசுதேவ நாணயக்காரா ஒரு ஜனாதி-பதி ரீதியாக இருந்து வெற்றி பெற்றி-ருக்க முடியுமானால் நாங்கள் அதை வரவேற்றிருக்க முடியும். ஆனால் இவை யாவும் தொடர்ந்து இருந்து வரு-கின்ற யு.என்.பிக்கு உதவும் முயற்சிக-ளாகத்தான் பாராளுமன்ற வாக்கு எண்ணிக்கை கணிப்பில் அப்படித்தான் அதன் விளைவு அமைவதை நாம் கவனிக்கலாம்.

**மேல் மாகாணத்தைப் பொறுத்த-வரை தமிழ் வாக்குகளிலேயே அனைத்-துக் கட்சிகளுடைய கவனமும் குவிந்தி-ருப்பதாகப்படுகிறது. இது குறித்து என்ன சொல்வீர்கள்?**

இங்கு நாலரை லட்சம் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள் என்று நினைக்கிறேன். இந்த வாக்குகள் வெற்றியைத் தீர்மானி-க்கிற வாக்குகளாகத் தான் இருக்கின்-றன. எனவே இங்கு வாழும் தமிழ் மக்-கள் வடக்குக் கிழக்கு நிலைமைகளைப் புரிந்து கொண்டு யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். கௌரவமான சுயநிர்ணய அரசியல் அடிப்படையில் தீர்வு வழங்-கப்பட வேண்டும். பல்லினப் தேசியப் பண்பாட்டைக் கொண்ட ஒரு நாடு என்பதை அங்கீகரிக்க வேண்டும். இவற்றிற்கான ஒரு சர்வசன வாக்கெ-டுப்பாகத் தான் இத் தேர்தலைக் கருதித் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும். இதனைத் தான் நான் குறிப்பிடுவேன்.

**-நேர்காணல் : சங்கரி**

# ஈரானிய சினிமா...

நம்பிக்கையை அதிகரித்தது. இதன் மூலம் ஈரானின் சர்வதேச அங்கீகாரம் மேலும் ஸ்திரம் பெற்றது. புரட்சிக்குப் பிந்திய ஈரானிய சினிமா ஈரானிய சமுதாயத்தில் முனைப்பான தாக்கத்தை ஏற்படுத்தி ஒரு பரந்தளவிலான உள்நாட்டு சினிமா பார்வையாளர்களையும் தன் பால் ஈர்த்துக் கொண்டது. பெரும்பாலான பத்திரிகைகள், சஞ்சிகைகளில் ஈரானிய சினிமாவுக்கென்று தன் முழுப் பக்கங்களையும்,வேறு சில குறிப்பிட்ட சில பக்கங்களையும் ஒதுக்கியுள்ளன. பல கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் சினிமா தொடர்பான கற்கை நெறிகளை நடாத்துகின்றன.பட்டப்படிப்புத் துறையிலும் சினிமா ஒரு பகுதியாகவுள்ளது. இது தவிரவும், ஈரானின் திரைப்படத் தயாரிப்பு, இயக்கம், நடிப்பு போன்ற துறை சம்பந்தப்பட்ட கொள்கை ரீதியிலான, நடைமுறை சார்ந்த நூல்கள் வெளியி-டப்படுகின்றன. இதில் தனியார் துறையினரும், அரச துறையினரும் முனைப்பாக ஈடுபட்டுக் கொண்டி-ருக்கின்றனர். இந்த அடிப்படையிலேயே பராபி சினிமா நிறுவனமும் சினிமாத்துறை சார்ந்த மேற் குறித்தவாறான நூல்களை வெளியிடுவதில் ஆர்வம் காட்டி வருகிறது. சினிமா ஆர்வலர்களதும் மாணவர்களதும் அறிவை விருத்தி செய்வதை இவ் வெளியீடுகளின் நோக்கமாக அது கொண்டுள்ளது. புரட்சிக்குப் பிந்திய காலப் பகுதியில் ஈரானிய சினிமாவின் குறித்துச் சொல்லத்தக்க இன்னொரு அம்சம் யாதெனில், சிறுவர்கள் இளைஞர்களுக்கான திரைப்படங்களின் வளர்ச்சியாகும். இந்த வளர்ச்சிக்கான மிக முக்கியமான காரணிகளில் ஒன்று, இந்தப் படங்களுக்கு ஈரானிய சிறுவர்கள், இளைஞர்களிடையே இருக்கும் அமோக வரவேற்பாகும். இவ்வகை சார்ந்த படங்கள் இவ் இளைய பிரிவினரைக் கவர்ந்திழுக்கக் கூடியதாக-விருக்கிறது.

ஈரானிய சமூகத்தின் ஓர் அங்கமான இவ்வகைச் சினிமாக்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பராபி சினிமா நிறுவனம் சிறுவர்கள், இளைஞர்களுக்கான பிரிவொன்றையும், இளைஞர்கள், சிறுவர்களுக்கான சினிமா சபையொன்-றையும் உருவாக்கியுள்ளது. இந்நிறுவனம் இப்பிரிவினர் சார்ந்த பட விழாக்களை *இஸ்பஹானில்* ஏற்பாடு செய்திருக்கிறது. இந்தப் படவிழாக்களின் நோக்கங்களை அகலிக்கும் நோக்கில் சிறுவர்கள் இளைஞர்கள் தொடர்பான சர்வதேச திரைப்படங்களையும் இப்பட விழாக்களில் சேர்த்துக் காண்பிக்கிறது. அத்துடன், ஆரம்பகால சினிமா தயாரிப்பாளர்களையும் புரட்சிக்குப் பிந்திய சினிமாத் தயாரிப்பாளர்களையும் இந்த இளைய சினிமா ரசனையாளர்களைக் கருத்திற் கொண்ட திரைப்படங்களையும் தயாரிக்குமாறு ஊக்குவித்து வந்தது. சர்வதேச பட விழாக்களில் ஈரானியத் திரைப்படங்கள் பெற்றிருக்கிற பல்வேறு விருதுகளைப் பார்க்கும் போது ஒரு உண்மை புலப்படுகிறது. அதாவது விருது கிடைக்கப் பெற்ற அனேக படங்கள் சிறுவர்கள் இளைஞர்கள் தொடர்பா-னதாகவும், அவர்களது வாழ்க்கையின் பல்வேறு கூறுகளை கருத்தில் கொள்வ-னவாகவுமுள்ளன. இவ்வாறான படங்களின் முக்கியமான சிறப்பம்சங்கள் யாதெனில் அவை கொண்டுள்ள உள்ளடக்கத்தின் எளிமையான தன்மையும் அவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற நேர்த்தியானதும், நேர்மையானதுமான தன்மையும், சர்வதேசப் பார்வையாளர்களை ஈர்த்துக் கொள்ளக்கூடியதுமான அதன் கனதியுமாகும்.

நன்றி: IRANIAN NEW CINEMA
தமிழில்: எம்.கே.எம்.ஷகீப்
சி.செல்வராஜா

# வாழ்க்கையோடு விளையாடாதீர்!

சரிநிகர் 163வது இதழில் 6ம் பக்கத்தில் 'வவுனியா தேசிய இளைஞர் சேவை மன்றம்' ஊழல்களின் கோட்டை' என்ற தலைப்பில் வெளிவந்த விடயங்களோடு வெளியே கொண்டுவரப்படாத இன்னும் பல செய்திகளையும், சரிநிகரின் தொடக்ககால வாசகன் என்ற மகிழ்வோடு - ஏனைய எம் வாசகர்களோடும் பகிர்ந்துகொள்ள எண்ணி உண்மையான சில நிகழ்வுகளை இக்கட்டுரையின் வாயிலாக வெளிக்கொணர விரும்புகிறேன்.

1997ம் ஆண்டு, இளைஞர்களுக்குரிய தொழில்வாய்ப்பு, தொழிற்பயிற்சி, அவர்களின் தனிநபர் திறமைகளை கண்டறிந்து ஊக்குவித்தல் போன்ற நல்லதோர் பணியின் பொருட்டு "தகவல் மையம்" என்றொரு பிரிவை ஏற்படுத்தி, அதை நடைமுறைப் படுத்துவதற்காகப் படிவங்கள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்-பட்டன. ஆனால், 1998 வரை அதன் செயற்பாட்டை இந்த அதிகாரிகள் முன்னெ-டுத்துச்செல்லவில்லை. பத்தாயிரம் ரூபாய் செலவிடப்பட்டதற்குரிய கணக்கிற்காகப் பெயரளவில் ஒரு பெயர்ப்பலகையும், அலுவலக பேப்பர், பென்சில் வேண்டப்பட்டதாக மட்டும் ஒரு கணக்கு வைக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

கிராமப்புறப் படிக்கும் இளைஞர்களின் கணித - விஞ்ஞானப்பாட ஊக்குவிப்புக்காக நடாத்தப்பட்ட க.பொ.த. (சாதாரணம்) முன்னோடிப் பரீட்சைகள், கிராமப்புறப் பாடசா-லைகளில் நடைபெறாமல் செல்வாக்குச் செலுத்தும் நகர்ப்புறப் பாடசாலைகளில் மட்டுமே நடந்து முடிந்தது. ஊக்குவிக்கப்பட வேண்டிய கிராமத்து இளைஞர்கள் புறக்கணிக்கப்பட்டமைக்கு இந்த அதிகாரிகளின் நடவடிக்கைகளே காரணம்.

கொழும்பிலிருந்து வருகை தந்த நிர்வாகப்பணிப்பாளர் இளைஞர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்று வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடந்தது. இந்நிகழ்ச்சிக்குப் பௌத்த குருமார்கள் இருவரை மட்டுமே அழைத்திருந்தனர். ஏனைய மத குருமார்கள் புறக்கணிக்கப்பட்டனர். இன நல்லிணக்கம் வளர்வதற்கும், இனமுறுகல் இனத்துவப் பார்வையிலிருந்து இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்கும் வழிகாட்டுகிற - வழிகாட்டவேண்டிய இந்த அதிகாரிகள் தங்களின் தேவையற்ற செயற்பாடுகளால் கா-ழ்ப்புணர்வையும் ,வன்மங்களையும் வளர்த்து வருகின்றனர்.

இளைஞர் கழகத்தில் தொடங்கிப் பிரதேச இளைஞர் சம்மேளனம், மாவட்ட இளைஞர் சம்மேளனம், தேசிய இளைஞர் சம்மேளனம் என்ற படிப்படியான நிலையில் தன் செயற்பாட்டை விரிவுபடுத்தியுள்ள இளைஞர் சேவை மன்றம் மாவட்டங்கள் தோறும் இளைஞர்களுடனான கலந்துரையாடல்களை அந்தந்த உதவி இயக்குநர்கள் மூலம் நடத்தி இளைஞர்களின் குறைகளைக் கேட்டறிந்து, தேவைகளைக் கண்டுணர்ந்து அக்குறைகள், தேவைகள் நிவர்த்தி செய்யப்படுகிறது.

மன்னார், யாழ்., மட்டக்களப்பு மாவட்-டங்களில் இக்கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுக் குறைநிவர்த்தி செய்யப்-பட்டுள்ளது. வவுனியாவில் மட்டும் வெறும் மேடைக் கூட்டத்தோடு இளைஞர்களின் தே-வைகள் - குறைகள் கண்டறியப்படாமலே நடந்து முடிந்தது.

1997ம் ஆண்டு தேசிய கலாசார போட்டியில் பரிசை வென்ற மூன்று குழுவினருக்கு இதுவரை காலமும் பரிசைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. அக்குழுவினர் நேரடியாகக் கொழும்புக்குப்போய்ப் பரிசைப்-பெற்றுவர முடியவில்லை. அப்பரிசினைப் பெற்றுத்தருமாறு இந்த அதிகாரிகளைப் பலமு-றைகேட்டும் ஒன்றும் நடந்தேறவில்லை. எழுத்து மூலமாக உதவிகேட்டும் கூட ஏனோ இன்னும் மௌனமே நீடிக்கிறது! இவர்களில் பலர் யாழ். இராமநாதன் கல்லூரிக்கு மேற்படிப்பைத் தொடர விண்ணப்பிப்பதற்கு இந்தச் சான்றிதழ்களும் உதவியாக இருக்கும் என்பதால் தங்களின் நேரகாலங்களை வவுனியா தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்குஅலைவதன் மூலம் செலவிட்டு வருகின்றனர். விடிவு பிறக்குமா...?

வவுனியாவில் செட்டிக்குளப் பிரதேசம் மிகவும் பின்தங்கிய - ஊக்குவிப்புக் குறைந்த பிரதேசமாகும். அங்குள்ள இளைஞர்கள் தற்போது நாடகத் துறையில் நல்ல வளர்ச்சியுற்று வருகின்றனர். அந்தப்பகுதி நாடகத்துறை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதி ரூபா 16,000/- ரூபா இவர்களால் திருப்பி அனுப்பப்பட்டு விட்டது? இந்த அதிகாரிகளின் 'நேர்மையான செயற்திறனை' அறிவதற்கு இச்செயற்பாடு ஒன்றே போதுமானதாகும்! இதுபோலவே மாவட்ட இளைஞர் தின நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதியும் இவ்வதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. 'வவுனியா மாவட்டத்திற்கு ஒதுக்கப்படும் நிதிகள் முற்று முழுதாகப் பயன்படுத்தப்படவேண்டும்' என்று வவுனியா அரச அதிபர் அறிவுறுத்தல் கொடுத்தி-ருந்தும் நிதி திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

வவுனியாவில் செயற்படும் முத்தமிழ் கலாமன்றம், கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், கலாசாரப் பேரவை ஆகிய கலை இலக்கிய அமைப்புகள் நிதி வசதிகள் இன்றி தன்னூக்கத்தால் செயற்பட்டுவரும் இக்காலப்பகுதியில் இவ்வதிகாரிகளால் வழங்கப்பட்ட - ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி-யும் திருப்பி அனுப்பப்படுவது நியாயப்படுத்தப் படமுடியாத அநியாயமாகும்.

மாவட்ட மட்டத்தில் போட்டிகள் நடந்தேறிய பின் மாகாண மட்டத்திலும் அதன் பின் தேசிய மட்டத்திலும் போட்டிகள் நடைபெறுவதே இயல்பு. வவுனியாவிலோ... 1998 ஏப்ரலில் நடைபெற வேண்டிய கலாசாரப் போட்டிகள் நடைபெறாமலே கொழும்பு அதிகாரிகளின் முன்னிலையில் மாகாணப் போட்டிகள் நடந்து பின் தேசியப் போட்டிகள் நடந்து முடிந்தன. தேசிய மட்டத்தில் வெற்றிபெற்ற ஓர் இளைஞன் மாவட்ட போட்டியில் கலந்து கொள்வதில் பயன் ஏதுமில்லை. இங்கே மாகாண, தேசிய மட்டப் போட்டிகள் நடந்து முடிந்து ஏழு மாதங்களின் பின் 1998 டிசம்பரில் மாவட்டப் போட்டிகள் நடந்தன. இம்மாவட்டப் போட்டி நிகழ்ச்சி ஒன்றுக்கு ஓரிரு இளைஞர்களே பங்குபற்றினர். இப்போட்டிக்கு ரூபாய் 15,000 ஒதுக்கப்பட்டு செலவழிக்கப்பட்டும், இலக்கியப் போட்டிக்கான சான்றிதழ்கள் இக்கட்டுரை எழுதும் வரை கிடைக்கவில்லை.

இவ்வதிகாரிகளின் கவலையீனத்தாலும் மோசமான செயற்பாட்டாலும் சென்ற ஆண்டு 07 விருதுகளை ஜனாதிபதியிடமிருந்து பெற்ற வவுனியா மாவட்டம் இம்முறை இரண்டே இரண்டு விருதுகளை மட்டுமே பெற்றது. தனியொரு சில அதிகாரிகளின் இப்படியான நடவடிக்கைகளினால் வவுனியா மாவட்டமே மிகவும் பின்தள்ளப்படுகிற நிலையைச் சமூகம் எப்படி அங்கீகரிக்கும்?

1998ம் ஆண்டு தேசிய மட்டத்திற்கான அறிவிப்பாளர் இறுதிப் போட்டிக்கு வவுனியா மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட நாகராசா, குகனேஸ்வர சர்மா ஆகிய இரு இளைஞர்களும் இவ்வதிகாரிகள் அனுமதிபெற்றுத்தராத ஒரேயொரு காரணத்தால் வாய்ப்பை இழந்து விட்டனர். இவர்களின் பாரபட்சமான நடவடிக்கைகளால் இளைஞர்கள் தொடர்ந்தும் பாதிப்படைந்து வருகின்றனர்.


மானிய விலையில் இளைஞர்களுக்கென்றே தருவிக்கப்பட்ட 1000 துவிச்சக்கர வண்டிகளில் ஒன்று இளைஞர் சேவைமன்ற மாகாணப் பணிப்பாளரின் மகனுக்கு வழங்கப்பட்டுள்ளது. "ஆடு வெட்டினால் பங்கிடுபவனுக்கே ஈரல் சொந்தம்" என்ற கதைபோல் இவர்கள் தரமான சைக்கிளைப் பார்த்து எடுத்து வைத்துக்கொண்டனர்.

இவருக்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும், ஒரு அரச அதிபரும் உறவினர்களாக இருப்பதாலும் செல்வாக்கான பின்புலம் உள்ளதாலும் வவுனியா மாவட்ட உயரதிகாரிகள் நடவடிக்கை எடுக்க அஞ்சுவதாகத் தெரிகிறது. மக்களின் சொ-த்துக்களையோ, வளங்களையோ, இல்லாமல் செய்வோரை நீதி என்றும், விட்டு வைப்பதில்லை. இதுவே வரலாற்று உண்மை.

இங்கே நாங்கள் வேண்டுவதும் - எதிர்பார்ப்பதும் என்னவென்றால்... யுத்தச் சீரழிவுகள், பொருளாதாரச் சுமைகள், மறுக்கப்பட்ட - தடுத்துவைக்கப்பட்ட இயங்கல் நிலைகள், இன ஒடுக்குதல்கள்....

இதன் மத்தியிலே வாழ்க்கையோடு தினந்தோறும் போராடி வருகிற வவுனியா போன்ற வட - கிழக்கு மண்ணில் வாழ்கிற இளைஞர்களின் வாழ்க்கையோடு அதிகாரிகளை விளையாட அனுமதிக்க வேண்டாம் என்பதே!

**துளசிதாசன்**



# எத்தனை பேரை மிஞ்சி விட்டார் வெ.சா?

167ம் சரிநிகரில் வெங்கட் சாமிநாதன் (வசதிக்காக இனி வெ.சா)எழுதிய பதிலுக்குக் கீழே நீங்கள் தந்துள்ள குறிப்புத் தொடர்பாகச் சில சொற்கள்:

தனிமனிதனா, சமூதாயமா என்கிற விவாதத்தை மட்டுமல்ல,பூமி உருண்டையா, தட்டையா, பூமி சூரியனைச் சுற்றுகின்றதா, சூரியன் பூமியைச் சுற்றுகின்றதா ஆகியன முதற்கொண்டு என்றைக்கும் முடியாத விவாதங்கள் எத்தனையோ உள்ளன. என்னைப் பொறுத்தவரை தனி மனிதனுக்கும் சமூதாயத்திற்கும் இடையிலான முரண்பாட்டை பகை முரண்பாடாகப் பார்ப்பதன் விளைவுகளை அறிந்தவர்கட்கு தடுமாற்றம் குறைவு என்று தோன்றுகிறது. அது போக இது வரை பதில் எழுதுவது என்ற பேரிலும் வேறு பாவனைகளிலும் தரக்குறைவான தனிப்பட்ட தாக்குதல்களையும் அவதூறுகளையும் பொய்களையும் எழுதிய எத்தனையோ பேருக்குத் தாராளமாக இடமளித்து வந்துள்ள சரிநிகர் இந்த வெ.சா. பதிலுக்குப்பின் நீளம் பற்றிக் கவலைப்படுவதற்கு காரணம் என்ன? அதன் தரம் ஒருவேளை உங்களுக்கே மிகவும் கேவலமானதாகத் தோன்றுகிறதா? எனக்கு என்னவோ அப்படித் தோன்றவில்லை. உருப்படியாக எதுவும் சொல்ல முடியாத போது எவரும் செய்யக் கூடியது, பேசாமலிருப்பது அல்லது உளறுவது. வெ.சாவின் தெரிவு பின்னது. ஆனால் அவர் சரிநிகரில் எழுதி அவதூறு பொழிகிற எத்தனை பேரை மிஞ்சி விட்டார்? இல்லாத விஷயங்களைப் பற்றிப் பக்கக் கணக்காக அளக்கிற எத்தனை பேரை அவர் மீறி விட்டார்?

கைலாசபதி மீது சாதியவாதி என்ற அவதூற்றை விடாது பொழிகிற எஸ்.பொன்னுத்துரையின் பொய்யுடன் என்.கே.ரகுநாதனின் கதையையும் பிணைத்துச் சுவைப்படுத்த முயன்று, தான் குழைத்த சாணத்துக்குள் சறுக்கி விழுந்த வெ.சா. பற்றி இரங்கத்தான் தோன்றுகிறது. நான் பேர் குறிப்பிட்ட காரணத்துக்காக, வில்வரத்தினத்தின் கவிதையைக் கூட அவமதிக்கும் அளவுக்குப் போயிருக்கிற வெ.சா. ஈழத்து இலக்கியம் பற்றிச் சரிநிகரில் வந்த ஒரு கட்டுரையிலிருந்தே எவ்வளவு கற்றிருக்கிறார் என்று காணும் போது மலைப்பு மேலிடுகிறது. உதிர்ப்பதற்கு இன்னும் இரண்டு பேர்களாக ஆத்மாவும் வில்வரத்தினமும் அவருக்குக் கிட்டியமை பற்றி இலக்கிய உலகம் பெருமை கொள்ளட்டும். நிந்தனைகளைப் பொறுத்தவரை நாய், பன்றி, டைனோசர், குரங்கு போல நிறையக் கேட்டே பழகி விட்ட எனக்கு வெ.சாவை எந்த விலங்குடனும் ஒப்பிட்டு அவரைத் தாக்கும் முயற்சியின் விளைவாக ஒரு அப்பாவி விலங்கை நிந்திக்க மனம் இல்லை.

பத்திரிகைகள் ஆசிரியருக்கு கடிதங்கள் பகுதியை அறிஞர் பெருந்தகைகட்காக அல்லாது, என் போன்ற வாசகர் கட்காகவும் தான் வைத்திருப்பதாக நம்புகிறேன். கவனத்துக்குரிய எது பற்றியும் உடனுக்குடன் எழுதுவதன் தேவையை ஏற்பவர்கட்கு இது பற்றி விரிவாக நான் விளக்க அவசியமில்லை. நாலு சொற்களில் எழுதக் கூடியதையும் ஒரே சொல்லில் எழுதலாமா என்று பார்க்கிறவர்கள் இருக்கிறார்கள். நாலு பக்கங்களுக்கும் மேலாக இழுத்தடிக்கிற அறுவை நிபுணர்களும் இருக்கிறார்கள். எழுத்தின் நீம்களிலும் கொலம் சென்றி மீற்றர்களிலும் இன்று கணனிகளில் கிலோ பைற்களிலும் அளக்கப்படுவதில்லை. எண்ணூறு பக்க நூலொன்றை நேர்த்தியான எட்டுவரி விமர்சனத்தால் அதன் புதைகுழிக்கு அனுப்பவும் முடியும். 1995ல் வந்த விமர்சனாஸ்ரமம் என்ற சிறு நூலில் பிரமிள், வெ.சாவின் இலக்கிய வண்டவாளங்களை எல்லாம் புட்டுப்புட்டு வைத்த மாதிரிச் செய்ய என்னால் முடியாது. எனது மொழிநடை வேறு, அணுகுமுறையும் வேறு.

தனிமனித பங்களிப்பைப் பற்றி எனது கடிதத்தில் நான் எவ்விடத்தும் குறைவாக மதிப்பிடாததால் அதுபற்றி இங்கு பதில் எழுதிப் பக்கங்களை பாழாக்க அவசியமில்லை.

பிராமணியம் என்பதை நாங்கள் வெவ்வேறு தளங்களிலும் செயற்பாட்டு வகையிலும் காணுகிறோம். இன்று தலித்தியம். பெரியாரியம் போன்ற கோட்பாட்டாளர்கள் சிலர் எங்கும் எதிலும் தேடிக் காண்கிற பிராமணியச் சதி பற்றி நான் பேசவில்லை. பிராமண சமூகத்தின் இருப்பும் நிலைப்பும் தொடர்பான பிரச்சினை, சமூக உறவுகள் தொடர்பான பிரச்சினை, அதைக் கவனமாக கையாள்வதன் தேவையை நான் மிகவும் உணர்கிறேன். வெறும் சாதிப்பகை நோக்கில் அதைக் கையாள இயலாது.

மேலாதிக்க சித்தாந்தத்தின் ஒரு பிரதான கூறாக இயங்கும் பிராமணியம் தத்துவார்த்தத் தளத்தில் கடுமையாக எதிர்த்து முறியடிக்கப்பட வேண்டியது. பிறப்பால் மனிதரிடையில் வேற்றுமையையும் ஏற்றத் தாழ்வையும் நியாயப்படுத்துகிற அளவிலும் மனித விடுதலைக்கான பல்வேறு முயற்சிகளை மறிப்பதிலும் அதன் பங்கு பெரியது. வரட்டு நாத்திக அணுகுமுறையின் மூலம் அதை முறியடிக்க முடியாது. சகல மட்டங்களிலும் மக்கள் அதிகாரமுடையவர்களாவது என்பது உறுதியான நம்பகமான ஒரு வழி. வெகுஜனங்களைக் கும்பல் என்றும் பாமரர் என்றும் நிந்திப்போரிடம் இதை விளக்கிப் பயனில்லை.

குஷ்பு பற்றிய சில குறிப்புக்கள் அவை வந்த கட்டுரை கண்டிக்க முனைந்த விடயத்துக்கு உறவற்றவை. ஆபாசப்படம் (நீலப்படம்?) பற்றி எனக்கு அறிவு குறைவு. தணிக்கை செய்யப்பட்ட தமிழ்த் திரைப்படங்களின் சில காட்சிகளை தொலைக்காட்சியில் கண்டுள்ளேன். அதைவிட ஆபாசமாக எதுவும் இருக்க முடியுமா?

விபசாரம் பற்றியும் விபசாரிகள் பற்றியும் மனிதாபிமானத்துடனும், சமூக அக்கறையுடனும் பரிவான எண்ணங்களைப் பரிமாறுகிற ஒரு ஏட்டில் ஒரு நடிகை வீணாக ஏன் இழிவுபடுத்தப்பட வேண்டும்? ஒரு குஷ்பு போனால் இன்னொரு குஷ்பு. ஸ்மீதா போல ஆபாச நாட்டியமாடும் ஒரு நடிகை தற்கொலை செய்தால் கண்ணீர் வடிக்கும் சமூகக் கண்டனத் தலையங்கங்களை எழுதுகிற அதே கைகள் தாம் உண்மையான குற்றவாளிகளை விட்டு விட்டுப் பெண்களை மட்டும் தாக்குதலுக்கு இலக்காக்குகின்றன.

சி.சிவசேகரம்
கொழும்பு

எது தனிப்பட்ட தாக்குதல் எது தனிப்பட்ட தாக்குதல் அல்ல என்பது குறித்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அபிப்பிராயம் இருக்கலாம். இவ்விடயத்தில் ஒரே மாதிரியான முடிவை எல்லா எழுத்தாளர்களும் கொண்டிருப்பதாக நாம் கருதவில்லை. ஆயினும் சரிநிகர் தனது அறிவுக்கெட்டிய வரையில் காய்தல் உவத்தலின்றி கருத்துக்களைப் பிரசுரித்து வருகின்றது. நாம் சொல்ல விரும்பியதெல்லாம் விடயங்கள் சுருக்கமாக இருப்பது பல விடயங்களைச் சரிநிகரில் சேர்க்க உதவியாக இருக்கும் என்பது தான். எழுத்துக்களின் தரத்தை நீளத்தை வைத்தோ எழுதுபவரை வைத்தோ அளக்கும் பண்பு சரிநிகரிடம் எப்போதும் இருந்ததில்லை. இருக்கப் போவதுமில்லை.
ஆ-ர்.

# மக்களைப் பணயம் வைத்து சூறையாடும் வர்த்தகர்கள்!

1995 ஒக்டோபர் 30 மாபெரும் மனித இடப்பெயர்வின் பின் யாழ். குடாநாட்டில் மக்கள் மீண்டும் குடியேறிக் கிட்டத்தட்ட 03 ஆண்டுகள் ஆகின்றன. இக்காலகட்டத்தில் அரச படைகளினால் இழைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் சம்பவங்கள் ஏராளம். அவை பெரும்பாலும் அம்பலத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. அதேவேளை அம்பலத்துக்கு வராத சம்பவங்கள் ஏராளம் உள்ளன. அவை அனேகமாக நம்மவர்களாலேயே நிகழ்த்தப்படுவதால் அம்பலத்துக்கு வருவதில்லை.

இன்றைய யாழ்ப்பாணத்தில் சாதாரண மக்களின் நாளாந்த வாழ்வைத் தீர்மானிப்பதில் ஆயுதப்படையினருக்கு அடுத்ததாக உள்ளவர்கள் அரச அதிகாரிகளும், யாழ். நகரப் பெரும் வர்த்தகர்களும்தான். இதிலும் குறிப்பாக வர்த்தகர்களின் பங்கு மிகமுக்கியமானது. தரை வழிப்பாதை இல்லாத சூழலில் கொழும்பிலிருந்து கப்பலில் பொருட்களைக் கொண்டுவரும் வர்த்தகர்கள் அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்யும் அரசர்கள்! (யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன் சங்கிலியன் மன்னிப்பானாக!)

கொழும்பில் ஒரு பொருள் விற்கும் விலையைவிட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ம்டங்கு விலைக்கு யாழ்ப்பாணத்தில் விற்பதற்குப் பதில் சொல்லவேண்டியவர்கள் இந்த வர்த்தகர்களே. ஆனால், வர்த்தகர்களோ தாம் விலையைக் கூட்டி விற்பதற்குப் பல்வேறு சாக்குப் போக்குகளைச் சொல்கின்றனர். ஆனால், அவர்கள் சொல்லும் காரணங்கள் ஒரு புறமிருக்க உண்மையை அறிய ஒரு சிறிய உதாரணத்தை மட்டும் பார்ப்போம்.

அதாவது கொழும்பில் 55ரூபா விலை அச்சிட்ட ஒரு சோடா யாழ்ப்பாணத்தில் 85ரூபாவுக்கு விற்கப்படுகின்றது. அதே வேளை கொழும்பில் 30 ரூபாவுக்குள் விலை குறிக்கப்பட்ட பிளேன் சோடாவும் யாழ்ப்பாணத்தில் 85ரூபாவுக்குத் தான் விற்கப்படுகின்றது. அதற்கு யாழ். வர்த்தகர்கள் சொல்லும் காரணம் என்னவோ?

இந்த விடயத்தில் விலையேற்றம், பதுக்கல் என்பவற்றைத் தடுக்கவேண்டிய யாழ். விலைக்கட்டுப்பாட்டு இலாகா ஒன்றும், செய்வதாய் இல்லை. இது சம்பந்தமாக ஒரு விலைக்கட்டுப்பாட்டு அதிகாரியுடன் கதைத்தபோது அவர் சொன்ன விடயங்கள் அதிர்ச்சியூட்டுவனவாக இருந்தன.

மீள் குடியேற்றத்தின் பின்னர் நீண்டகாலமாக யாழ். கச்சேரியில் விலைக்கட்டுப்பாட்டு இலாகாவுக்குக் காரியாலயம் ஒதுக்கவில்லையாம். அதேநேரத்தில் உயர் பதவியில் இருந்த சில அதிகாரிகளும் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தது இதற்கு ஒரு காரணமாம். அத்துடன் அந்த இலாகாவுக்குப் பொறுப்பான உயர் அதிகாரியும் நியமிக்கப்படவில்லையாம். அத்துடன் யாழ். குடாநாடு முழுவதும் சென்று பரிசோதனை செய்வதற்கு இன்றுவரை எவ்வித வாகன வசதியையும் கச்சேரி உயரதிகாரிகள் செய்யவில்லை. அதேநேரத்தில் பல்வேறு திணைக்களங்களில் தேவையற்ற வேலைகளில் வாகனங்கள் பயன்படுத்துவதைக் காணக் கூடியதாக உள்ளது. யாழ் நகரில் சைக்கிளில் சென்று கடைகளைப் பரிசோதிக்கும் போது பாதுகாப்புப் பிரச்சினை இருப்பதுடன் கடை உரிமையாளர்களின் கேலிப்பேச்சுக்கும் தாம் உள்ளாவதாகவும் அந்த அதிகாரி குறைப்பட்டுக் கொண்டார்.

கண்டபடி விலைகளை உயர்த்திப் பொதுமக்களைச் சூறையாடுவதைத் தடுப்பதற்காக "நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம்"ஒன்று சில காலத்திற்கு முன் அமைக்கப்பட்டாலும், அதனாலும் ஒன்றும் செய்ய இயலவில்லை என அந்த அமைப்பின் உறுப்பினர் குறிப்பிட்டார். காரணம் என்னவெனக் கேட்டபோது, யாழ்ப்பாணத்தில் உள்ள அரச யந்திரம் , அதாவது படைத்தரப்பும், அரச உயரதிகாரிகளும் ஒத்துழைக்காதவரை வர்த்தகர்களைக் கட்டுப்படுத்துவதோ, நுகர்வோரைப் பாதுகாப்பதோ முடியாத விசயம் என்றும் அவர் கூறினார். இங்கு இயங்கும் தமிழ்க் கட்சிகளும் இந்த விடயத்தில் பாராமுகமாக இருப்பதாக அவர் குறைபட்டுக் கொண்டார். காரணம் இவர்கள் எல்லோரும் பல்வேறு தேவைகளுக்கும் ,வர்த்தகப் பெருமக்களில் தங்கியுள்ளனர் என்று சுட்டிக்காட்டினார்.

ஆனால், தொழிற்சங்க இயக்க முக்கிய உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், "வாழ்க்கைச் செலவு உயர்வுக்காகவே" நாடுமுழுவதும் அடிக்கடி சம்பள உயர்வுகேட்டு தொழிலாளர்களும், அரச ஊழியர்களும் போராடுகின்றனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் எமக்கு வர்த்தகர்களுக்கெதிராகவும் போராட வேண்டியுள்ளது. இவ்விடயத்தில் அரச அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் பொதுமக்களின் அவல நிலையைக் கருதி நாம் அனைத்துத் தொழிற்சங்கங்களையும், பொது அமைப்புக்களையும் திரட்டி அரச அலுவலகம், மனிதஉரிமை ஆணைக்குழு அலுவலகம், வர்த்தக நிலையங்கள் என்பவற்றுக்கு முன்னால் சாத்வீகப் போராட்டங்களை ஆரம்பிக்கவுள்ளோம். அத்துடன் விலை அதிகரிப்புக்கெதிராகக் கூட்டுநடவ்டிக்கை எடுப்பது பற்றியும் ஆலோசித்து வருகின்றோம்" என்றனர்.

இது ஒரு புறமிருக்க, கூட்டுறவுச் சங்கங்களும், தனியார் துறைக்குப் போட்டியாக விலைகளை அடிக்கடி அதிகரித்தே விற்கின்றன. யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச வர்த்தக நிறுவனங்களான கூ.மொ.நி., சலுசல, அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம், கட்டிடப் பொருள் கூட்டுத்தாபனம் என்பனவற்றுக்குப் பொருட்கள் வருவது குறைவு என்றும், வருகின்ற அற்பசொற்ப பொருட்களும் பின் கதவால் தனிப்பட்ட வியாபாரிகளுக்குச் சென்றுவிடுகின்றன என்றும் முறையிடுகின்றனர்.

நாட்டின் ஏனைய பகுதிகளோடு ஒழுங்கான போக்குவரத்துத் தொடர்புகள் கொள்ள முடியாத நிலையில் யாழ்ப்பாண மக்களைப் பயணக் கைதிகளாக வைத்து அவர்களைச் சூறையாடும் வர்த்தகர்களையும், அதற்கு உடந்தையாகச் செயற்படும் அரச அதிகாரிகளையும் இனம் கண்டு தண்டிப்பது அரசாங்கத்தின் முழுமுதற் பணியாகும். இல்லையேல் மக்கள் அரசின் மீது வெறுப்படைவதும், வீதிக்கு வந்து போராடுவதும் தவிர்க்க இயலாத செயலாகும்.

**நக்கீரன், யாழ்ப்பாணம்.**

# அது அல்ல!

'சிதைவுகள்' நாவல்பற்றிய விமர்சனங்களுக்கு அந்நாவலை மொழிபெயர்த்த நண்பர் என்.கே. மகாலிங்கம் எழுதிய பதிலைச் 'சரிநிகர்' இதழில் (இல. 65) பார்த்தேன். அப்பதிலில் ஓர் இடத்தில் ".. ஒரு மொழிபெயர்ப்பு நூலுக்குத் தமிழில் இத்தனை மதிப்பீடுகள் வெளிவந்ததற்கு ஆபிரிக்காவின் நாவலொன்று முதன்முதல் தமிழுக்கு அறிமுகம் செய்யப்பட்டது என்பது..." என்று வருகிறது. இது தொடர்பாக ஒரு தகவலைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

'அலன் பேடன்' எழுதிய 'Cry the Beloved Country' என்ற நாவல், சி. ஸ்ரீநிவாசன் என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டு 'அன்னையின் குரல்' என்ற பெயரில் - ஆபிரிக்கநாவல் என்ற குறிப்புடன் 1957இல் வெளிவந்துள்ளது. 475 பக்கங்களை இந்நூல் கொண்டுள்ளது. ஏராளமான பிறமொழி இலக்கியப் படைப்புக்களைத் தமிழில் வெளியிட்டு அரும்பணியாற்றிய, தமிழகத்தைச் சேர்ந்த 'ஜோதி நிலையம்' நிறுவனமே இந்நூலையும் வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது.

**அ. யேசுராசா, யாழ்ப்பாணம்**

# அவரை....

மு.பொ. கடவுளைப் பாடினார். தனது கதையைப் பாடினார். தன் உள் மன விரிவுகளைக் கவியாக்கினார். கலை தொடர்பான தனது கோட்பாடு பற்றிச் சொன்னார். அவர் சமூகக் கொடுமைகளை எதிர்த்தார். மக்களின் போராட்டங்களை வரவேற்றார்.

ஆயுதமேந்திய விடுதலைப் போரையும் அவர் வாழ்த்திப் பாடினார்.அதற்காக அவர் தயங்கவில்லை. அதேவேளை அந்த விடுதலைப் போருள் நடந்த தவறுகளால் திசைமாறி அது போவதைப் பற்றியும் அவர் எழுதினார்.

**மக்களை வெறுமனே பார்க்க வைத்த**
**விடுதலைப் போரும்**

**விடுதலைக்காய் போராடும் மக்கள் முதலில்**
**விடுதலையுற்றிருக்க வேண்டும் என்பதை**
**அறியாத விடுதலைப் போரும் ...**

என்று தொடரும் அவர் கவிதை இப்படி முடிகிறது.

**எங்கோ ஓடி ஒழிந்த விடுதலை**
**எம்மை நோக்கி எள்ளுதல் போல்**
**காவோலைகளின் கலகலத்த நகைப்பு.**

அவருக்கு கவிதை வெறும் உணர்வின் மொழி அல்ல. அறிவும் உணர்வும் கலந்த ஒரு அனுபவத்தின் மொழி. அது சிந்தனைச் சிதறல்களாகவும் வெளிப்படுகிறது. உணர்வுப் பொதியாகவும் வெளிப்படுகிறது. சிலவேளைகளில் அவரது சிந்தனையும் உணர்வும் கட்டுப்பட மறுத்து கவிதை வடிவத்தை மீறி ஓடுகின்றன. கட்டுரை வடிவுக்கு நகர்கின்றன. வசனங்களாக மாறுகின்றன. மீண்டும் கவித்துவ வரிகளாகத் திரும்புகின்றன.

அவரது தீவிர சிந்தனைக்கு உதாரணமாக இத்தொகுப்பில் வரும் மூன்று போக்குகள் என்ற படைப்பை சொன்னால், அருமையான கவித்துவப் படிமங்களுடன் வெளிப்படும் அவரது உணர்வுக்கு உதாரணமாக ஒரு படகின் பாடலைக் குறிப்பிடலாம்.(பக்.87) படகின் சோகத்தினை வெளிப்படுத்தும் அந்தக் கவிதையின் அழகு யாரது மனத்தையும் இழக்கி விடும் ஆற்றல் மிக்கது...

**நன்று எவரேனும்/ நின்று உனக்காக**
**நெஞ்சுருகக் கண்டாயோ?/ ஆற்றுப்பெருக்காய்**
**அவிழ்கின்ற நிகழ்வுகளில் / அள்ளுண்டு**
**செல்லுமவர் / இங்கே பார் எமைச் சுமந்த**
**வள்ளம் இதுவென்றே உள்ளம் கசிந்தனரோ......**

என்று படகுக்காக சேர்ந்து கவலைப்படும் கவிஞர் அதற்கு நம்பிக்கையும் ஊட்டுகிறார்...

**ஆரை இனி நோவாய்?/ஆறியிரு.**
**ஆனாலும்/ பாடல் உனக்காக குயிலொன்று**
**பண்ணிசைக்கும்/ அருகே நெடுமரங்கள்**
**அன்புடனே பூ ச்சொரியும்/ ஓரம் கிளைத்துள்ள**
**மூங்கில் குனிந்துனக்கு ஈரநிழல்**
**பரப்பும்....போதாதோ இவை உனக்கு?**

கவிஞருக்கும் இது போதாது என்று தோன்றுகிறது. அதன் வேதனையைப் புரிந்தவராய் அதற்கு ஆறுதல் சொல்கிறார்.

**ஆறியிரு வாழ்க்கை அடைபடுமோ?**
**ஓர் நிகழ்வால்?**
**ஆயிரங்கள் ஊற்றெடுக்கும்**
**ஆற்றுப்படுக்கையிலே வேர்கொண்ட என்**
**படகே...**

கவிஞருக்கு அதற்கு ஏதாவது சொல்ல வேண்டும் என்ற துடிப்பு. வெறும் ஆறுதல் போதாது என்ற தவிப்பு. நல்ல வேளையாக அவருக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. உடனே சொல்கிறார்:

**விழித்தெழுவாய்: அங்கே பார்.**
**ஓர் மனிதன் உனைத் தேடித்**
**தூண்டிலுடன் வருகின்றான்.**

அதன் வாழ்வுக்கு ஒரு அர்த்தம் உருவாதலை மகிழ்ச்சியுடன் வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

கவிஞரின் கவித்துவச் சிறப்பிற்கு ஒரு எடுத்துக் காட்டு இது. இப்படிப் பலவற்றைச் சொல்லலாம்.

விரிவஞ்சி இவ்வளவுடன் நிறுத்திக் கொள்கிறேன்.

இறுதியாக, ஒன்றைச் சொல்லி முடிக்கின்றேன்.

மு.பொ.வின் காலிலீலை ஒன்றும் காலிலீலை அல்ல. காளியின் லீலையும் அல்ல. அது எம் ஒவ்வொருவரதும் அக்கறைக்குரிய ஒரு படைப்பு. அந்தப் படைப்பை படைத்ததற்காக பெருமையுடன் அவர் நிமிர்ந்து நிற்கலாம். அதற்காக அவருக்கு என் நன்றி - காலிக்கு அல்ல!

நன்றி - நூலகத்திட்டம்


# சரிநிகர்

இரு வாரங்களுக்கு ஒரு முறை

'சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"

-பாரதி

இல.19/4, 1/1, ,நாவல வீதி, நுகேகொட

தொலைபேசி / தொலைமடல்: 814859, 815003, 815004

Registred as a News paper in Sri Lanka


## வரலாற்று உரைகல்!

நாளை நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில், அடிதடிக்குள் அகப்படாமல் தமது வாக்குகளை எப்படி தாம் விரும்பியவர்களுக்குப் போடுவது என்ற அச்சத்துடன் தேர்தல் நாளை எதிர் பார்த்திருக்கும் வாக்காளர்களான தமிழ் வாசகர்கள் இதை எழுதிக்கொண்டிருக்கும் போது எமது கண்முன் தெரிகிறார்கள்.

இந்த ஐந்து மாகாண சபைகளும் தமிழ் முஸ்லிம் மக்களின் தாயகப் பிரதேசமான வடக்குக் கிழக்குக்கு வெளியேயுள்ள மாகாண சபைகள் தான் என்றாலும் கணிசமான தமிழ் வாக்காளர்களைக் கொண்ட மாகாணங்கள் .

இந்த மாகாணங்களில் அவர்களது வாக்குகளைப் பெற்று விடுவதில் தீவிரமான அக்கறையுடன் தமது பிரசாரங்களை எல்லா அரசியல் கட்சிகளும் செயற்பட்டு வருகின்றன. பதினேழு ஆண்டுகாலமாக ஆட்சியில் இருந்த போது இம்மக்களை சொல்லொண்ணாத் துயரத்தில் ஆழ்த்திய ஐக்கிய தேசியக் கட்சி முதல் இன்று சமாதானத்திற்கான யுத்தம் என்ற பேரில் நாட்டையே சுடுகாடாக, சிறுபான்மை இனங்களின் சிறைச்சாலையாக மாற்றிய மைத்துள்ள பொ.ஐ.மு. வரை இம் முயற்சியில் தீவிர அக்கறை காட்டுகின்றன. இந்தத் தேர்தலின் போது தமிழ் மக்கள் தாம் யாருக்கு வாக்களிப்பது என்று தமது மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருப்பது போலவும் அவர்களுக்கு வழிகாட்டுவது தமது கடமை என்பது போலவும் தமிழ்க்கட்சிகள் மக்கள் தமக்கு விருப்பமானவர்களுக்கு வாக்களிக்கலாம் என்று அறிவித்துள்ளன.

தமக்கு விருப்பமானவர்களுக்கு அல்லாமல் வேறு யார் யாரோவுடைய விருப்பங்களுக்காக வெல்லாம் தான் இத்தனை நாள் தமிழ் மக்கள் வாக்களித்தார்களோ என்ற கேள்வி இந்த இடத்தில் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. அவர்களை சுயாதீனமாக, சுதந்திரமாக தமது விருப்பப்படி வாக்களிக்க இத்தனை காலம் இக் கட்சிகள் அனுமதிக்கவில்லை என்பதை இதன் மூலம் ஒப்புக் கொண்டி ருக்கின்றன.

இந்தத் தேர்தல்கள் மக்களை அவர்களது ஜனநாயக உரிமையான வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்தி தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்காக நடாத்தப்படுவதாகக் கூறப்பட்ட போதும், எமது கடந்தகால அரசியல் வரலாற்றில் மக்களின் பிரதிநிதிகளாக உண்மையாகச் செயற்பட்டவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

தேர்தல் காலத்தில் பல்லைக் காட்டி தமக்கு வாக்களிக்கும்படி கோருவதும் வானத்தை வில்லாக வளைப்போம், உங்கள் வாக்குகள் எமக்கு வழங்கப்பட்டால், இந்த நாட்டிலே தேனும் பாலும் ஓடும் என்றெல்லாம் வாக்குறுதிகளை வாரி வழங்குவதும் கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலான அரசியல் வரலாற்றில் திரும்பத் திரும்பத் நடந்துவரும் விடயங்கள்.

அவைமட்டுமல்ல, தெரிவு செய்யப் பட்ட பிரதிநிதிகள் மக்களின் முதுகில் குத்திவிட்டு, மக்களுக்கு எதிரான மக்கள் விரோத செயல்களில் ஈடுபடுவதும் கூட திரும்பத் திரும்ப நடந்து வந்திருக்கின்றன. இவர்களது தேர்தல் கால பேச்சுக்களும் வாக்குறுதிகளும் வெறும் வார்த்தைகளே என்பது திரும்பத் திரும்பத் நிருபிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

கடந்த பொதுத் தேர்தலில் பொ.ஐ.மு. வாரி வழங்காத வாக்குறுதிகளா? சொல்லாத உறுதிமொழிகளா? சமாதானம், ஜனநாயகம், ஊழல் மோசடி ஒழிப்பு, அரசியல் உரிமைகள் என்று அவை ஒரு நீண்ட பட்டியல். ஆனால் அவை எவையும் இன்று வரை நிறைவேற்றப்படவில்லை.

மக்களும் உள்ளூராட்சித் தேர்தல் ஜனாதிபதித் தேர்தல் வரை ஒன்று மாறி ஒன்றாக எல்லாத் தேர்தல்களுக்கும் சளைக்காமல் வாக்களித்து வந்துள்ளார்கள். வாக்களித்து வாக்களித்து ஏமாற்றப்பட்டு வந்துள்ளார்கள்.

கடந்த வடமேல் மாகாண சபை தேர்தலின் போது நடந்த அடிதடிகளும் மிரட்டல்களும், அத்து மீறல்களும் இந்த அரசியல்வாதிகளின் நடத்தைகளை தெளிவாக இனங்காட்டின. ஜனநாயகம் பற்றியும், வாக்காளர் உரிமை பற்றியும் அவர்கள் பேசுவதெல்லாம் என்ன?

அவர்களிடம் இந்த ஜனநாயகம் பற்றிய எந்த நம்பிக்கையும் கிடையாது. அதற்கு அவர்களிடம் எந்தக் கௌரவமும் கிடையாது. இருப்பதெல்லாம் துப்பாக்கி மற்றும் ரவுடி பலத்தைப் பாவித்து மக்களை மிரட்டி தாம் அதிகாரத்தைப் பிடுங்கிக் கொள்வது தான்.

இப்போதும் அதே அந்த நபர்கள் தான் தேர்ல் முழக்கத்துடன் உங்கள் வாக்குகளைக் கேட்கிறார்கள். அவர்களில் ஒருவரையோ ஒரு சிலரையோ தெரிவு செய்யத்தான் நீங்கள் வாக்களிக்கப் போகிறீர்கள்.

உங்கள் வாக்குகளை நீங்கள் போட்டால் என்ன போடாவிட்டால் என்ன அவர்கள் தாம் வெற்றி பெறுதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொண்டு நமட்டுச் சிரிப்புடன் உங்களிடம் வாக்குக் கேட்கிறார்கள்.

உங்கள் பெயரால் தாங்கள் அதிகாரத்திற்கு வர ஒரு சாக்குக் கேட்கிறார்கள். அவ்வளவு தான்.

இந்த மாகாண சபை தேர்தல் தமிழ், முஸ்லீம், மலையக மக்களின் அரசியல் உரிமைக்கு, அதிகாரத்திற்கு எந்த விதத்திலும் பயனுள்ள ஒன்று அல்ல. இது ஒரு சில தனிப்பட்ட நபர்களின் அதிகாரத்திற்கு உதவுகின்ற ஒன்று மட்டுமே என்பது புதிதாக சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

இந்தத் தேர்தல் தமிழ், முஸ்லீம் மலையக மக்களுக்கு இரண்டு விதமான தப்பபிப் பிராயத்தை ஊட்டி நிற்கிறது.

ஒன்று, மாகாணசபை அதிகாரம் அவர்களது அரசியல் சமூக வாழ்வியல் உரிமைகட்கு உதவுகின்றது என்பது. இரண்டாவது இம்மாதிரி விடயங்களை தேர்தல்கள் வழங்கிவிடும் என்பது.

இதை விளங்கிக் கொள்வது ஒவ்வொரு வாக்காளர்களதும் கடமை. குறிப்பாக தமிழ் முஸ்லீம், மலையக வாக்காளர்களது கடமை. ஏனென்றால் இந்த மாயையில் தான் அவர்கள் கடந்த காலம் முழுவதும் தமது எல்லா உரிமைகளையும் இழந்து விட்டிருக்கிறார்கள்.

இவ்வளவையும் சொன்ன பின், உள்ளதற்குள் வல்லிசாகப் பார்த்து யாருக்காவது வாக்களிக்க வேண்டும் என்று யாராவது கருதினால், அவர்களது நம்பிக்கைக்கு எமது வாழ்த்துக்கள். நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை கொண்டிருப்பதற்காக யாரும் யார்மீதும் குறை காண முடியாது.

ஆனால், வரலாறு, அது ஒன்று மட்டும் தான் இந்த நம்பிக்கைகளை உரசிப்பார்க்க உதவும் ஒரே ஒரு உரைகல்.

அவ்வளவு தான்!

## செத்த புஞ்சி பண்டாவுக்கு லொக்கு பண்டா புள்ளடி !

" யார் என்ன சொன்னாலும் போஸ்டர், பனர், கட்டவுட் போடுவதை மட்டம் நிறுத்த வேண்டாம். வெளிநாடு சென்ற, ஊரை விட்டுச் சென்றவர்களின் பட்டியல்களைத் தயாரிக்க வேண்டும். புஞ்சி பண்டா செத்துப் போயிருந்தால் லொக்கு பண்டாவை வைத்தாவது அவரது வாக்கைப் போட வைக்க வேண்டும்." எனப் புத்தளம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் த. மு. தசநாயக்க வறக்காப்பொல - கல்கமுவ சமூர்த்தி ஊக்குவிப்பாளர்கள் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலின் போது செயற்படவேண்டிய விதம் குறித்து ஆலோசனை வழங்கி 26. 03. 1999 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்துள்ளார். அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர், " என்னை இங்கு வருமாறு அழைப்பு விடுத்தவர் அமைச்சர் ஒருவரே, வேறு எவரதும் ஆலோசனைகளும் எனக்குத் தேவையில்லை. வெளிநாடு சென்ற, இறந்தவர்களின் வாக்குகளும் பெட்டியுள் சேர்க்கப்பட வேண்டும். லொக்கு நிலமே இல்லாவிட்டால் பொடி நிலமேயைக் கொண்டாவது நாங்கள் அவற்றைப் போட வைக்க வேண்டும். எதிர்வரும் 06 ஆம் திகதி முடிவடையும் வரை சமூர்த்தி அட்டைகளை வழங்க வேண்டாம். தேவையேற்படுமானால் சமூர்த்தி வங்கிகளை மூடினாலும் பரவாயில்லை " என நீளமாக விபரித்துக் கூறினார். ஏற்கெனவே 24 மணி நேரம் பூராவும் அரசாங்கத்திற்காகத் தேர்தல் இயக்கத்தில் ஈடுபட வேண்டியுள்ள சமூர்த்தி ஊக்குவிப் பாளர்கள் இந்த ஆலோசனைகள் தொடர்பாகத் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளார்கள்.

*- எஸ். எஸ்.*

## கொழும்பில் தமிழர் பெருக்கம் திவயின செய்தி!

கொழும்பு நகரத்தினுள் உள்ள சிங்கள மக்கள் 40% வரை குறைவடைந்து உள்ளதாக நகரசபையின் மதிப்பீட்டுத் திணைக்களத் தகவல்கள் வெளிப்படுத்துவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, அதிக வரிப் பண அறவீடு, வீதிகள். அகலமாக்கப்படுதல் காரணமாகப் பாரம்பரிய வீடுகள் இல்லாது போதல் மற்றும் சிங்களவர்களின் பழைய வீடுகள் இருந்த இடங்களில் வீடமைப்புத் திட்டங்கள், பெரும் கடைப் பல் கூட்டுத் தொகுதிகள் அமைக்கப்படல் போன்ற விடயங்கள் காரணமாகச் சிங்கள மக்கள் குறைவடைந்துள்ளதாகக் கூறியுள்ளது. கடந்த 20 வருடங்களினுள் நகரத்தின் சிங்கள மக்கள் படிப்படியாகக் குறைவடைந்து அன்னிய இனங்களின் வளர்ச்சியொன்று ஏற்பட்டுள்ளது. 10 வருட காலத்தினுள் வட கிழக்கு மற்றும் தோட்டப்புறங்களிலிருந்து வந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொழும்பில் நிரந்தரமாகக் குடியேறினர். அவர்களைக் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளைத் தமிழ் ஆயுதக் குழுக்களும், தமிழ் அரசியல்வாதிகளும் எடுத்துள்ளனர். சிங்களவர்களுக்குச் சொந்தமான பெரும் எண்ணிக்கையிலான வீடுகளின் இப்போதைய உரிமையாளர்கள் முஸ்லிம், தமிழ் வர்த்தகர்களேயாவர். இற்றைக்குப் பல வருடங்களுக்கு முன்பு ஒரு சில குறிப்பிட்ட பிரிவுகளில் மட்டும் குடியிருந்த அந்நிய இனத்தவர்கள் இப்போது முழுநகர் பூராவும் வியாபித்து உள்ளனர் எனத் தெரியவந்துள்ளது எனவும் அது குறிப்பிட்டுள்ளது.

## தொல்லையோ தொல்லை!

வலயக் கல்வித் திணைக்கள முறை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து திருகோணமலை கல்வித் திணைக்களத்தில் பெரும் குளறுபடிகளாகவே இருந்து வருகிறது. கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்த காலத்திலே தனது கடமையைச் சரிவரச் செய்ய முடியாது தத்தளித்த அனுபவமும், ஆற்றலும் குன்றிய ஒருவர் தற்பொழுது வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார். இதனால் இங்கு பகிஷ்கரிப்புகளுக்கும், போராட்டங்களுக்கும் குறைவே இல்லை. இடர்காலக் கொடுப்பனவுகள், அதிபர் சம்பள அதிகரிப்புகள் அடங்கிய ஏனைய கோரிக்கைகளை முன்வைத்துப் பல பகிஷ்கரிப்புக்கள் அதிபர், ஆசிரியர்கள், தொழிற்சங்கங்கள் ஆகிய மட்டத்தில் இங்கு இடம்பெற்று வருகின்றன. "செய்ய முடியாவிட்டால் பதவிகளைத் தூக்கி எறிந்துவிட்டு வீடு போய்ச் சேருங்கள்" என்று கூறினாலும் அட்டைகள் போல் பதவிகளில் ஒட்டிக்கொண்டிருப்பவர்களால் தொல்லையோ தொல்லை.

## வெறும் புஷ்வாணம் தானோ?

வடக்குக் கிழக்கு மாகாணத்திற்கு புதிய ஆளுர் நியமிக்கப்பட்ட பின் பல நிர்வாக மாற்றங்கள் ஏற்படுமென மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் எல்லாம் வெறும் புஸ்வாணம் தான். இந்த ஆளுநர் , " நடமாடும் சேவை" என்று ஒரு புதிய கூத்தைக் காட்ட ஆரம்பித்திருக்கிறார். இதனால் அதிகாரிகளின் பாடு உல்லாசத்திற்குக் குறைவே இல்லை. கொழும்புக்குத் தான் அதிகாரிகள் தேவை இல்லாமல் போய்வரத் தடை போட்டாலும் உத்தியோக ரீதியில் மேற்கொள்ளும் சவாரி, சவாரிதான். ஆரம்பத்தில் பொதுமக்களின் கடிதங்களுக்கு ஆளுநரின் அலுவலகத்திலிருந்து ஒரு வாரத்திற்குள் கடிதம் கிடைத்தமை பற்றியாவது அறியக்கிடைத்தது. இப்பொழுது அதுவும் இல்லை. சில புகார்கள் ஆளுநரின் தனிப்பட்ட பெயருக்கே முகவரியிடப்பட்டுள்ளன. எங்கே அதற்காவது பதில் கிடைக்கிறதா? பார்ப்போம் என்கிறார்கள் புகார்களை அனுப்பி வைத்தவர்கள்.


### சரிநிகரின் சந்தாதாரராகுங்கள்!

சரிநிகருக்கு சந்தாதாரர்களைச் சேர்க்கும் ரிக்கற்றுக்கள் இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. இந்த ரிக்கற்றுக்கள் கிடைக்காதவர்கள் கூட ஏப்ரல்31ம் திகதிக்கு முன்பதாக சந்தாதாரராகச் சேர்வதன் மூலம் 33 வீத விலைக்கழிவுச் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் . ரூபா 200 க்கான காசோலை அல்லது காசுக்கட்டளையை **MIRJE** என்ற பெயருக்கு எழுதி அனுப்பி வைக்க வேண்டியது தான். அனுப்ப வேண்டிய முகவரி : விநியோக முகாமையாளர் , சரிநிகர் **19/4, 1/1,** நாவல வீதி. நுகேகொட.





வெளியிடுபவர்: ச.பாலகிருஷ்ணன் , இல.18/2, அலோ சாலை, கொழும்பு 03, அச்சப்பதிவு:பிறின்ற்இன், இல.07,கெஹட்டிய இடம், சிறிமல் உயன, இரத்மலானை. 1999.04.02